
janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 86 ▸ 2023 நவம்பர் 12 - நவம்பர் 18 ▸ விலை: ரூ.15 ▸ 16 பக்கங்கள் ▸ இதழ் 32




## இந்திய விவசாய தொழிலாளர் சங்கத்தின் 15 வது

# எழுச்சிமிகு பாட்னா மாநாடு

**இந்திய நாட்டின் விடுதலைப் வரலாற்றிலும் கம்யூனிஸ்ட் இயக்க வரலாற்றிலும் தனி முத்திரை பதித்து களம் கண்டதும், நூற்றுக் கணக்கான தோழர்களின் அளப்பரிய தியாக வாழ்க்கை வரலாறுகளையும் தாங்கி நிற்கும் பதிவுகளை கொண்டதாகும் பீகார் மாநிலம்.**

பீகார் மாநிலத்தில், அதன் தலைநகரான பாட்னாவில் இந்திய விவசாய தொழிலாளர் சங்கத்தின் 15 வது தேசிய மாநாடு மிகுந்த எழுச்சியோடு நவம்பர் 2 ஆம் தேதி தொடங்கியது.

நாட்டின் மக்கள் தொகையில் 70 சதவீதம் பேர் வாழ்வாதாரம் பெற்று வரும் விவசாயத் தொழில் குறித்தும், விவசாய உற்பத்தியின் உயிர் நாடியாக உள்ள விவசாய தொழிலாளர்களின், வாழ்க்கை நிலை குறித்தும், பரிசீலித்து, எதிர்காலத்தில் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை தீர்மானிப்பது . சமூக. பொருளாதார வாழ்வில் முன்வந்துள்ள சவால்களை எதிர்கொள்ளும் வலிமையுள்ள சங்க அமைப்பை விரிவுபடுத்தி, வலுப்படுத்தவும் முடிவுகளை மேற்கொள்வது. அரசியல் தளத்தில், வகுப்புவாத, மதவெறி சக்திகளை ஒன்றிய அரசின் அதிகாரத்தில் இருந்து வெளியேற்ற உழைக்கும் மக்களை அணி திரட்டுவது என பல்வேறு கடமைகள் குறித்து முடிவெடுக்கும் மாநாடாக பெரும் எழுச்சியுடன் நவம்பர் 2 தொடங்கி 5 தேதி வரை நடைபெற்றது.

பாட்னா நகரம் முழுவதும் செங்கொடிகள் அசைந்தாடி வரவேற்றன. முக்கிய தெருக்களில் வரவேற்பு வளைவுகள், வரவேற்பு தட்டிகள் என செம்மயமாக காட்சியளித்தது.





### மாபெரும் பேரணி

மாநாட்டை சிறப்பிக்கும் வகையில் மாநிலம் முழுவதும் இருந்து 2 லட்சத்துக்கு மேற்பட்ட பெரும் மக்கள் திரண்டிருந்தனர். மேலும் மக்கள் சாரை சாரையாக பாட்னா நகரத் தெருக்களில் அணிவகுத்து வந்தனர்.

மாபெரும் பொதுக்கூட்டத்திற்கு கட்சியின் மாநிலச் செயலாளர் ராம் நரேஷ் பாண்டே தலைமை தாங்கினார். பீகார் மாநில அரசின் முதலமைச்சரும், ஐக்கிய ஜனதா தளத்தின் தேசியத் தலைவருமான நிதிஷ்குமார் சிறப்புரையாற்றினார்.

கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா, ஏ.ஐ.டி.யூ.சி அகில இந்திய பொதுச்செயலாளர் அமர்ஜித் கவுர், ராமகிருஷ்ண பாண்டா உள்பட ‘இந்தியா’ கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்டு உரை ஆற்றினர்.

தொடர்ச்சி 4ஆம் பக்கம்



■ நா. பெரியசாமி



■ குல்சார் சிங் கொரியா

### நிர்வாகிகள் தேர்வு

மாநாட்டில் 125 பேர் கொண்ட பொதுக் குழுவும், 35 பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் ஒரு மனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

தேசியத் தலைவர்:
**நா. பெரியசாமி**

பொதுச் செயலாளர்:
**குல்சார் சிங் கொரியா**

பொருளாளர்:
**தரியாப் சிங் கஷ்யாப்**

துணைத்தலைவர்கள்:
**கே.இ.இஸ்மாயில்** (கேரளா)
**அ.ராமமூர்த்தி** (புதுச்சேரி)
**சிவகுமார் கன்வீர்** (மகாராஷ்டிரா)
**தபன் கங்குலி** (மேற்குவங்கம்)
(ஒரு இடம் பின்னர் நிரப்புவது)

செயலாளர்கள்:
**விஜயேந்திர சிங் நிர்மல்** டெல்லி மையம்
**பி.கே. கிருஷ்ணன்** (கேரளா)
**ஜானகி பஸ்வான்** (பீகார்)
**தேவி குமாரி** (பஞ்சாப்)
**பாலா மல்லேஸ்** (தெலுங்கானா)
**பூல்சந்த் யாதவ்** (உத்திரபிரதேசம்)
**ஆவுலா சேகர்** (ஆந்திரா)

மத்திய நிர்வாகக் குழுவில் தமிழ்நாட்டில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்
**அ. பாஸ்கர்**
**பி.கணேசன்**


தேசியக் குழுவிற்கு தமிழ்நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்
1. **இரா. முத்தரசன்**
2. **அ.பாஸ்கர்**
3. **பி.கணேசன்**
4. **க.மாரிமுத்து** எம்.எல்.ஏ.
5. **ஏ.வரதராஜன்**
6. **வி.பி.பழனிச்சாமி**
7. **ஜெ.பிரதாபன்**
8. **சு.மகேந்திரன்**
9. **சி.பக்கிரிசாமி**
10. **கே.பாஸ்கர்**
11. **கே. ராஜா**
12. **எஸ். சுகன்யா**





கட்சிக் கடிதம்

# அமலாக்கத்துறை, வருமான வரித்துறைகளை வேட்டை நாய்களாக்குவதா?



போர்க்குணம் மிக்க தோழர்களே!

**நாட்டை ஆளும் மாமன்னர் நரேந்திர மோடி குறித்து யாரும், எவரும் விமர்சிக்க கூடாது. ஏனெனில், அவர் சாதாரண மனிதர் அல்லர். மகாபாரதத்தில் அநீதிகளை அழிக்க கிருஷ்ணர் அவதாரம் எடுத்து வந்ததைப் போன்று, அநீதிகளை அழிப்பதற்கென்றே ஆர்எஸ்எஸ் ஆல் அனுப்பப்பட்ட அவதாரம்.**

நாடு விடுதலை பெற்று 75 ஆண்டுகள் நிறைவுற்ற நிலையில்; நாட்டின் விடுதலைப் போரில் குடும்பத்துடன் பங்கேற்ற, 9 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்த, நாட்டு மக்களின் நன்மதிப்பையும் ஆதரவையும் பெற்ற ஜவஹர்லால் நேரு தொடங்கி, வாஜ்பாய் உட்பட பலரும் நாட்டின் பிரதமர் பொறுப்பை வகித்துள்ளனர்.

சத்திரிய வம்சத்தைச் சேர்ந்த வி.பி.சிங் கூட நாட்டின் பிரதமராக இருந்தார்.

எந்த ஒரு பிரதமரும் தன்னை நாட்டின் மன்னராகவோ, மாமன்னராகவோ கருதியது இல்லை.

ஒவ்வொரு பிரதமரும் அரசியலமைப்பு சட்டத்திற்கு மதிப்பளித்தும்; ஜனநாயகத்தை மதித்தும், மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்தும் செயல்பட்டு வந்தனர்.

நாட்டின் வளர்ச்சி ஏற்றத்தாழ்வின்றி, சீரான முறையில் அனைத்து மாநிலங்களும் வளர்ச்சி பெற வழிவகை செய்யப்பட்டது. அதற்கென உருவாக்கப்பட்ட ஐந்தாண்டு திட்டக் குழு சீரும் சிறப்புமாக செயல்பட்டு வந்தது.

அந்த அமைப்பு முதன் முறையாக மோடி ஆட்சியில் கலைக்கப்பட்டது. நிதி ஒதுக்கீட்டில் பாரபட்சம்; பாஜக ஆளும் மாநிலங்களுக்கு அதிக நிதி; மற்ற மாநிலங்களுக்கு குறைவான நிதி; இப்படி ஜனநாயகத் தன்மையற்ற, சர்வாதிகார முறையை மோடி பின்பற்றுகிறார்.

நாட்டின் பிரதமர், நாடு முழுமைக்குமான தலைவர் என்ற உயர் நிலையில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, சார்பு நிலையினை மேற்கொண்ட சுயநலவாதியானார்.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல் மேற்கண்ட ஒரு உதாரணம் போதுமானது.

மோடி, பிரதமர் என்ற நிலையில் செயல்படாமல், ஆர்எஸ்எஸ் அமைப்பின் ஆணைகளை ஏற்று, அட்சரம் பிறழாமல் செயல்படுத்தி, தனக்கு கிடைத்திட்ட அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி வருகின்றார்.

ஒன்றிய அரசு நாட்டின் ஒட்டுமொத்த 142 கோடி மக்களுக்கான அரசு என்ற நிலை மாறி, அதானி, அம்பானி என்ற விரல் விட்டு எண்ணக்கூடிய நபர்களின் நலன் சார்ந்த அரசாக, கடந்த 10 ஆண்டு காலமாக செயல்பட்டு வருவதை நாட்டு மக்கள் நன்கு அறிந்துள்ளனர்.

நாடு வளர்கின்றது; வளர்ச்சியை நோக்கி நடை போடுகின்றது என்று நாள்தோறும் மோடி முழக்கமிடுகின்றார். ஆனால் அவரது முழக்கம் உண்மைதான். அவரது முழக்கத்தின்படி நாட்டு மக்களின் வாழ்க்கையில் முன்னேற்றமில்லை. சொல்லப்போனால், மோடி ஆட்சிக்கு வருவதற்கு முன்பு இருந்ததைவிட மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

யாருக்கு முன்னேற்றம்? உலக முதலாளிகள் பட்டியலில் முதன்மை இடத்தைப் பெற்றவர் அதானியா? அல்லது அம்பானியா? என்பதுதான் மோடியின் ஆட்சியில் வளர்ச்சியாக உள்ளது.

2014 மற்றும் 2019ல் நடைபெற்ற நாடாளுமன்றத்திற்கான பொதுத் தேர்தலில் நரேந்திர மோடி கொடுத்த வாக்குறுதிகளில் ஒன்றைக்கூட நிறைவேற்றவில்லை.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, நாடு போற்றிப் பாதுகாத்து வரும் மதச்சார்பின்மை என்கிற மகத்தான கொள்கைக்கு மோடியின் ஆட்சியில் என்றுமில்லாத நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

அரசியலமைப்புச் சட்டத்தை துச்சமென மதித்து, குப்பைக் கூடையில் வீசியெறிந்து விட்டு, மக்களால் நிராகரிக்கப்பட்ட மனுதர்மத்தை அரசியலமைப்புச் சட்டமாக்கிட அனைத்து நடவடிக்கைகளையும் மோடி அரசு மேற்கொண்டு வருகிறது.

சுருங்கக் கூறின், நாட்டை ஜனநாயகப் பாதையில் இருந்து திசை மாற்றி சர்வாதிகார, பாசிச ஆட்சியை உருவாக்கிட அனைத்து முயற்சிகளும் மின்னல் வேகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கல்விக் கொள்கையை மாற்றி, தேசிய கல்விக் கொள்கை என்கிற பெயரால் குலக்கல்வி முறையை புகுத்துதல்.

ஒரே நாடு; ஒரே மொழி
ஒரே நாடு; ஒரே தேர்தல்
ஒரே நாடு; ஒரே வரி (ஜிஎஸ்டி)
ஒரே நாடு ஒரே மதம்

என ஒரே.. ஒரே.. என்று கூறி, இறுதியாக ஒரே நாடு, ஒரே கட்சி, ஒரே தலைவர் என்ற சர்வாதிகாரத்தின் உச்சத்திற்கு நாட்டைக் கொண்டு செல்லும் ஆர்எஸ்எஸ் கூட்டத்தின் நயவஞ்சக நாடகத்தை, நாட்டு மக்களுக்கு உணர்த்திட, விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும். வரும் 2024ல் நடைபெற உள்ள நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் பாஜக மீண்டும் ஆட்சியில் அமரக்கூடாது. அமர்ந்தால் அது நாட்டிற்கு ஏற்படும் பேராபாயம் என்பதை உணர்ந்த கட்சிகள், ஒருங்கிணைந்து உருவாக்கி இருப்பதுதான் 'இந்தியா' கூட்டணி.

இந்த கூட்டணிக்கு மக்கள் மத்தியில் ஆதரவு உள்ளது. வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகரித்து வருகின்றன. இது நாள்தோறும் வளர்கின்றது. பாஜக தோற்பது உறுதியாகி வருகின்றது. மூன்றாம் முறை ஆட்சி என்பது ஒருபோதும் கிடையாது என்கிற நிலை நாடு முழுவதும் எதிரொலித்து வருகின்றது.

இத்தகைய உண்மையை நம்மைக் காட்டிலும் மோடியும் அவரது சகாக்களும் அறியவும் உணரவும் ஏராளமான வாய்ப்புகள் உள்ளன.

உதாரணத்திற்கு, பாஜக தலைமை தாங்கி வழிநடத்தும் தேசிய ஜனநாயக கூட்டணியில் அங்கம் வகித்த கட்சிகள் ஒவ்வொன்றாக கழன்று கொண்டு இருக்கின்றன என்பது மட்டுமல்ல, இன்றும் அக்கூட்டணியில் தொடர்கின்ற கட்சியின் மிசோரம் மாநில முதலமைச்சர், "மோடியுடன் இணைந்து பிரச்சாரம் செய்ய மாட்டேன்" என்று பகிரங்கமாக அறிவித்துள்ளார். அந்த மாநிலத்தில் பரப்புரைக்கு மோடி செல்லவே முடியவில்லை.

இவைகளை கண்டுணர்ந்த மோடி கும்பல் ஆத்திரத்தில் உள்ளது. இந்த நாட்டை தாங்கள் மட்டுமே ஆள வேண்டும். தங்களின் விருப்பப்படி ஆள வேண்டும். நாட்டை ஆள்வது மட்டுமல்ல; அகண்ட பாரதத்தை உருவாக்கிட வேண்டும். அகண்ட பாரதம் எனில், பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், ஆப்கானிஸ்தான், இலங்கை என அனைத்து நாடுகளையும் ஒருங்கிணைத்து ஒரே நாடு, அதுதான் பாரத நாடு என்கிற கனவில் மண் விழுந்து விட்டதே என்கிற கோபத்தில், கடல் போல கொந்தளிக்கின்றது மோடி கூட்டம்.

இதற்கு மாற்று வழி இல்லையா? ஏன் இல்லை, இருக்கிறது. வருமான வரித்துறை, அமலாக்கத் துறை இவ்விரு அமைப்புகள்தான் பாஜகவின் மிக மிக நெருக்கமான கூட்டணி. இவ்விரு அமைப்புகளைக் கொண்டு தன்னை எதிர்ப்போரை, விமர்சிப்போரை, அடுத்து வரும் தேர்தலில் பாஜகவை தோற்கடிப்போம் என உறுதிப்பூண்டுள்ளோரை பலவீனப்படுத்திட பாஜக பயன்படுத்தி வருகின்றது.

வருமான வரித்துறையும், அமலாக்கத் துறையும் வேட்டை நாய்கள் போன்று செயல்படக்கூடிய அவலத்திலும் அவலம் ஏற்பட்டுள்ளது.

வேட்டை நாய்களை வளர்க்கும் எஜமானனின் கட்டளையை அவை நிறைவேற்றும்.

அத்தகைய வேட்டை நாய்களாக வருமான வரித்துறையும் அமலாக்க துறையும் ஆக்கப்பட்டு விட்டதா? ஆம், அப்படித்தான் செயல்படுகின்றன.

ஆர்எஸ்எஸ் அமைப்பை, அதன் அரசியல் கருவியான பாஜகவை, அதன் ஆட்சியை கொள்கை ரீதியாக எதிர்த்துப் போராடுவதில் திமுக முதன்மை நிலையில் உள்ளது. குறிப்பாக அக்கட்சியின் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் கட்சிக் கூட்டங்கள் மட்டுமின்றி, அவர் கலந்து கொள்ளும் திருமண நிகழ்ச்சிகள் அனைத்திலும் மணமக்களை வாழ்த்திப் பேசுவதுடன், வகுப்புவாத சக்திகளால் நாட்டிற்கு ஏற்பட்டுள்ள பேராபத்து குறித்து விளக்கம் அளித்துப் பேசி வருகிறார். வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பாஜக கூட்டணி தோற்கடிக்கப்பட வேண்டும் என்பதில் அவர் உறுதியாக உள்ளார்.




பாஜகவால், மோடி கும்பலால் அரசியல் ரீதியாக திமுகவை எதிர்கொள்ள இயலவில்லை. முதலமைச்சர் முன்வைக்கும் விளக்கங்களுக்கு விடையளிக்க முன்வராமல், குறுக்கு வழியில் திமுகவை பழிவாங்க வேட்டை நாய்களைப் பயன்படுத்துகின்றது.

திமுகவில் சிறப்பாக செயல்பட்டவர். இரண்டு மாவட்டங்களுக்குப் பொறுப்பேற்று, உள்ளாட்சித் தேர்தலில் திமுக கூட்டணியை அந்த மாவட்டங்களில் மகத்தான வெற்றி பெறச் செய்தவர். அமைச்சர் பொறுப்பையும் செவ்வனே நிறைவேற்றி வந்தார். அவர் செய்த பெரும் தவறு, பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை கையில் கட்டியிருக்கும் கடிகாரத்தின் விலை என்ன? எங்கு வாங்கினீர்கள்? என்று கேட்டார். விளைவு, சிறையில் உள்ளார். ஜாமீனில் கூட வர முடியவில்லை.

திமுகவின் மற்றொரு முக்கியமான செயல் வீரர், சிறந்த பேச்சாளர், நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகத்ரட்சகன் வீடு, நிறுவனங்களில் வேட்டை நாய்களின் சோதனை.

திமுகவின் முக்கிய தலைவர்களில் ஒருவர், ஆற்றல் மிக்கவர். அவருக்கு அளித்திடும் பொறுப்புகளில் முத்திரை பதிப்பவர், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு. அவருடைய வீடு, நிறுவனங்கள் அனைத்திலும் வேட்டை நாய்கள் புகுந்து சோதனை.

மீதமுள்ள நான்கு மாத காலத்திற்குள் மற்ற திமுக அமைச்சர்களின் வீடுகளுக்கு வேட்டை நாய்கள் செல்லும் என்பது மோடி கும்பலுக்குத் தெரியும்.

பாஜகவை எதிர்த்து நிற்பதில், டெல்லியை ஆளும்

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

# கம்யூனிஸ்ட் கட்சி இதழ்களுக்கான டிஜிட்டல் பயிலரங்கம்



இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தேசியக் குழுவின் அதிகாரபூர்வ பத்திரிகைகளான நியூ ஏஜ் மற்றும் முக்தி சங்கர்ஷ் ஆகியவற்றின் டிஜிட்டல் மயமாக்கம் மற்றும் இதழியல் பயிலரங்கம் அக்டோபர் 30, 2023 அன்று அஜாய் பவனில் நடைபெற்றது. நிகழ்ச்சியை பொதுச் செயலாளர் டி ராஜா தொடங்கி வைத்தார்.

டிஜிட்டல் மயமாக்கலின் முக்கியத்துவம் குறித்தும், கட்சியின் வளர்ச்சிக்கு அது எவ்வாறு பங்களிக்கும் என்பது குறித்தும் அவர் பேசினார்.

சிபிஐ தேசிய செயலாளரும் நியூ ஏஜின் ஆசிரியருமான பினாய் விஸ்வம் பயிலரங்கின் குறிக்கோள் மற்றும் இலக்குகள் பற்றிய சுருக்கமான அறிமுகத்தை வழங்கினார். கட்சியின் தேசிய செயற்குழு உறுப்பினர்கள் ராமகிருஷ்ண பாண்டா, டாக்டர் பி.கே. காங்கோ, என்.என். ஓஜா, டாக்டர் கே.நாராயணா, தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் கிரிஷ் சர்மா, நியூ ஏஜ் துணை ஆசிரியர் கிருஷ்ண ஜா ஆகியோரும் பயிலரங்கில் உரையாற்றினர்.

முதல் அமர்வில், கட்சியின் கல்வித்துறை முதல்வர் அனில் ரஜிம்வாலே கம்யூனிஸ்ட் இயக்கங்கள் மற்றும் இயக்கங்களின் வளர்ச்சியில் பத்திரிகைகள் மற்றும் ஊடகங்களின் பங்கு குறித்து விவாதித்தார். டிஜிட்டல் மயமாக்குவதற்கான அவசரத்தை அவர் வலியுறுத்தினார்.

அடுத்த அமர்வு முக்தி சங்கர்ஷ் பத்திரிகையாளர் ஜெகதீஷ் சந்திரா தலைமையில் நடைபெற்றது. ஊடகத்தில், குறிப்பாக கம்யூனிஸ்ட் ஊடகத்தில் கலையின் பங்களிப்பு குறித்து அவர் பேசினார். கம்யூனிஸ்ட் இயக்கம், இடதுசாரி நிகழ்வுகள் ஆகியவற்றின் ஓவியங்கள், இயக்கங்களைப் பரப்புரை செய்ய பயன்படுத்தப் பட்ட கலாபூர்வமான சுவரொட்டிகள் ஆகியவற்றை காட்சிப் படுத்தி விளக்கினார்.

தொடர்ந்து நியூ ஏஜ் வார இதழின் பத்திரிகையாளரான ஆலன் பால் வர்கீஸ் பேசினார். கட்சியின் டிஜிட்டல் அரங்கை முன்னிலைப்படுத்த வேண்டிய தேவையை உணர்த்திய அவர், கட்சியின் முக்கியமான தலைவர்களையும் அவர்களது மகத்தான பங்களிப்புகளை பற்றியும் இளைய தலைமுறை அறியாமல் இருப்பதை அவர் சுட்டிக் காட்டினார். தலைவர்களின் பணிகள், சாதனைகள் குறித்து இன்றைய தலைமுறைக்கு எடுத்துச் சொல்வதன் அவசியத்தை அவர் அழுத்தமாக வலியுறுத்தினார்.

பயிலரங்கில் நிறைவு அமர்வுக்கு முக்தி சங்கஷ் ஆசிரியரான மகேஷ் குமார் ரதி தலைமையேற்றார். கட்சியின் வருங்கால உத்திகளையும், அதனை வலிமைப்படுத்த கட்சிக்கான டிஜிட்டல் அரங்கையும் மற்ற வெகுஜன அரங்குகளையும் உறுதியோடு கட்ட வேண்டியதன் இன்றியமையாமையை அவர் விளக்கினார்.

இந்திய விடுதலைக்கு இன்றைய காலத்திலிருந்து கம்யூனிஸ்ட் இதழ்கள் நாடு முழுக்க விரிவாக படிக்கப்பட்டதை அவர் நினைவு கூர்ந்தார். கட்சியின் மனித வளம் குறித்தும் மேம்பட்ட சமூக வாழ்க்கையை வென்றெடுப்பதற்கான கட்சி உறுப்பினர்களின் அர்ப்பணிப்பு குறித்தும் மிகுந்த நம்பிக்கை தெரிவித்த அவர், உடனடியாக டிஜிட்டல் அரங்கை உருவாக்கி செழுமைப்படுத்த வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

பயிலரங்கில் பங்கேற்றவர்கள், தங்களது கருத்துக்களை சொல்லும் போது மிகவும் பயனுள்ளதாக அமைந்தது என்று கருத்து தெரிவித்தனர். மேலும் டிஜிட்டல் அரங்கை செழுமைப் படுத்துவதற்கான பல்வேறு ஆலோசனைகளையும் வழங்கினர். பினாய் விஸ்வம், டாக்டர் நாராயணா ஆகியோர், கருத்துக்களை தொகுத்ததோடு, இது போன்ற பயிலரங்குகள், நியூஏஜ் மற்றும் கட்சியின் டிஜிட்டல் அரங்குகளை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கு புதிய கண்ணோட்டங்களை இந்த பயிலரங்கு வழங்கியுள்ளது, மேலும் இது போன்ற நிகழ்வுகள் அனைத்து மாநிலங்களும் நடத்தப்பட வேண்டும் என கூறி நிறைவு செய்தார்கள்.

# பாலன் இல்லத்தில் நவம்பர் புரட்சி தின விழா





உலகத்தை புரட்டி போட்ட ரஷ்ய புரட்சியின் நினைவாக நவம்பர் 7 அன்று நடத்தப்படும், நவம்பர் புரட்சி தின விழா தமிழகம் முழுவதும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் வர்க்க, வெகுஜன அரங்கங்களின் சார்பாக கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில தலைமை அலுவலகமான பாலன் இல்லத்தில், மாநில துணை செயலாளர் நா. பெரியசாமி தலைமையில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஆர்.நல்லகண்ணு செங்கொடியை ஏற்றினார்.

### நூல் வெளியீட்டு விழா

நிகழ்வில் கட்சியின் மாநில துணை செயலாளர் மு. வீரபாண்டியன் எழுதிய இஸ்ரேல் ஹமாஸ் போரும் விடுதலையும் என்றநூலை, கட்சியின் தேசிய செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பினாய் விஸ்வம் வெளியிட்டு சிறப்புரை ஆற்றினார். மனிதநேய மக்கள் கட்சியின் மாநில தலைவர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா பெற்று கொண்டு உரையாற்றினார். கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன், கட்சியின் தேசிய நிர்வாக உறுப்பினர் டி. எம். மூர்த்தி, செயற்குழு உறுப்பினர்கள் எம். சந்தானம், வகிதா நிஜாம், இளைஞர் பெருமன்ற மாநில செயலாளர் கா. பாரதி, மாணவர் பெருமன்ற மாநில செயலாளர் தினேஷ், ஏ ஐ டி யு சியின் மாநிலபொதுச் செயலாளர் எம். இராதாகிருஷ்ணன், மாநிலத் தலைவர் காசி விஸ்வநாதன், தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் அ. பாஸ்கர் மற்றும் தென் சென்னை மாவட்ட செயலாளர் எஸ். கே. சிவா, வட சென்னை மாவட்ட செயலாளர் வெங்கடேஷ் வேம்புலி, மத்திய சென்னை மாவட்ட செயலாளர் பா. கருணாநிதி, திருவள்ளூர் மாவட்ட செயலாளர் கே. கஜேந்திரன் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

# இஸ்ரேலின் இனப்படுகொலைக்கு எதிராக நவ. 10 வரை கிளர்ச்சிப் போராட்டங்கள்!

**இடதுசாரிக் கட்சிகள் அறைகூவல்**

பாலஸ்தீனர்களை இனப்படுகொலை செய்யும், இஸ்ரேல் மற்றும் அதற்கு துணைபோகும் அமெரிக்கா வைக் கண்டித்து, நவம்பர் 10 வரை கிளர்ச்சிப் போராட்டங்களை நடத்து மாறு, இந்திய மக்களுக்கு இடதுசாரிக் கட்சிகள் அறைகூவல் விடுத்துள்ளன.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயலாளர் து. ராஜா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் சீத்தாராம் யெச்சூரி, அகில இந்திய பார்வர்ட் பிளாக் பொதுச்செயலாளர் ஜி. தேவராஜன், இந்தியக் கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் லிபரேசன்) கட்சியின் பொதுச் செயலாளர் தீபங்கர் பட்டாச்சார்யா மற்றும் புரட்சிகர சோசலிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் மனோஜ் பட்டாச்சார்யா ஆகியோர் கூட்டாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். அதில் அவர்கள் கூறியிருப்பதாவது:

பாலஸ்தீனர்களுக்கு எதிராக இஸ்ரேல் மேற்கொண்டிருக்கும் கொலை வெறிப்போரை உடனடியாக நிறுத்த வேண்டும்.

பாலஸ்தீனர்களை இனப்படுகொலை செய்யும் இஸ்ரேலுக்கு அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் நிதியுதவியும், ஆயுத உதவியும் வழங்கப்படுவது நிறுத் தப்பட வேண்டும்.

பாலஸ்தீனர்களை இனப்படுகொலை செய்வதற்கான அமெரிக்கா இஸ்ரேல் நடவடிக்கை க்கு மோடி அரசாங்கம் அப்படியே தலை யாட்டுவதனை நிறுத்திக் கொள்ள வேண்டும்

என வலியுறுத்தி, நாடு முழுவதும் கிளர்ச்சிப் போராட்டங்கள் நடத்தப் பட வேண்டும்.

அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஆண்டனி பிளிங்க்கன் மற்றும் பாதுகாப்புச் செயலர் லாயிட் ஆஸ்டின் ஆகிய இருவரும், இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் அயல்துறை அமைச்சர் ஆகியோ ருடன் அமைச்சரக அளவில் 2+2 பேச்சு வார்த்தை நடத்துவதற்காக இந்தியா வரும் 2023 நவம்பர் 7 முதல் 10 தேதி களுக்கு இடையே, இந்தக் கிளர்ச்சிப் போராட்டங்கள் நடத்தப்பட வேண்டும்.

ஒவ்வொரு மாநிலத்திலும் கிளர்ச்சிப் போராட்டங்களின் வடிவங்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதை அந்தந்த மாநிலங்களில் உள்ள இடது சாரிக் கட்சிகள் தீர்மானித்துக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அறிக்கையில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

## வினாடி - வினா

1 ரஷ்யாவில் 1917 பிப்ரவரி புரட்சியின் போது என்ன முழக்கம் எழுப்பப்பட்டது?

2 1917 பிப்ரவரி புரட்சியின் தொடக்க நிகழ்வு..

3 1917 ஏப்ரலில் ரஷ்யாவிற்கு வந்ததைத் தொடர்ந்து லெனின் முன்வைத்த முழக்கம் எது?

4 போல்ஷ்விக்குகள் குளிர்கால அரண்மனையைக் கைப்பற்ற முழு நாள் எடுத்துக்கொண்டது ஏன்?

5 பிப்ரவரி புரட்சியின் போது, ராணுவ வீரர்கள் கிளர்ச்சியில் ஈடுபட காரணம் என்ன?

6 அக்டோபர் புரட்சிக்குப் பிறகு, லெனின் எடுத்த முதல் அதிகாரப்பூர்வ நடவடிக்கை?

விடைகள் 12 ஆம் பக்கம்



தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 86 இதழ் 32

# மீண்டும் சனாதன விவாதம்

'திராவிட ஒழிப்பு மாநாடு' நடத்த அனுமதிக்க வேண்டும் என தாக்கல் செய்யப்பட்ட மனுவை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

"நாட்டிலுள்ள எந்த ஒரு நபருக்கும் பிளவு படுத்தும் கருத்துக்களை பரப்புவதற்கும், எந்த ஒரு கருத்தையும் கருத்தியலையும் ஒழிப்பதற்கும் கூட்டங்களை நடத்துவதற்கும் உரிமை இல்லை.

சனாதன தர்மத்தை ஒழிப்பதற்காக நடத்தப்பட்ட கூட்டத்தில் அமைச்சர்களும் கலந்து கொண்டும் அவர்கள் மீது காவல்துறை நடவடிக்கை எடுக்காமல் கடமை தவறியது" என்று நீதிமன்றம் கூறியதாக பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளது.

சனாதனம் என்றால் இந்து மதம் என சனாதனிகள் சொல்வார்கள். இறை நம்பிக்கையும் பக்தியும் கொண்ட இந்துவாகவும் அதே நேரத்தில் சனாதான மறுப்பாளராகவும் பல கோடிப் பேர் இந்த நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதே உண்மை. சனாதனத்தை மறுத்தால் "நீ இந்து இல்லை" என்று சான்றிதழை பறித்துக் கொள்வதற்கு எவருக்கும் உரிமை இல்லை.

உடல்நலம், ஊழல், தீண்டாமை, சமூக தீமைகள், போதைப் பொருட்களை ஒழிப்பதில் கவனம் செலுத்துங்கள் என்றும் நீதிமன்றம் அறிவுரைத்திருக்கிறது.

தீண்டாமை சட்டப்படி குற்றம். விடுதலை அடைந்து 75 ஆண்டுகள் கடந்த பின்பும், சட்ட விரோதமான தீண்டாமை இன்றும் நிலவுகிறது என்று உயர்நீதிமன்றமே சுட்டிக் காட்டும் அளவுக்கு அது வலுவோடு இருக்கிறது என்றால் அதற்கு யார் காரணம்?

அதனைக் கண்டறிந்து ஒழிக்காமல் தீண்டாமையை மட்டும் தனியாக எவ்வாறு ஒழிக்க முடியும்?

சாதிய படி நிலையை வலியுறுத்தி, பிறப்பால் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்று கற்பிப்பது எது? வர்ணாசிரமம் என்றால் சனாதனம் வேறு, வர்ணாசிரமம் வேறு என்று மேதைத்தனமாக பட்டுக் கொள்ளாமல் பதில் சொல்வார்கள்.

வர்ணாசிரமத்தை, சனாதனம் ஏற்கிறதா, மறுக்கிறதா என்ற பிரதான கேள்விக்கு நேரடி பதிலை சொல்வதில்லை. மறுக்கிறது எனில் சனாதனவாதிகள் சாதியை வாழ்க்கை நடைமுறையில் வலியுறுத்தவே கூடாது. ஒப்புக் கொள்வார்களா?

எதுவுமே மாறாது நிலைத்திருக்கும் என்பதுதான் சனாதனமாம். இது அறிவியலுக்கே நேர் எதிரானது. இந்த உலகில் மாறாதது என்று எதுவுமே இல்லை.

ஓலை குடிசையில், மின்சாரமோ சாலையோ, போக்குவரத்து வசதிகளோ, தகவல் தொடர்புகளோ இல்லாமல் சிக்கி முக்கி கற்களை கொண்டு தீ மூட்டி நடத்தப்பட்டது மானுட வாழ்க்கை. இதை மாற்ற முடியும் என்ற நம்பி, மாறுதலுக்காக உழைத்தவர்களால் தான் உலகம் இன்றைய நிலையில் இருக்கிறது.

மாறுதலை மறுக்கும் சனாதனிகள் மறுபடி மலைக்குகைகளுக்குப் போக தயாராக இருக்கிறார்களா?

உடன்கட்டை ஏறுதல், கைம்மை நோன்பு, வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைக்க வேண்டும் என்ற பெண்ணடிமைத்தனம், வேறு மதம், வழிபாட்டு முறை இருக்கக் கூடாது என்ற கொலைவெறி, பெரும்பான்மையினருக்கு கல்லாமையை கட்டாயமாக்கிய குருகுலம், குறிப்பிட்ட சமூகத்துக்கு தொண்டூழியம் செய்யவே வெகுமக்கள் பிறந்தார்கள் என்ற ஆதிக்க மனோபாவம் இவை எல்லாமே சமூகத் தீமைகள் தான்.

இதையெல்லாம் ஒழிக்க நினைப்பது திராவிடம் மட்டும் தான் என்று கருதுவது மடமை.

இதனை எதிர்த்த வள்ளலார் கொளுத்தப்பட்டார். "ஈஸ்வரனும் அல்லாஹ்வும் உனது பெயர்கள்தான் என்பதைப் புரிந்து கொள்ளும் நல்ல புத்தியை கொடு இறைவனே" என்று கேட்டதற்காக காந்தி சுட்டுக் கொல்லப்பட்டார். ராஜாராம் மோகன் ராய் 'சதி'யை தடுத்து நிறுத்தினார். ஆளுக்கொரு நீதி என்றால் "அது சாத்திரம் அன்று சதி என்று கண்டோம்" என்றார் பாரதி. இவர்கள் எல்லோரும் இந்துக்கள் தான்.

நிலப்பிரபுத்துவ, முதலாளிய சுரண்டலுக்கு எதிராகப் போராடி, சாமானியர்கள் திரட்டிய குற்றத்திற்காக நூற்றுக்கணக்கான கம்யூனிஸ்டுகள் உயிரை இழந்து இருக்கிறார்கள்

"இப்போதெல்லாம் யார் சாதி பார்க்கிறார்கள். இப்போது யார் உடன்கட்டை ஏறுகிறார்கள்" என்றெல்லாம் கேட்கிறார்கள்.

உண்மை! இந்த மாற்றங்கள் சனாதானத்தை வலியுறுத்துபவர்களால் ஏற்பட்டதல்ல; அதனை எதிர்த்து நின்றவர்களாலேயே சமூகம் முன்னேறி இருக்கிறது.

அதே நேரத்தில் இந்தக் கொடுமைகள் முற்றாகத் தீர்ந்து விடவும் இல்லை. பெற்ற பெண்ணையே, சாதி மறுப்பு மணம் செய்ததால் வெட்டிக் கொள்ளும் கொடூரம் இன்னும் நீடிக்கிறது.

நீதிமன்றம் அறிவுரைத்தபடி சமூகத் தீமைகளை ஒழிக்க வேண்டுமானால், அதன் ஆணிவேரை அகற்றுவது அவசியம். அந்த ஆணிவேரின் பெயர் சனாதனம் அல்ல என்றால், எதுவும் மாறக்கூடாது எல்லாம் நிலையானது என்று எதை சனாதனம் சொல்கிறது?

எல்லாம் மாறும்! மாற்றி அமைக்க துடிக்கும் மனிதர்கள் வந்து கொண்டே இருப்பார்கள். மனித குலம் முன்னேறும்!

## 2ஆம் பக்கத் தொடர்ச்சி

ஆம்ஆத்மி உறுதியுடன் இருந்து வருகிறது. இந்தக் கட்சியைக் கண்டு நிலைகுலைந்து நிற்கிறது பாஜக.

நாடாளுமன்றம் நமது கைக்குள் இருக்க டெல்லி மாநிலத்தை ஆம் ஆத்மி ஆள்வதா?

சட்டமன்றம் மட்டுமல்ல, அங்குள்ள மாநகராட்சியையும் ஆம் ஆத்மி கைப்பற்றி விட்டது.

சிங்கமாகத் திகழும் தங்களை கண்டெலியான ஆம் ஆத்மி எதிர்ப்பதா? போடு சிறையில்! அம்மாநில துணை முதலமைச்சர் மணிஸ் சிசோடியா சிறையில். அவருடன் ஆம் ஆத்மியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஞ்சய் சிங் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

டெல்லி மாநில தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் வீடுகளில் வேட்டை நாய்களின் சோதனை நடைபெற்று முடிந்துள்ளது. ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர், டெல்லி மாநில முதலமைச்சர் கெஜ்ரிவாலுக்கு அமலாக்கத் துறையின் சம்மன் உத்தரவு.

"எதற்காக என்னை அழைக்கின்றாய், ஒரு விவரமும் இல்லாமல் நீ வா, என்றால் வரவேண்டுமா? முடியாது. உன் சம்மனை திரும்பப் பெறு" என்று கெஜ்ரிவால் கடிதம். அடுத்த சில நாட்களில் என்ன நடக்கும் என்று தெரியாது.

ராஜஸ்தான் மாநிலத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தல் பரப்புரை தீவிரமாக நடைபெற்றுக் கொண்டுள்ளது. அம்மாநிலத்தில் காங்கிரஸ் ஆட்சி நடைபெற்று வருகின்றது.

அரசியலாக எதிர்கொள்ள இயலாத மோடி வகையறாக்கள், தங்களது வேட்டை நாய்களை முதலமைச்சரின் இரு மகன்களுடைய வீடுகளுக்கு சோதனைக்கு அனுப்பியுள்ளது. அவை போதாது என ராஜஸ்தான் மாநிலத்தில் 25 இடங்களில் சோதனைகள். மக்களின் கவனத்தை திசைதிருப்ப, குறுக்கு வழியில் அம்மாநிலத்தில் ஆட்சியை கைப்பற்ற துடியாய் துடிக்கும் மோடி கம்பெனிகளால் வேட்டை நாய்கள் பயன்படுத்தப்படுகின்றன.

ராஜஸ்தான் மாநிலத்தில் அமலாக்கத்துறை அதிகாரி 15 லட்சம் ரூபாய் லஞ்சம் வாங்கிய போது, கையும் களவுமாக அம்மாநில ஊழல் ஒழிப்பு காவல் துறையால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அமலாக்கத்துறை எத்தகைய நிலையில் உள்ளது என்பதனை இதன் மூலம் புரிந்து கொள்ள முடியும்.

சத்தீஸ்கர் மாநிலத்தில் காங்கிரஸ் கட்சி ஆட்சி நடைபெற்று வருகின்றது. அங்கே தேர்தல் நடைபெற உள்ளது. அம்மாநில முதலமைச்சர் பூபேஷ் பாகெல் லஞ்சம் வாங்கினார் என்பது அமலாக்கத்துறை குற்றச்சாட்டு.

மொத்தத்தில், எதிர்க்கட்சிகளை அரசியல் ரீதியாக எதிர்கொள்ள இயலாத மோடி கம்பெனி, தங்களை எதிர்ப்பவர்களை, விமர்சிப்பவர்களை தங்களின் வேட்டை நாய்களைக் கொண்டு பழிவாங்க முயல்கின்றது.


இத்தகைய அப்பட்டமான ஜனநாயக விரோத செயல்பாடுகளை அரசியல் ரீதியாக எதிர்கொள்ள ஆயத்தமாவோம்.

2024 தேர்தலில் தக்க பாடம் புகட்ட தற்போதே ஆயத்தப் பணிகளை மேற்கொள்வோம்.

மீண்டும் சந்திப்போம்.

வணக்கம் .

தோழமைமிக்க,



(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

## 1ஆம் பக்கத் தொடர்ச்சி

அன்று மாலை 6 மணி அளவில் மாநிலப் பொது நூலக வளாகத்தில் மாநாடு நடைபெற்ற பகுதிக்கு தோழர் போலோ மான்ஜி நகர் பெயர் சூட்டப் பட்டிருந்தது.

போலோ மான்ஜி, விவசாயத் தொழிலாளர்கள் பண்ணை அடிமைகளாகவும், கொத்தடிமைகளாகவும்,நடத்தப்பட்ட காலத்தில் சாதிய தீண்டாமையில், விவசாயத் தொழிலாளர்களை மனிதர்களாக கருதாமல் பேசும் விலங்குகளாக கருதப்பட்ட சமூக கொடுமைகளுக்கு தீர்வு காண சங்கம் அமைத்து போர் குரல் கொடுத்தவர்,

பீகார் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் முதல் மாநாடு 1954 ஆம் ஆண்டு நடத்தியதில், அமைப்பை உருவாக்குவதில் பெரும்பங்கு வகித்தவர்

1968 செப்டம்பர் 27,28,29 தேதிகளில் பஞ்சாப் மாநிலம் மோகா நகரில் நடந்த முதல் மாநாடு தொடங்கி, அவரது இறுதி மூச்சு வரை விவசாய தொழிலாளர்களின் வாழ்க்கையோடும், சங்க இயக்கத்தோடும் இறுதி மூச்சு வரை தொடர்ந்து பயணித்த மூத்த தலைவர், களப் போராட்ட வீரர் போலோ மான்ஜி நகர் என மாநாட்டு வளாகம் அமைக்கப்பட்டிருந்தது

இந்திய விவசாய தொழிலாளர் சங்கத்தின் அகில இந்திய தலைவராக செயல்பட்ட மூத்த தலைவர் ஜி. மல்லேஸ் அரங்கத்தில் மாநாடு தொடங்கியது.

### பிரதிநிதிகள் மாநாடு தொடக்கம்

நாட்டின் பல்வேறு திசைகளில் இருந்து மாநாட்டிற்கு வந்திருந்த பிரதிநிதிகள் முன்னிலையில் செந்தொண்டர் அணிவகுப்புடன் சங்கத்தின் அகில இந்திய தலைவர் நா.பெரியசாமி முன்னாள் எம்எல்ஏ சங்கத்தின் கொடியை ஏற்றி வைத்து தியாகிகள் நினைவுச் சின்னத்தில் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

மாநாட்டின் தலைமை குழுவாக சங்கத்தின் தலைவர் என்.பெரியசாமி கே.இ.இஸ்மாயில், அ.ராமமூர்த்தி, பி .கே கிருஷ்ணன், சூரியகாந்த்பஸ்வான் எம்.எல்.ஏ தேவி குமாரி ஆகியோர் செயல்பட்டனர்

நடவடிக்கை பதிவேடு, தீர்மானங்கள் குழு மற்றும் தகுதி ஆய்வுக் குழு தேர்வு செய்யப்பட்டன.

திருப்பதியில் நடைபெற்ற 14 வது தேசிய மாநாட்டிற்கு (2018 டிசம்பர் 1518) பிறகு மறைந்த பொது வாழ்வுப் பிரமுகர்கள், அரசியல் தலைவர்கள், இயக்க முன்னோடிகள், இயற்கைச் சீற்றங்கள் மற்றும் விபத்துக்களில் உயிரிழந்த பொதுமக்கள் அனைவருக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

வரவேற்பு குழு தலைவர் பீகார் சட்டமன்ற உறுப்பினர் சூரியகாந்த் பஸ்வான் வரவேற்புரை ஆற்றினார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா மாநாட்டை தொடக்கி வைத்து பேசினார். ஏஐடியூசி செயலாளர் ராமகிருஷ்ணா பண்டா, அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் பொதுச்செயலாளர் திருமலை ராமன், பிகார் மாநில அரசின் வருவாய்த்துறை அமைச்சர் அலோக் குமார் மெகதா, இந்திய மாதர் தேசிய சம்மேளனம் பொதுச் செயலாளர் ஆனி ராஜா. அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்கத்தின் தேசிய பொதுச் செயலாளர் பி. வெங்கட், அகில இந்திய விவசாய சங்கத்தின் தலைவர் ஆர். வெங்கையா, அகில இந்திய கிராமத் தொழிலாளர் சங்கம் சார்பில் கோபால் ரவி தாஸ் எம்.எல்.ஏ. போன்ற தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்று வாழ்த்துக் கூறினர்.

### சர்வதேச பிரதிநிதி வாழ்த்து

மாநாட்டில் சர்வதேச விவசாய தொழிலாளர் சங்கம் சார்பில் இரண்டு பிரதிநிதிகள் குழு பங்கேற்றது. இதில் பொதுச் செயலாளர் (யூ.ஐ., எஸ்) ஜூலியஸ் கக் மாநாட்டை வாழ்த்திப் பேசினார்.

ஆந்திர மாநிலம் திருப்பதியில் நடைபெற்ற 14 வது மாநாட்டிற்கும் 15 வது மாநாட்டிற்கு இடைப்பட்ட காலத்தில் நாடு முழுவதும் சங்கத்தின் மேற்கொண்ட இயக்கங்கள், மாநிலங்களில் நடைபெற்ற வேலைகள் உள்ளடங்கிய பொதுச் செயலாளர் அறிக்கையை சங்கத்தின் பொதுச் செயலாளர் குல்சார் சிங் கொரியா அறிமுகம் செய்து மாநாட்டின் விவாதத்துக்கு முன் வைத்தார்.

அறிக்கையின்மீதுநாடுமுழுவதும்இருந்துவருகை தந்திருந்த அனைத்து மாநிலங்களின் சார்பில் சுமார் 35 தோழர்கள் ஆக்கபூர்வமான கருத்துக்களையும், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளுக்கான ஆலோசனைகளையும் முன் வைத்தனர்.

தமிழ்நாடு பிரதிநிதிகள் சார்பில் திருச்சி பி. கணேசன், மதுரை சரவணன் வீரய்யா ஆகியோர் பேசினர். பிரதிநிதிகள் விவாதத்தை தொடர்ந்து பொதுச் செயலாளர் தொகுப்புரை வழங்கினார். தொகுப்பு உரைக்கு பிறகு அறிக்கை ஏக மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது .

தரியாப் சிங் காஷ்யாப் தலைமையில் அமைக்கப்பட்ட தகுதி ஆய்வுக் குழுவில் தமிழ்நாட்டு பிரதிநிதிகள் சார்பில் கே. ராஜா (திருவாரூர் மாவட்டச் செயலாளர்) இடம் பெற்றிருந்தார்.

நாடு முழுவதும் 17 மாநிலங்களில் இருந்து 607 பிரதிநிதிகள் கலந்து கொண்ட மாநாட்டில், தமிழ்நாட்டிலிருந்து 36 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

விசாகபட்டினம் ஒடிஷா ரயில் பாதையில் ஏற்பட்ட விபத்து காரணமாக 30.10.2023 ஆம் தேதி சென்னையில் இருந்து ஹௌரா மெயில் ரத்து செய்யப்பட்டதால், மாநில மாநாட்டில் தேர்வு செய்யப்பட்ட 40 பிரதிநிதிகள் தேசிய மாநாட்டில் பங்கேற்க முடியாத நிலையில் சென்னையிலிருந்து ஊர் திரும்பினர்.

-அ.பாஸ்கர்

# டெல்லி காற்று மாசு பிரச்சனை விளைவுகளும் காரணங்களும்



அருண் நெடுஞ்செழியன்

**தலைநகர் புதுடெல்லியில் காற்று மாசு பூதாகரமான பிரச்சனையாக மீண்டும் கிளம்பியுள்ளது. டெல்லி மாநகரில் படிக்கும் பள்ளி மாணவர்களின் உடல் நலன் கருதி, டெல்லி முழுவதும் தொடக்கப் பள்ளிகளுக்கு நவம்பர் 10 ஆம் தேதி வரை விடுமுறை அறிவித்துள்ளது அம்மாநில அரசு.**

மேலும் மாநகருக்குள் வாகனங்கள் நுழைவதற்கும் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதோடு, ஒற்றைப்படை மற்றும் இரட்டைப்படை பதிவெண் இலக்கம் அடிப்படையில், சுழற்சி முறையில் வாகனங்கள் செல்வதற்கு அனுமதிக்கப்படுவது குறித்தும் ஆலோசனை நடத்தி வருகிறது டெல்லி மாநில அரசு.

### அதிகரிக்கும் காற்று மாசு

உலக சுகாதார அமைப்பானது, ஆரோக்கியமான சுவாசத்திற்கு ஏற்ற காற்றின் தரம் குறித்த அளவீடுகளை வெளியிட்டுள்ளது. அதன்படி மக்கள் வசிக்கும் பகுதிகளில் காற்றின் தரக் குறியீடு (Air Quality Index – AQI) 50 க்குள் இருக்க வேண்டும். ஆனால் டெல்லியில் கடந்த 4 ஆம் தேதி புள்ளிவிவரப்படி காற்றின் தரக் குறியீடு 415 ஆக இருந்தது. அடுத்த நாளில் 460 ஆக அதிகரித்தது. சில இடங்களில் காற்று மாசு அளவு உலக சுகாதார அமைப்பு வழங்கியுள்ள வரம்புகளைக் கடந்து கிட்டத்தட்ட 100 மடங்கு அதிகமாக உள்ளது. டெல்லியில் அதிகரிக்கின்ற காற்று மாசால் பொதுமக்களுக்கு மூச்சு திணறல் பிரச்சனை அதிகரித்து வருகின்றன. அதிக அளவிலான காற்று மாசு நுரையீரல் தொடர்பான நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கடுமையான பக்க விளைவுகளை ஏற்படுத்தி, உயிருக்கு ஆபத்து விளைவிப்பதோடு நுரையீரல் புற்றுநோய் வருவதற்கான வாய்ப்பும் இருப்பதாக மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர்.

### காற்று மாசுக்கான காரணம் என்ன?

தலைநகர் டெல்லியின் அண்டை மாநிலங்களான பஞ்சாப், ஹரியானா ஆகிய மாநிலங்களில் நெல் அறுவடைப் பணிகள் முடிந்த பின்னர், வயல் காட்டை எரிப்பதும் காற்று வீசும் திசையில் ஏற்பட்டுள்ள மாறுபாடும் டெல்லியின் காற்று மாசு பிரச்சனைக்கு காரணமாக கூறப்படுகின்றன.

நாள்தோறும் அதிகரித்து வரும் சூழல் நெருக்கடிக்கு பலதரப்பட்ட தொழிற்சாலைக் கழிவுகளும், நகர்ப்புறம் சார்ந்த மூலதன குவிப்பின் பெருக்கமும் நகரத்தின் மக்கள் திரட்சியும் காரணமாக இருக்கின்றன என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.





கடந்த இருபது ஆண்டுகளில் கண்டுபிடிக்கப்பட்ட எண்ணற்ற நச்சு வேதியியல் பொருட்களின் கழிவுகள், சாயப்பட்டறைகளில் வெளியேற்றப்படும் கழிவுகள், ஆலைக்கழிவுகள், வான்வெளியில் டன் கணக்கில் வெளியேற்றப்படும் கார்பன் டை ஆக்சைடு போன்ற எண்ணற்ற கழிவுகளால் இயற்கை கட்டமைப்பை மூச்சுத் திணறவைக்கும் அளவுக்கு முதலாளிய உற்பத்தி முறை மாற்றியுள்ளது. நாம் மீண்டு வரமுடியாத ஒரு மாபெரும் சுற்றுச்சூழல் பிரச்சனையில் சிக்கியுள்ளோம் என்பதை யாரும் உணர்ந்தது போலத் தெரியவில்லை.

வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளின் தொழிற்சாலைகளிலிருந்து வளிமண்டலத்தில் இதுவரை வெளியேற்றப்பட்ட பசுமைக்குடில் வாயுக்களால் வெப்ப மயமான இப்புவிக்கோளில், பனிமலைகள் உருகி பசிபிக் கடலில் உள்ள சிறு தீவுகள் மூழ்கத் தொடங்கிவிட்டன. ஆப்பிரிக்க நாடுகளில் பாலைத் திணைகள் உருவாகி கடும் வறட்சியை தோற்றுவிக்கிறது. பல்லுயிரியம் பலநாடுகளில் வேகமாக அழிந்து வருகிறது. பருவம் தப்பிய மழைப் பொழிவும் வறட்சியும் வெள்ளமும் சாதாரண நிகழ்வுகளாக மாறி விட்டன. சில ஆண்டுகளுக்கு முன்பு சென்னையை சூழ்ந்த மழை வெள்ளமும் கேரள வெள்ளமும் தற்போதைய காற்று மாசும் பெரும் சூழலியல் அழிவை முன் உணர்த்துகின்றன. பிரச்சனையின் ஆணிவேர், சமகால முதலாளித்துவ அமைப்பில் இருக்கும்போது, சில முதலாளித்துவ ஆதரவு அறிவுஜீவிகள் இதனை தனிநபர் பிரச்சனையாக மாற்றி தீர்வையும் தனி நபர் தீர்வாக மடைமாற்றி விடுகிறார்கள்.

### ஃபேஷன் தீர்வுகள்

சில ஆண்டுகளுக்கு முன்பாக இந்து தமிழ் திசை நாளிதழில் "பூமியைக் காப்பாற்றுங்கள்" என்ற தலைப்பில் திரு கே.என். ராமசந்திரன் அவர்கள், புவிகோளம் எதிர்கொள்கிற அபாயங்களை பட்டியலிட்டு கீழ்வரும் வகையில் அதற்கான தீர்வை முன்வைக்கிறார்.

"சென்னையில் கார் தொழிற்சாலைகள் அமைந்ததும் நடுத்தர வருமானக்காரர்கள் கூட கார்களை வாங்கி ஓட்டுவதும் மகிழ்ச்சிக்குரிய விஷயமல்ல. நம் நாட்டின் பெருநகரங்கள் எல்லாவற்றிலும் கார்களும் பஸ்களும் லாரிகளும் நீராவி இன்ஜின்களும் கரிமவாயுக்கள் கலந்த புகையை ஏராளமாக வெளிவிடுகின்றன. மேலை நாடுகளில் கடைபிடிக்கப்படும் வாகனப் பராமரிப்பு உத்திகள் இந்தியாவில் இன்னமும் முழு அளவில் அறிமுகப்படுத்தப்படவில்லை. போக்குவரத்து சிக்னல்களில் நிற்கும்போது இன்ஜின்களை ஓடவிடுவது, திடீரென்று வேகத்தைக் கூட்டி சீறிப்பாய்வது போன்றவற்றால் எரிபொருள் வீணாவதுடன் காற்றும் மாசுபடுகிறது. அதைச் சுவாசிக்கிற மக்களுக்கு நுரையீரல் பாதிப்புகளும் இதயக் கோளாறுகளும் உண்டாகின்றன. ஒவ்வொரு தனி மனிதரும் உலகின் சூழலில் தோன்றத் தொடங்கியிருக்கிற சீரழிவைத் தடுத்து நிறுத்தச் சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்; பூமியைக் காப்பாற்றுங்கள்!" என எழுதுகிறார்.

பொதுவாக, சிக்னலில் வாகனத்தை அணைத்து, எரிபொருளை சேமிப்பது, குண்டு பல்புகளை சிஎஃப்எல் பல்புகளாக மாற்றி மின் சிக்கனத்தை கடைபிடிப்பது, பெட்ரோல் வாகனங்களுக்கு மாற்றாக மிதிவண்டி ஓட்டுகிற வழக்கத்திற்கு மாறக் கோருவது, பொதுப் போக்குவரத்தை பயன்படுத்துவது என தனிநபர்களின் நடத்தை பண்புகளை சார்ந்த சுற்றுச்சூழல் தீர்வுகள் சிலரால் தொடர்ந்து முன்வைக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் பகுதியளவு உண்மை இருந்தாலும், அதிகரிக்கின்ற காற்று மாசு பிரச்சனைக்கும் பசுமைக் குடில் வாயுக்களின் வெளியேற்றத்தை கட்டுப்படுத்துவதற்கும் எந்தளவுக்குப் பங்காற்ற முடியும் என்பதை கருதிப் பார்க்கவேண்டும்? மிஞ்சிப்போனால் ஒரு விழுக்காடு அளவு கூட தனிநபர் சிக்கனங்களால் காற்று மாசையும் புவிவெப்பமயமாக்கலை குறைக்க முடியாது என்பதே நிதர்சனமான உண்மை.

தானுந்து பயன்பாடு அதிகரித்து விட்டது. அதனால் காற்று மாசடைகிறது என வாதிடுபவர்கள், வாகனங்களின் எண்ணிக்கை கடந்த சில ஆண்டுகளில் மட்டும் திடுமென அதிகரிப்பதற்கான காரணம் என்ன? மக்களின் வாங்கும் சக்தி உயர்ந்துவிட்டதா? நகரங்களில் மக்கள் ஏன் அதிகமாக குவிகின்றனர்? நகரங்களுக்கு மக்களை நெட்டித்தல்லுகிற ஊக்கி எது? வாகன சந்தைப் பரவலுக்கு என்ன காரணம் போன்ற உட்தொடர்புகளை, நிகழ்வுக்கு தொடர்புடைய அம்சங்களையும், நிகழ்வின் சாரம்சத்தையும் பகுப்பாயமால் "காற்று மாசு" என்கிற வெளிப்படை நிகழ்வை மட்டும் வைத்துக்கொண்டு அதற்கான தனிநபர் தீர்வுகளை வேகமாக முன்வைக்கின்றனர்.

புவி வெப்பமயமாக்கலுக்கு காரணமாக உள்ள மூன்றில் இரண்டு பங்கு பசுமைக்குடில் வாயுக்களை உலகின் முன்னணி 90 கார்ப்ரேட் நிறுவனங்களே வெளிவிடுகின்றன என்பதை பல அறிவியல் அறிக்கைகள் சுட்டிக் காட்டுகின்றன. புதை படிம எரிபொருள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பெருநிறுவனங்களுக்குச் சார்பான அரசுக் கொள்கைகளை மாற்றி அமைக்காமல், மேற்சொன்ன தனிநபர் தீர்வுகள் போகாத ஊருக்கு வழி சொன்ன கதையை ஒத்துள்ளது.

எந்தவொரு சமூகப் பிரச்சனையையும் அரசியல் பொருளாதார கண்ணோட்டத்திலும் வர்க்க பார்வையிலும் அணுகத் தவறுகிற அல்லது அணுக மறுக்கிற வாதங்களை முன்வைப்பவர்கள், சிக்கலை தனிநபர் ஒழுக்கவாதத்தோடு தொடர்புபடுத்துவது என்பது, பொது எதிரியான கார்ப்ரேட் நிறுவனங்களுக்கு ஆதரவாக இருப்பது தற்செயலானது அல்ல. அதனால்தான் பல தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மரம் நடுகிறோம், குப்பைகளை அள்ளுகிறோம் என அரசிடம் சூழல் விருது வாங்குகிறார்கள்.

நிலவுகிற உலகமய தாராளமய தனியார்மய சகாப்தமானது நகர்ப்புறம் சார்ந்த தொழில் முதலீடுகளை ஊக்குவிக்கிறது. அதிகரிக்கின்ற நகர்ப்புற முதலீடுகள், பிரம்மாண்ட நகரங்களை உருவாக்குகிறது. ஆனால் இந்த நவீனத்துவ நகரத்தில் வசிக்கிற மனிதர்களின் சுகாதாரத்தை பாதுகாப்பதில் அரசுக்கும் கார்ப்ரேட் நிறுவனங்களுக்கும் துளி அளவு கூட அக்கறை இல்லை என்பதே டெல்லி காற்று மாசு பிரச்சனை உணர்த்துகிற பாடமாகும்.

தொடர்புக்கு: 9842391963

# பிரெஞ்சிந்திய விடுதலைப் போராட்டமும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும்



எல்லை சிவக்குமார்

பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழ் இருந்த புதுச்சேரி, காரைக்கால், மாகே, ஏனாம், சந்திர நாகூர், உள்ளிட்ட பிரெஞ்சிந்திய பகுதிகளின் விடுதலைப் போராட்டம் என்பது தொழிலாளர் வர்க்கத்தின் தலைமையில் நடைபெற்ற வீரம் செறிந்த போராட்டமாகும். இந்த போராட்டத்தின் தள நாயகனாக விளங்கியவர் மக்கள் தலைவர் வி.எஸ். என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்ட வ. சுப்பையா என்னும் பொதுவுடைமை போராளி.

மகாத்மா காந்தியின் மீது பற்றுக் கொண்டு அரிசன சேவா சங்கம் மூலம் சமூகப் பணிகளில் ஈடுபட்டு வந்த துடிப்பு மிக்க இளைஞரான வ. சுப்பையா தென்னகத்தில் கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கும் பணியில் ஈடுபட்டு இருந்த அமீர் ஹைதர் கான் அவர்களை சந்தித்த பின்பு கம்யூனிஸ்ட்டாக பரிணமித்து அவரது ஆலோசனையின் அடிப்படையில் பஞ்சாலைகளில் பணியாற்றி வந்த தொழிலாளர்களை அணிதிரட்டி அவர்கள் உரிமைக்கான போராட்டங்களை முன்னெடுத்தார்.

## பஞ்சாலைத் தொழிலாளர் போராட்டம்!

பஞ்சாலைத் தொழிலாளர்களின் வீரஞ்செறிந்த போராட்டத்தினை ஒடுக்க பிரெஞ்சு இராணுவம் நடத்திய துப்பாக்கி சூட்டில் 12 தொழிலாளர்கள் தங்கள் இன்னுயிரை ஈந்து, ஆசியா கண்டத்தில் முதன்முதலாக எட்டு மணி நேர வேலை உரிமையை பெற்றுத் தந்தனர்.

தொழிலாளர் போராட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து தொழிலாளர் இயக்கத்தை விடுதலை இயக்கமாக முன்னெடுத்து செல்லுமாறு பண்டித நேரு அளித்த ஆலோசனையின்படி வ. சுப்பையா விடுதலை இயக்கத்தை உருவாக்கும் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

யுத்த எதிர்ப்பு பிரச்சாரத்தில் ஈடுபட்டதாக 1940ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார் வ. சுப்பையா. சிறையில் இருந்த போது கம்யூனிஸ்ட் தலைவர்கள் எஸ். வி. காட்டே, எம். ஆர். வெங்கட்ராமன், பி. சீனிவாசராவ், ஏ. எஸ். கே. அய்யங்கார் ஆகியோருடன் ஏற்பட்ட தொடர்பால் மார்க்சியத்தின் பாலும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பாலும் ஈர்ப்பு ஏற்பட்டது.

1942 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 அன்று வேலூர் சிறையில் இருந்து விடுதலை பெற்று புதுச்சேரி திரும்பிய வ. சுப்பையா பிரெஞ்சிந்திய கம்யூனிஸ்ட் கட்சி யை பகிரங்கமாக தொடங்கினார். காரைக்கால் பகுதியில் பொன்னையா பிள்ளை, அம்பிகா சுந்தரமூர்த்தி, செக்கு மணி போன்றவர்களும், மாகே பகுதியில் ஐ. கே. குமரன் தலைமையிலும், சந்திர நாகூர் பகுதியில் காளி சரண் கோஷ் தலைமையிலும் பிரெஞ்சிந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கிளை அமைப்புகள் உருவாக்கப்பட்டது.

## தேசிய ஜனநாயக முன்னணி!

1944ஆம் ஆண்டு வ. சுப்பையா பிரெஞ்சு அரசால் நாடு கடத்தப்பட்டார். தலைமறைவு வாழ்க்கைக்கு பின் 1945 ல் புதுச்சேரி திரும்பிய வ. சுப்பையா தேசத் தொண்டர்கள், பிரெஞ்சு அரசுக்கு எதிரான சிந்தனையாளர்கள் அனைவரையும் ஒரே அணியில் திரட்டி போராட வேண்டும் என்று பி. சி. ஜோஷியின் வழிகாட்டுதலில் தேசிய ஜனநாயக முன்னணி என்ற அமைப்பை உருவாக்கினார்.

இதன் காரணமாக 1946ல் நடைபெற்ற நகரமன்ற உள்ளாட்சி தேர்தல்களிலும் பிரதிநிதிகள் சபை தேர்தலிலும் தேசிய ஜனநாயக முன்னணி பெரும்பான்மையாக வெற்றி பெற்றது. 1947ல் பிரான்சு நாடாளுமன்ற மேலவை உறுப்பினர்களாக வ. சுப்பையா, காரைக்கால் பக்கிரிசாமி பிள்ளை இருவரும் தேர்வு செய்யப்பட்டனர்.

1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ம் நாள் பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் இருந்து இந்திய விடுதலை அடைந்தது. பிரஞ்சிந்திய கம்யூனிஸ்ட் கட்சியை சார்ந்த உழவர்கரை கொம்யூன் பஞ்சாயத்து மேயராக இருந்த கவி. வெ. நாரா, முதலியார் பேட்டை கொம்யூன் மேயராக இருந்த வைத்திலிங்கம் இருவரும் கொம்யூன் பஞ்சாயத்து அலுவலகத்தில் இந்திய தேசிய கொடியை ஏற்றினார்கள்.

வ. சுப்பையா தில்லியில் இருந்ததால் புதுச்சேரியில் நடைபெற்ற இந்திய சுதந்திர கொண்டாட்டத்தில் கட்சியின் சார்பில் மோகன் குமாரமங்கலம் கலந்து கொண்டுள்ளார்.



## அடக்குமுறைகள்!

இந்திய விடுதலைக்குப் பின்னர் பிரஞ்சிந்திய விடுதலைப் போராட்டம் தீவிரமான நிலையில் பிரெஞ்சு அரசு, கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் மீது அடக்குமுறைகளை ஏவியது. கைது செய்து சிறையில் அடைத்தனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் ஊரைவிட்டு வெளியேறினார்கள்.

1950 ஜனவரி 14 பொங்கல்











பண்டிகைக்கு முதல் நாள் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையகமாக விளங்கிய வ. சுப்பையா வீடு, பிரெஞ்சு காவல் துறை துணையுடன் குண்டர்களால் தீ வைத்து கொளுத்தப்பட்டது.

இத்தகைய சூழலில் பிரெஞ்சு அரசின் தாக்குதல் அதிகரித்த நிலையில் பிரெஞ்சு அரசுக்கு இறுதி கட்ட மரண அடி கொடுக்கும் தீவிரமான போராட்டங்களை முன்னெடுத்து செல்ல பிரஞ்சிந்திய கம்யூனிஸ்ட் கட்சி 1954மார்ச் மாதம் முடிவு செய்தது.

பிரஞ்சிந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் இறுதி கட்ட போராட்டம் குறித்து கட்சியின் அகில இந்திய தலைமையுடன் விவாதிக்க வ. சுப்பையா தில்லி சென்றார். அதனைத் தொடர்ந்து அன்றைய அகில இந்திய பொதுச்செயலாளர் அஜய் குமார் கோஷ் 1954 ஏப்ரல் 7ம் நாள் பிரெஞ்சு ஏகாதிபத்தியம் இந்திய மண்ணை விட்டு வெளியேற வேண்டும் என்பதற்கான இறுதிக் கட்ட போராட்டம் தொடங்கும் என்று அறிவித்தார்.

## இராணுவ பயிற்சி!

அதே நேரத்தில் இந்திய இராணுவத்தில் மேஜராகப் பணியாற்றி வந்த மேஜர் ஜெயபால் சிங் என்பவரை ரகசியமாக புதுச்சேரிக்கு அனுப்பி வைத்தார்.

அவர் திருபுவனைபகுதியில் ரகசிய முகாம் அமைத்து கட்சியின் தொண்டர்கள் 50 பேருக்கு. துப்பாக்கி சுடும் பயிற்சி அளித்தார்.

பயிற்சி பெற்ற தொண்டர்கள் டாக்டர் என். ரங்கநாதன் தலைமையில் திருபுவனை காவல் நிலையத்தையும், பஞ்சாயத்து அலுவலகத்தையும் தங்கள் வசமாக்கி அங்கு பறந்த பிரெஞ்சு கொடியை இறக்கிவிட்டு, இந்திய தேசியக் கொடியை பறக்க விட்டனர்.

அதனைத் தொடர்ந்து 22 கிராமங்களையும் 23 ஆயிரம் மக்களையும், கொண்ட மண்ணாடிப்பட்டு கொம்யூனை தங்களைத் தாங்களே விடுவித்துக் கொண்டதாக அறிவித்தன.

இதே காலகட்டத்தில் காரைக்கால் பிராந்தியத்திலும் விடுதலைப் போராட்டம் தீவிரமடைந்தது. 1954 மார்ச் 22 ம் நாள் காங்கிரஸ், கம்யூனிஸ்ட், திராவிடர் கழகம் இணைந்த ஐக்கிய இணைப்பு முன்னணி உருவானது. அதன் விளைவாக கொம்யூன் தோறும் விடுதலைப் போராட்டம் தீவிரமடைத்தது.

## இறுதிகட்டப் போராட்டம்!

இறுதிக் கட்டப் போராட்டத்திற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி விடுத்த அறைக்கூவலை ஏற்று மாகே பகுதியில் இருந்து வெளியேறிய நூற்றுக்கணக்கான தொண்டர்கள் எல்லைப் பகுதியில் திரண்டனர். ஏப்ரல் 11 அன்று மாகேவின் மூன்று எல்லைப் பகுதிகளில் நடைபெற்ற பொதுக்கூட்டங்களில் இ. எம். எஸ். நம்பூதிரி பாட், ஏ. கே. கோபாலன், என். இ. பலராமன் போன்றோர் உரையாற்றி வழியனுப்ப, பிரெஞ்சிந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் மாகே நகராட்சி அலுவலகத்தை கைப்பற்றி இந்திய தேசியக் கொடியை ஏற்றினார்கள்.

அதனைத் தொடர்ந்து விடுதலைப் போராட்டம் உச்சமடைந்தது. அதன் காரணமாக பிரெஞ்சு காரர்கள் மாகே பகுதியின் நிர்வாகப் பொறுப்பை வருவாய் அதிகாரிகளிடம் ஒப்படைத்து விட்டு வெளியேறினார்கள்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வழிக்காட்டுதலில் பிரெஞ்சு இந்திய பகுதியில் நடைபெற்ற மக்கள் எழுச்சி, ஆயுதம் தாங்கிய போராட்டம். பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவு, இந்திய அரசின் குறிப்பாக பிரதமர் நேருவின் அரசியல் நிர்ப்பந்தம் போன்ற நெருக்கடிகள் காரணமாக பிரெஞ்சு அரசு கௌரவமான நிலையில் பிரெஞ்சு இந்திய பகுதிகளில் இருந்து வெளியேற ஒப்புக்கொண்டது.

1954ம் ஆண்டு அக்டோபர் 18ம் நாள் புதுச்சேரி தமிழக எல்லையை ஒட்டிய கீழ் கிராமத்தில் உள்ளாட்சி பிரதிநிதிகள் பங்கேற்ற கருத்து கணிப்பு வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

வாக்களித்த 178 பிரதிநிதிகளில் 170பேர் பிரெஞ்சு அரசு வெளியேற வேண்டும் என்று அளித்த வாக்கின் படி பிரெஞ்சு இந்திய பகுதியில் இருந்து வெளியேற ஒப்புக் கொண்டு பிரெஞ்சு அரசு 1954 ஆம் ஆண்டு நவம்பர் 1ம் நாள் இந்திய அரசு பிரதிநிதியிடம் நிர்வாகப் பொறுப்பை ஒப்படைத்து வெளியேறியது. இந்த விடுதலை திருநாள் நிகழ்ச்சியில் பங்கேற்க வ. சுப்பையா மீதான பிடிவாரண்டை ரத்து செய்ய கோரிமேடு எல்லையில் சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டு அங்கு அவர் ஆஜரான நிலையில், அவர் மீதான பிடிவாரண்ட ரத்து செய்யப்பட்டு கோட்டக் குப்பத்தில் இருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் அணி திரண்டு மேளங்கள் முழங்க ஆட்டம் பாட்டத்துடன் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார்.

ஆம் பிரஞ்சிந்திய விடுதலைப் போராட்டம் என்பது கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் நடைபெற்ற வீரஞ்செறிந்த போராட்டம் ஆகும்.

தொடர்புக்கு 9843177943



நா.சேகரன்

### பற்றி எரிகிறது மணிப்பூர் அமைதி நிலைநாட்ட துப்பில்லை..

# மிசோரம் மாநிலத்தை வளம் கொழிக்கச் செய்வாராம்

**மிசோராம் மாநில சட்டபேரவைத் தேர்தலை ஒட்டி தனது வீடியோ வழி பசப்புரையில் "பாஜக கூட்டணி ஆட்சியை பிடிக்கும்பட்சத்தில், மிசோராம் மாநிலத்தை வளம் கொழிக்கும் மாநிலமாக மாற்றி காட்டுவோம்." என வழக்கம்போல் பசப்பியுள்ளார் பொய்யுரை நாயகர் பிரதமர் மோடியார்.**

ஆனால் மிசோராம் அருகே உள்ள மணிப்பூர் மாநிலத்தில் பாஜக ஆட்சிதான். அங்கு என்ன நிலைமை?

இந்த ஆண்டு 2023 மே மாதம் 3 ந் தேதி மணிப்பூரைப் பற்றிய தீ இன்னும் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கிறது. அணைந்தபாடில்லை. அதை அணைக்கத் துப்பில்லை. ஆனால் மிசோராம் மாநிலத்தை செல்வம் கொழிக்கும் மாநிலமாக மாற்றப் போவதாக கதைக்கிறார் .ஒன்றிய ஆட்சியாளர் மோடியார. எனவே இதுபோன்ற ஏராளமான கதையாடல்களை தேர்தல் சமயங்களில் சந்தித்த மக்கள்தான் இமாச்சல் பிரதேசம், பஞ்சாப்,கர்நாடகம் உள்ளிட்ட சட்டமன்ற தேர்தலில் தக்க பாடம் புகட்டி தாமரைச் சின்னக் கட்சியை மண்ணைக் கவ்வ வைத்தனர்.

வேடிக்கை என்னவெனில் "மோடியார் தேர்தல் பிரச்சாரத்திற்கு மிசோராமிற்கு வந்தால் அவருடன் நான் மேடையைப் பகிர்ந்துகொள்ள மாட்டேன். நான் தனியாகவே பிரச்சாரம் செய்வேன்" என்கிறார் பாஜக வின் கூட்டாளியும் மிசோராமின் தற்போதைய முதல்வர் சோரம்தாங்கா. இதுதான்மிசோராமில் மோடியின் செல்வாக்கு. எனவே வீடியோ மூலம் மிசோராம் மக்களிடையே செல்வம் கொழிக்கவைப்பதாக பசப்புகிறார் மோடியார்.

**மணிப்பூர் கலவரம்பின்னணி**

தினந்தோறும் வன்முறை மோதல்கள். வீடுகள்கடைகள் வழிபாட்டுத் தலங்கள் தீக்கிரையாவது என பல கொடுஞ் சம்பவங்கள் நடந்துகொண்டிருந்துதான் இருக்கிறது. இந்து வன்முறையால் இதுவரை 170க்கும் மேற்பட்டோரது உயிர் பறிக்கப்பட்டுள்ளது.நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர். ஆயிரக்கணக்கானனோர் அகதிகள் முகாம்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

கடந்த ஜீலை 19 ந்தேதி மணிப்பூர் கலவரம் தொடர்பாக வீடியோ ஒன்று வெளியானது . அதில் குக்கி பழங்குடியின சமூகத்தை சேர்ந்த இரு இளம்பெண்களை மெய்தி இனத்தைச் சேர்ந்த ஆண்கள் நிர்வாணமாக இழுத்துச் சென்று கூட்டு பாலியல் வல்லுறவு செய்த கொடூர காட்சிகள் வெளியானது. நாடே அதிர்ச்சியில் உறைந்து.அவமானத்தால் வெட்கி தலைகுனிந்தது இந்தியா. இதே போல் நடந்தேறிய கோரக் கொலை களும் வீடியோ மூலம் வெளி உலகத்திற்கு தெரியவந்தது.

இதேபோல மெய்தி இனத்தைச் சேர்ந்த பிஜம் ஹேம்ஜித் (20) என்ற மாணவரும் ஹிஜமம்ரலின் தொயிங்காமி(17) மாணவியும் சில வாரங்களுக்கு முன்பு திடீரென காணாமல் போயினர். அவர்களது செல்போன் சுவிச் ஆப்நிலையில் இருந்துது. சில நாட்கள் கழித்து அவர்கள் இவருவரும் கடத்தி கொலை செய்யப்பட்டனர என்ற அதிர்ச்சித் தகவல் வெளிவந்தது.இந்த கொடுஞ்சம்பவத்தைக் கண்டித்து இம்பாலில் மாணவர்கள் மணிப்பூர் முதல்வர் அலுவலகம் நோக்கி ஊர்வலமாகச் செல்ல முயன்றனர். அவர்கள் மீது போலீசார் நடத்திய தாக்குதலில் 47 க்கும் மேற்பட்ட மாணவர்கள் படுகாயமுற்றனர்.

**பற்றி எரியும் மணிப்பூரில் கொடுஞ்சம்பவங்கள்**

தொடர்ந்து நடந்தேறி வரும் வன்முறை கொலை சம்பவங்கள் கணக்கில் அடங்கா. எடுத்துக்காட்டாக, கடந்த வாரத்தில் மட்டும் நடந்த வன்முறை சம்பவங்களைப் பார்ப்போம். அக். 31 மணிப்பூர் இந்திய மியான்மர்(பர்மா) எல்லை5யை ஒட்டியுள்ள மொரெ என்ற நகரத்தில் காவல் துறை அதிகாரி ஒருவரை துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அக்.24 நவம்பர் மாதத்தில் மீண்டும் வன்முறை குகிஜோ இனத்தவருக்கு எதிராக நடக்க வாய்ப்புள்ளதால் போதிய ஆயுதங்களை தளவாடங்களை தயார் நிலையில் வைத்துக் கொள்ள " உலக குகிஜோ பாதுகாப்பு குழு" அறைகூவல் விடுத்துள்ளது.

நவம்பர் 4 கடந்த ஜீலை மாதம் 2 ந்தேதியன்று கொடூரமான முறையில் நடந்தேறிய கோர வீடியோ ஒன்று நவம்பர் 4 அன்று அம்பலத்திற்கு வந்துள்ளது. அந்த வீடியோவில் பிஷ்னுபூர் , சௌராசந்தப்பூர் மாவட்டத்தின் சந்திப்பு பகுதியில் 31 வயது பழங்குடி இனத்தைச் சேர்ந்த டேவிட் துவோலோர் என்பவரை தலையை வெட்டி வீழ்த்தி கொலையுண்ட உடல்மீது பெட்ரோல் ஊற்றிஎரிக்கும் காட்சி வெளியாகி உள்ளது. அதேநாளில் மெய்தி இனத்தை சேர்ந்த 3 பேர் கொலையுண்ட வீடியோவும் வெளிவந்துள்ளது. இப்படியாக தினந்தோறும் கொலை கொள்ளை வன்முறைக் களமாக காட்சியளிக்கிறது மணிப்பூர்.

ஆனால் ஒன்றிய பாஜக அரசோ தனது வெறுப்பு அரசியலை தீமூட்டி வளர்த்துக் கொண்டு வருவதன் விளைவுதான் இன்றுவரை தொடரும் வன்முறை மோதல்களும் கடத்தல்களும் படு கொலைகளும்.

50 ஆயிரத்திற்கும் அதிகமான ராணுவத்தினரை மணிப்பூரில் குவித்து வைத்துள்ளதாக மாநில அரசும் ஒன்றிய அரசும் சொல்கின்றன. ஆனாலும் நாள்தோறும் தீவைப்பு, வாகனங்கள் எரிப்பு, காவல் நிலையங்களிலிருந்து ஆயுதங்கள் கொள்ளை, துப்பாக்கிச்சூடு என தொடர்ந்து அமைதியின்மை, பதற்றம், வன்முறை, மோதல் நீடித்துக் கொண்டேதான் இருக்கிறது.

ஒரு வாரத்திற்கு முன்பு கூட, மணிப்பூர் மாநலத்தின் கங்குப் பகுதியில் இரெங் மற்றும் கரம்வைபே கிராமங்களுக்கடையே மீண்டும் வன்முறை வெடித்துள்ளது. இதில் பொதுமக்களில் 3 பர் கொல்லப்பட்டுள்ளனர். 52க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இதனால் மீண்டும் இவ்விரு சமூக மக்களிடையே பெரும் பீதி உருவாகி நீடித்து வருகிறது. எந்த நேரத்தில் என்ன நிகழுமோ என்ற அச்சத்தில் உறைந்து போயியுள்ளனர் பொதுமக்கள்.

பதற்றம் நிறைந்த மாநிலம் மணிப்பூர் என அந்த மாநில உள்துறை அமைச்சர் அறிவித்ததோடு சரி ஆளும் மாநில பாஜக கூட்டணி அரசும் ஒன்றிய அரசும். கலவரத்தால் பற்றி எரியும் மணிப்பூரில் நிலைமையை கட்டுக்குள் கொண்டு வர உருப்படியான நடவடிக்கைகள்துரிதமான முயற்சிகள் ஏதும் எடுக்கவில்லை. நிலைமை மோசமாகும் விதமாக, மாநில முதல்வர் மெய்தி இனத்தவர் என்பதால் தன் இனத்தவருக்குச் சாதகமாக செயல்படுகிறார். அதன் விளைவு மிக மோசமாக உள்ளது என நடுநிலையாளர்கள் எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

6 மாத காலமாக பற்றி எரியும் மணிப்பூருக்குச் செல்ல இந்திய பிரதமருக்கு மனமில்லை. அக்கறை இல்லை. தன் சொந்தநாட்டுமக்களிடையே அமைதியை நிலைநாட்ட கவலைப்படாத, பிரதமர் மோடியார் இஸ்ரேல் மக்கள் பாதுகாப்பு குறித்து கவலைப்படுகிறார். என்னே கொடுமை..

வடகிழக்கு மாநிலமான ரத்த நிலமாக காட்சியளிக்கும் மணிப்பூரில் அமைதியை கொண்டுவர கிஞ்சித்தும் முயற்சிக்காத மோடி அரசுதான், இன்னொரு மாநிலமான மிசோராத்தை வளம் கொழிக்கும் மாநிலமாக மாற்றுவராம்! பாஜக ஆட்சியில் தொடர்ந்தால..நிச்சயமாக இந்த பொய்யுரைகளுக்கு மிசோராம் மக்கள் மட்டுமல்ல தேர்தல் சந்திக்க உள்ள 5 மாநிலமக்கள் தகுந்த சம்மட்டி அடி கொடுப்பார்கள். அதன்பின் நடக்க உள்ள நாடாளுமன்றதேர்தலிலும்பாஜக மண்ணைக் கவ்வ இந்தியா கூட்டணி கட்சியினர் அணியினர், அயராது விழிப்புணர்வுடன் பாடுபட வேண்டும் என்பதே காலத்தின் தேவை. கட்டாயமும் கூட.

தொடர்புக்கு: 9443120051









# பஞ்சாப் தொடர்ந்த வழக்கில் ஆளுநருக்கு குட்டு வைத்த உச்சநீதிமன்றம்

"மாநில அரசுகள் நீதிமன்றங் களை அணுகிய பிறகே, ஆளுநர் கள் மசோதாக்களின் மீது முடி வெடுப்பது ஏன்?" என்று கேள்வி எழுப்பியிருக்கும் உச்ச நீதிமன்றம், "சட்டப்பேரவையில் நிறைவேற்றப் பட்ட மசோதாக்கள் மீது ஆளுநர் களை முடிவெடுக்க உத்தரவிடு மாறு நீதிமன்றங்களை அணுக வேண் டிய கட்டாயத்தில் மாநில அரசுகள் தள்ளப்பட்டு இருக்கின்றன" என் றும், "இந்தப் போக்கு நிறுத்தப்பட வேண்டும்" என்றும் குறிப்பிட்டுள் ளது.

பஞ்சாப் ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்திற்கு எதிராக, அம் மாநில அரசு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தது. அரசு நிறைவேற்றிய சட்ட மசோதாக்களுக்கு ஒப்பு தல் அளிக்காமல் ஆளுநர் தாமதிப்பதாகவும் மாநில சட்டப்பேர வையை கூட்டுவதற்கும் கூட ஆளு நர் முட்டுக் கட்டையாக இருப்பதாக வும் மனுவில் கூறியிருந்தது.



குறிப்பாக, கடந்த முறை பஞ் சாப் சட்டப்பேரவை கூடியபோது, நிறைவேற்றப்பட்ட 7 மசோதாக்க ளுக்கு ஒப்புதல் தரவில்லை என் றும், இவ்வாறு ஆளுநர் புரோ ஹித் ஒப்புதல் தராமல் நிறுத்தி வைத்துள்ள மசோதாக்களில் நிதி மசோதாவும் அடங்கும் என்றும் குறிப்பிட்டிருந்தது.

இந்த மனு, தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட், நீதிபதிகள் ஜே.பி. பர்திவாலா, மனோஜ் மிஸ்ரா ஆகி யோர் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது.

பஞ்சாப் மாநிலம் சார்பில் மூத்த வழக்கறிஞர் டாக்டர் அபிஷேக் மனு சிங்வி ஆஜராகி வாதாடினார். "மசோ தாக்களை ஆளுநர் நிறுத்தி வைத்தி ருப்பது ஆட்சியை பாதித்துள்ளது" என்று அபிஷேக் மனு சிங்வி கூறினார். சட்டப்பேரவையை கூட்டு வதற்கும் ஆளுநர் தடையாக இருக்கிறார் என்று குறிப்பிட்டார்.

அப்போது, ஒன்றிய அரசுத் தரப்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, குறிப் பிட்ட அந்த மசோதாக்கள் மீது ஆளுநர் 'பொருத்தமான முடிவு களை' எடுத்துள்ளதாகவும், வெள்ளிக்கிழமைக்குள், இது தொடர்பான விவரங்களை தெரி விக்க ஆளுநர் உறுதி அளித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

அப்போது குறுக்கிட்ட தலைமை நீதிபதி டி.ஒய். சந்திர சூட், "ஆளுநர் செயல்பட்டார் என் றால், மாநில அரசு எதற்காக நீதி மன்றத்திற்கு வரப் போகிறது? பிரச் சனை உச்சநீதிமன்றத்திற்கு வரும் போதுதான் ஆளுநர்கள் செயல்படு வார்கள் என்றால், இந்தப் போக்கு நிறுத்தப்பட வேண்டும்; நீங்கள் (மாநிலங்கள்) உச்சநீதிமன்றத் திற்கு செல்லுங்கள், பிறகு ஆளுநர் செயல்படத் தொடங்குவார் என் றால், அது கூடாது" என்று தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் தெரிவித்தார்.

மேலும், "தாங்கள் தேர்ந்தெ டுக்கப்பட்ட ஆட்சியாளர்கள் அல்ல என்பதை ஆளுநர்கள் மறந்துவிடக் கூடாது" என்று ஓங்கிக் குட்டு வைத் தார்.


"மக்கள் நலனுக்காக நிறை வேற்றப்பட்ட மசோதாக்கள் மீது ஆளுநர் நடவடிக்கை எடுப்ப தில்லை. மேலும் அரசு மனு தாக் கல் செய்வது குறித்து அறிக்கை வெளியான பிறகும் கூட, அதை நீதிமன்றத்தில் சந்திப்பதாக கூறு கிறார்" என்பதையும்நீதிமன்றத் தின் கவனத்திற்கு சுட்டிக்காட்டினார்.

அப்போது, பஞ்சாப் வழக்கில், சொலிசிட்டர் ஜெனரல், நிலைமை குறித்து வெள்ளிக்கிழமைக்குள் நிலை அறிக்கையை தாக்கல் செய்வதாக ஒப்புக் கொண்டுள்ள நிலையில், அன்றைய தினமே கேரள அரசின் மனுவையும், தமிழ் நாடு அரசின் மனுவையும் விசாரிப்பதாக தெரிவித்தார்.

# கருப்பு பணத்தின் மறுமுகம்



த.லெனின்




**அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம் புல்லார் புரள விடல்.**

**அருளோடும் அன்போடும் பொருந்தாத வழிகளில் வந்த செல்வத்தின் ஆக்கத்தைப் பெற்று மகிழாமல், அதைத் தீமையானது என்று நீக்கிவிட வேண்டும் என ஆணையிடுகிறது குறள்.**

ஆனால் ஊழலை ஒழிக்க வந்த உத்தம சிகாமணி பிரதமர் மோடி உள்ளிட்டவர்கள் தேர்தல் பத்திரங்கள் மூலம் தங்கள் பணபலத்தை பெருக்க அதனை தெரிவு செய்து கொண்டனர் என்றால் இதை என்னவென்று சொல்வது?

தேர்தல் பத்திரங்கள் அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை அளிக்கும் ஒரு நிதி வழிமுறையாகும். உறுதிமொழிப் பத்திரம் போன்ற இந்த தேர்தல் பத்திரத்தை இந்தியாவின் எந்தவொரு குடிமகனும் அல்லது நிறுவனமும் பாரத ஸ்டேட் வங்கியின் தேர்ந்தெடுக்கப்பட்ட கிளைகளில் இருந்து வாங்கலாம். அவர்கள் விரும்பும் எந்த அரசியல் கட்சிக்கும் தங்களது அடையாளத்தை வெளியிடாமல் நன்கொடை கொடுக்கலாம்.

இந்திய அரசு 2017ல் தேர்தல் பத்திர திட்டத்தை அறிவித்தது. இந்த திட்டம் 29 ஜனவரி 2018 முதல் அரசாங்கத்தால் சட்டப்பூர்வமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது

வாடிக்கையாளரை அறியும் வசதி(KYC) உள்ள வங்கிக் கணக்கு வைத்திருக்கும் எந்த நன்கொடையாளரும் இவற்றை வாங்கலாம். தேர்தல் பத்திரத்தில் பணம் செலுத்துபவரின் பெயர் இடம்பெறத் தேவையில்லை.

இத்திட்டத்தின் கீழ், ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியாவின் குறிப்பிட்ட கிளைகளில் இருந்து ரூ.1,000, முதல் ரூ.10,000, ரூ.1 லட்சம், ரூ.10 லட்சம் மற்றும் ரூ.1 கோடி வரை எந்த மதிப்பிலான தேர்தல் பத்திரங்களையும் வாங்கலாம்.

தேர்தல் பத்திரங்களின் ஆயுள் 15 நாட்கள் மட்டுமே. அவற்றை மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை அளிக்க மட்டுமே பயன்படுத்த முடியும்.

### தேர்தலில் சமநிலை பேணலுக்கு வேட்டு!

மக்களவை அல்லது சட்டப் பேரவைக்கு கடந்த பொதுத் தேர்தலில் பதிவான வாக்குகளில் குறைந்தபட்சம் ஒரு சதவீத வாக்குகளைப் பெற்ற அரசியல் கட்சிகளுக்கு மட்டுமே தேர்தல் பத்திரங்கள் மூலம் நன்கொடை அளிக்க முடியும். அப்படி என்றால் சுயேச்சையாகக் கூட போட்டியிட நமது தேர்தல் முறை அனுமதிக்கிறது. தேர்தலில் சமநிலை பேண வேண்டும் என்பது இதில் தூக்கி வீசப்படுவது வெளிப்படையாக தெரிகிறதா இல்லையா என்பதே நமது கேள்வி

இத்திட்டத்தின் கீழ் ஜனவரி, ஏப்ரல், ஜூலை மற்றும் அக்டோபர் ஆகிய மாதங்களில் 10 நாட்களுக்கு தேர்தல் பத்திரங்களை வாங்கலாம். மக்களவை தேர்தல் நடக்கக்கூடிய ஆண்டில் கூடுதலாக 30 நாட்களுக்கும் இவை வாங்கலாம்.

### கரைபுரண்டோடும் கருப்பு பணம்!

2016–17 மற்றும் 2021–22 க்கு இடைப்பட்ட ஐந்து ஆண்டுகளில் மொத்தம் ஏழு தேசியக் கட்சிகளும், 24 பிராந்தியக் கட்சிகளும் மொத்தம் ரூ.9,188 கோடியை தேர்தல் பத்திரங்கள் மூலம் பெற்றுள்ளன.

இந்த ரூ.9,188 கோடியில் பாரதிய ஜனதா கட்சியின் பங்கு மட்டும் தோராயமாக ரூ.5272 கோடி. அதாவது தேர்தல் பத்திரங்கள் மூலம் அளிக்கப்பட்ட மொத்த நன்கொடையில் 58% பாஜக பெற்றுள்ளது.

அதே காலகட்டத்தில், தேர்தல் பத்திரங்கள் மூலம் காங்கிரஸ் 10% தோராயமாக ரூ.952 கோடியும், திரிணாமுல் காங்கிரஸ் ரூ.767 கோடியும் பெற்றுள்ளது.

ஜனநாயக சீர்திருத்தத்திற்கான அமைப்பின் (ADR) அறிக்கையின்படி, 2017–18 நிதியாண்டுக்கும், 2021–22 நிதியாண்டுக்கும் இடையே தேர்தல் பத்திரங்கள் மூலம் தேசிய கட்சிகள் பெற்ற நன்கொடைகள் 743% அதிகரித்துள்ளது. மறுபுறம், இதே காலகட்டத்தில் தேசிய கட்சிகளுக்கு கார்ப்பரேட் நன்கொடைகள் 48% மட்டுமே அதிகரித்துள்ளன என்றால் இது கரை புரண்டோடும் கருப்புப் பண ஆதிக்கமின்றி வேறு என்ன?

### சர்வதேச பரிந்துரைக்கு எதிராக தேர்தல் பத்திரம்!

ஜி7 நாடுகளின் நிதி நடவடிக்கை பணிக்குழு (FATE) கடந்த 1989 ஆம் ஆண்டு ஜி7 மாநாட்டில் சர்வதேச அளவில் பண மோசடிகளை எதிர்கொள்ள உறுப்பு நாடுகளுக்கு அறிவுறுத்தியது. அதன் பின்பு 2001 ஆம் ஆண்டில் நடைபெற்ற அமெரிக்க இரட்டைக் கோபுர தகர்ப்புக்கு பின்பு பயங்கரவாத அமைப்புகளுக்கான நிதியை தடுக்கும் முயற்சியும் இதோடு இணைத்து மேற்கொள்ளப்பட்டது.

கடந்த 2012ல் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களுக்கு எதிரான முறையில் நிதி கண்காணிக்கப்பட வேண்டும் என்ற அம்சமும இதில் இணைக்கப்பட்டது. பாகிஸ்தான் பயங்கரவாதிகளுக்கு நிதியும் ஆயுதமும் அளிக்கிறது என்பதன் அடிப்படையில் இதிலிருந்து விலக்கப்பட்டதும் பின்பு, அதனை அந்நாடு சரி செய்த பின் இதில் மீண்டும் இணைக்கப்பட்டதும் நடந்தது. பயங்கரவாதத்துக்கு எதிராக தன்னை மார்த்தட்டிக் கொள்ளும் பிரதமரும், பாஜக அரசும் இந்தியா இதில் கையொப்பமிட்டு இருந்தாலும் அதற்கு நேர் எதிராக நவீன பண மோசடிக்கு காரணமான தேர்தல் பத்திரத்தை மட்டும் கெட்டியாக பிடித்துக் கொள்வது ஒரு வகை ஊழல் நடவடிக்கை தான் என்பது விளங்கும்!

### முடியாட்சிக்கு வழிவகுக்கும் அரசியலில் பண ஆதிக்கம்

இந்த ஐந்தாண்டுகளில், 2019–20 ஆம் ஆண்டில் (இது மக்களவைத் தேர்தல் நடைபெற்ற ஆண்டு), தேர்தல் பத்திரங்கள் மூலம் அதிகபட்சமாக ரூ.3,439 கோடி நன்கொடையாக வந்துள்ளதாக ADR தனது ஆய்வில் கண்டறிந்துள்ளது. இதேபோல், 2021–22 ஆம் ஆண்டில் (11 சட்டமன்றத் தேர்தல்கள் நடைபெற்றன), அரசியல் கட்சிகள் தேர்தல் பத்திரங்கள் மூலம் சுமார் 2,664 கோடி ரூபாய் நன்கொடை பெற்றுள்ளது. ஆக, கருப்பு பணத்தை வெள்ளைப் பணமாக்கும் விபரீத யுக்தியே இதன் மூலம் கடைப்பிடிக்கப்படுவது தெளிவாகிறது.

பணத்தின் ஆதிக்கம், அரசியல் மற்றும் ஊழல் ஆகியவற்றின் கலவையானது பண்டைய கிரேக்கத்தில் ஜனநாயகத்தின் தோற்றம் போலவே பழமையானது. அப்போதைய ஏதென்ஸின் நேரடி ஜனநாயகத்தின் போக்குகளை ஆவணப்படுத்திய கிரேக்க வரலாற்றாசிரியர் புளூடார்ச், “வாக்குகளை வாங்குவதும், விற்பதும் தேர்தல்களின் அம்சமாக மாறியது பின்னர், ஊழல் நீதிமன்றங்களையும், ஜனநாய நிறுவனங்களையும் கூட பாதித்தது, மேலும் இராணுவத்தை பணத்தின் முழு அடிமைகளாக மாற்றுவதன் மூலம் இறுதியாக நகரத்தை ஒரு முடியாட்சிக்கு மாற்றியது என்பது அனைவருக்குமான பாடம்!

### உச்ச நீதிமன்றத்தில் வழக்கு!

பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு கடந்த 2018 ஆம் ஆண்டு தேர்தல் பத்திரம் திட்டத்தை அறிமுகம் செய்தது. இந்தத் திட்டத்தின் மூலம், தனிநபர் அல்லது கார்ப்பரேட் நிறுவனங்கள், வங்கி மூலம் தேர்தல் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம். இந்தத் தேர்தல் பத்திரங்களில் வாங்குபவரின் பெயர், முகவரி, இந்த நிதி யாரிடம் இருந்து

## தமிழ் இலக்கிய அரங்கம்

### தமிழ் இலக்கிய ஆளுமைகள் நூற்றாண்டு விழா

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், சேலம் மாவட்டக் குழு சார்பாக தமிழ் இலக்கிய ஆளுமைகள் நூற்றாண்டு விழா மற்றும் புதுவாழ்வு நாவல் வெளியீட்டு விழா சேலம் தமிழ்ச்சங்கம் நூலகம் மேல் மாடியில் நடைபெற்றது. தொமுசி ரகுநாதன் படத்தை சத்தியசீலனும், எழுத்தாளர் புதுமைப்பித்தன் படத்தை கல்பனாவும், எழுத்தாளர் கு.அழகிரிசாமி படத்தை சம்பத் அவர்களும், கவிஞர் தமிழ் ஒளி படத்தை ரவீந்திரன் அவர்களும் திறந்து வைத்தனர்.

மாவட்டத் தலைவர் எழுத்தாளர் பூமி பாலகன் தலைமை உரை ஆற்றினார். மாவட்ட கவுரவத் தலைவர் சுவாமிநாதன் வரவேற்புரை நல்கினார். பரமசிவம் எழுதிய புது வாழ்வு நாவலை எழுத்தாளர் அனுராதா வெளியிட்டார். தமிழறிஞர் தாரை குமாரவேலு, கந்தன், மணிவண்ணன், கணேசன், வழக்கறிஞர் கல்பனா, ரவி ஆகியோர் பெற்றுக் கொண்டனர். நூல் குறித்து திறனாய்வு உரையை ரவீந்திரன் வழங்கினார். சேலம் மாவட்ட இஸ்கப் கௌரவத் தலைவர் மோகன், மாநில செயற்குழு உறுப்பினர் சின்னக்கண்ணன், மாவட்ட செயலாளர் ராமன், தமிழ் செம்மல் கவிஞர் முத்துமாரையன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இலக்கிய ஆளுமைகள் நூற்றாண்டு விழா இன்றைய தேவை ஒரு பார்வை என்ற தலைப்பில் பொதுச்செயலாளர் தோழர் அறம் நூற்றாண்டு காணும் இலக்கிய ஆளுமைகளின் இலக்கியப் பணிகளையும், அந்தப் பணியில் இருந்து நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய கருத்துக்களையும் மிக விரிவாக உரையாற்றினார்.

நிறைவாக நாவலாசிரியர் தோழர் பரமசிவம் ஏற்புரை வழங்கினார். மாவட்டச் செயலாளர் தோழர் கே.வி.ராஜேந்திரன் நிகழ்ச்சியை அருமையாக ஒருங்கிணைத்து வழி நடத்தினார். தோழர் தங்கமணி நன்றி உரை தெரிவித்தார்.

### நூல் வெளியீட்டு விழா

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், நாசரேத் வள்ளுவர் வாசகர் வட்டம், தேரி இலக்கிய வட்டம் இணைந்து நடத்திய ஜி. ஆறுமுகப்பெருமாள் (கண்ணகுமார விஸ்வரூபன்) எழுதிய அப்பாவின் இரண்டாவது மரணம் நூல் வெளியீட்டு விழா நாசரேத்தில் நடைபெற்றது. விழாவிற்கு தமிழ்ப் பேராசிரியர் காசிராஜன் தலைமை உரை வழங்கினார். தொழிற்சங்கத் தலைவர் கிருஷ்ணராஜ் வரவேற்புரை நல்கினார். நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளர் பேராசிரியர் நா.ராமச்சந்திரன் நூலை வெளியிட்டார். தொடுவானம் காலாண்டிதழ் ஆசிரியர் நெல்லை தேவன் நூலின் முதல் பிரதியை பெற்றுக் கொண்டார். நூல் குறித்த ஆய்வுரைகளை பேராசிரியர் ராமச்சந்திரன், தொடுவானம் ஆசிரியர் நெல்லை தேவன், தூத்துக்குடி மாவட்ட தலைவர் அருட்சகோதரி எழிலரசி, தூத்துக்குடி மாநகரச் செயலாளர் பிரபாகரன், தூய சவேரியார் கல்லூரி துணைப் பேராசிரியர் ஜோஸ்பின் பாபா முதலியோர் விரிவாக முன் வைத்தனர். மாநில பொதுச்செயலாளர் அறம் நூல் குறித்து உரையாற்றினார். நிறைவாக ஜி. ஆறுமுகப்பெருமாள் ஏற்புரை வழங்கினார்.

# தேர்தல் பத்திரங்கள்!

பெறப்பட்டது ஆகிய விவரங்கள் மற்றவர்களுக்குத் தெரியாது என்றும்

இது தொடர்பான விசாரணை, தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட், நீதிபதிகள் சஞ்சீவ் கண்ணா, பி.ஆர். கவாய், ஜே.பி. பரிதிவாலா மற்றும் மனோஜ் மிஸ்ரா ஆகிய ஐந்து நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வில் முதல் நாளான 31.10.23 அன்று விசாரணைக்கு வந்தது.

அப்போது மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர்கள் பிரசாந்த் பூஷன், கபில் சிபில் ஆகியோர் தங்களது வாதத்தை முன்வைத்தனர். அதில் அவர்கள், “தேர்தல் தொடர்பான இந்த திட்டம் என்பது இந்திய இறையாண்மைக்கு எதிரானது, இந்திய ஜனநாயகத்துக்கும் எதிரானது. இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தும் போது, தேர்தல் ஆணையம் மற்றும் ரிசர்வ் வங்கி ஆகியவை எதிர்ப்பு தெரிவித்தது. அரசியல் கட்சிகளுக்கு யார் நிதியளிக்கிறார்கள் என்ற விபரத்தை அறிந்துகொள்ளும் உரிமை வாக்காளர்களுக்கு நிச்சயமாக இருக்கிறது. இதுபோன்ற நன்கொடை ஊழலை தான் ஊக்குவிக்கிறது” எனவும் தெரிவித்தனர். தற்போது உச்ச நீதிமன்றத்தின் முன் எழுப்பப்பட்ட ஒரு பிரச்னை என்னவென்றால், இந்தியாவில் துணை நிறுவனங்களைக் கொண்டு இயங்கும் வெளிநாட்டு நிறுவனங்கள் இந்திய அரசியல் கட்சிகளுக்கு நிதியளிக்க அனுமதிக்கும் வகையில் வெளிநாட்டு பங்களிப்பு ஒழுங்குமுறை சட்டம் (FCRA) திருத்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, சர்வதேச அளவில் லாபி செய்பவர்களுக்கு தங்களது சொந்த நோக்கத்தை இந்திய அரசியலிலும் ஜனநாயகத்திலும், திணிக்கவும் நிறைவேற்றிக் கொள்ளவும் வாய்ப்புகள் பெறுகிறது.

நிறுவனங்கள் தாங்கள் எந்த அரசியல் கட்சிக்கு நிதி அளித்திருக்கிறோம் என்பதை தங்களது ஆண்டு லாப நஷ்ட கணக்குகளில் தெரிவிக்க தேவையில்லை என நிறுவனச் சட்டம் 2013ல் கொண்டு வரப்பட்ட சட்டத் திருத்தம் குறித்து இந்த மனு கேள்வியெழுப்பியிருக்கிறது. இது அரசியல் நிதியளிப்பில் ஒளிவுமறைவு அற்ற தன்மையை ஒழித்துவிடும் என்றும் இதுபோன்ற நிறுவனங்களுக்கு தேவையற்ற சலுகைகளை வழங்க அரசியல் கட்சிகளை ஊக்குவிக்கும் என்றும் மனுதாரர்கள் கூறுகின்றனர்.

### அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் நிதி உதவி!

தேர்தல்கள் மற்றும் கட்சிகளுக்கு பொது நிதியுதவி (மற்றும் சில சந்தர்ப்பங்களில், வேட்பாளர்கள்) என்பது பெரும்பாலான ஜனநாயக நாடுகளில் ஒரு சமீபத்திய வளர்ச்சியாகும், இருப்பினும் இந்த கருத்து ஒரு நூற்றாண்டுக்கு முந்தையது. லத்தீன் அமெரிக்க நாடுகள் அரசியல் கட்சிகளுக்கு அரசு மானியங்களை முதலில் அறிமுகப்படுத்தியது. 1920 களில் உருகுவே அரசு மானியங்களை அறிமுகப்படுத்தியது, பின்னர் கோஸ்டாரிகா மற்றும் அர்ஜென்டினாவால் இது பின்பற்றப்பட்டது. இப்போது, ஏழுக்கும் மேற்பட்ட லத்தீன் அமெரிக்க ஜனநாயக நாடுகளுக்கு அரசு நிதி உதவி உள்ளது.

1950 களில் ஜெர்மனி அரசு நிதியுதவியை அறிமுகப்படுத்தியது, இது இப்போது இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் உட்பட பல ஜனநாயக நாடுகளாலும் பின்பற்றப்படுகிறது. அமெரிக்காவைப் பொறுத்தவரை, 1960 களில் ஜனாதிபதி ஜான் எஃப். கென்னடியின் ஆட்சிக் காலத்தில் அரசியல் கட்சிகளுக்கு பொது நிதியுதவி வடிவம் பெற்றது. ஜனாதிபதி பொதுத் தேர்தலுக்கான பொது நிதியுதவி முறையாக 1966 இல் அறிமுகப்படுத்தப்பட்டது, மேலும் வாட்டர்கேட் ஊழலுக்குப் பிறகு, இந்த கருத்து அமெரிக்காவில் தீவிரமான பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டது.

சுருக்கமாக, அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் பொது நிதியுதவி என்பது உலகம் முழுவதும் மிகவும் பொதுவான சீர்திருத்தமாக வளர்ந்து வருகிறது. உலகில் இன்று 116 நாடுகள் (68%) அரசியல் கட்சிகளுக்கு நேரடி பொது நிதியை அறிமுகப்படுத்தியுள்ளன. பெரும்பான்மையான ஐரோப்பிய நாடுகள் (86%) அரசியல் கட்சிகளுக்கு அரசு மானியங்களை வழங்குகின்றன, ஜெர்மனி மற்றும் இங்கிலாந்து ஆகியவை முன்னணி எடுத்துக்காட்டுகளாக உள்ளன. இந்நிலையில் இந்திரஜித் குப்தா தேர்தல் சீர்திருத்தக் குழுவின் பரிந்துரைகளை சீர்தூக்கி பார்ப்பது மிகவும் நல்லது என்பது தெளிவாகிறது

தேர்தல் பத்திரம் தொடர்பான வழக்கு 01.11.23 அன்று மீண்டும் உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், “இந்த திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ரகசியம் மட்டுமே கடைப்பிடிக்கப்படுகிறது. முழுமையான ரகசியம் கடைப்பிடிக்கவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட ரகசியத்தை கடைப்பிடிப்பது தான் இந்த திட்டத்தில் உள்ள பிரச்சனை. தேர்தல் நிதி பத்திரங்கள் பற்றிய தகவலை ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்கள் எளிதில் தெரிந்து கொள்ளலாம். யார் நன்கொடை கொடுத்தார்கள் என்ற விவரத்தை எதிர்க்கட்சிகள் தெரிந்துகொள்ள முடியாது. ஆனால், எதிர்க்கட்சிகளுக்கு யார் நன்கொடை கொடுத்தார்கள் என்ற விவரத்தை விசாரணை அமைப்புகள் மூலம் ஆளுங்கட்சி தெரிந்து கொள்ளலாம். இதுதான் இந்த திட்டத்தில் உள்ள பிரச்சனை” என்று கருத்து தெரிவித்தனர்

அந்த தனிநபரோ அல்லது கார்ப்பரேட் நிறுவனமோ இந்த பத்திரங்களை கொண்டு தங்களுக்கு விருப்பமான கட்சிகளுக்குத் தேர்தல் நிதி வழங்கலாம். மேலும், அந்த கட்சிகள் 15 நாட்களுக்குள் எந்தவித கட்டுப்பாடுமின்றி இதனை நிதியாக மாற்றிக் கொள்ளலாம். அப்படி இல்லையென்றால், அந்தத் தேர்தல் பத்திரத் தொகை பிரதமர் நிவாரண நிதியில் டெபாசிட் செய்யப்படும் என்று அந்தத் திட்டத்தில் கூறப்பட்டது. இந்தத் திட்டத்தில் வெளிப்படைத்தன்மை இல்லை என எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டி வந்தன. இதையடுத்து, அரசியல் கட்சிகள் தேர்தல் பத்திரங்கள் மூலமாக நிதியைப் பெறுவது என்ற திட்டத்தை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

இதனிடையே, மத்திய அரசு சார்பில் தலைமை வழக்கறிஞர் வெங்கடரமணி இது குறித்து கடந்த அக்டோபர் 29 ஆம் தேதி இது தொடர்பான எழுத்துப்பூர்வ வாதத்தை தாக்கல் செய்தார். அப்போது அதில், “கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தாமல் அனைத்தையும் அறிந்துகொள்ளும் பொதுவான உரிமை இருக்க முடியாது. கட்சி பெறும் நிதி விபரங்களை மக்கள் அறிந்துகொள்ள உரிமை இல்லை. எல்லாத் தரவுகளையும் பொதுமக்களுக்கு வழங்க வேண்டிய அவசியம் இல்லை. எனவே, இந்த விவகாரம் நீதிமன்றத்தின் வரம்பிற்குள் அடங்காது” என்று ஒரே போடாக போட்டிருந்தார். இதுதான் இந்துத்துவ வகை ஜனநாயகமா? ஒரு நாடாளுமன்ற தொகுதிக்கு 95 லட்சத்திலிருந்து சுமார் ஒரு கோடி ரூபாய் தான் அரசியல் கட்சிகள் செலவழிக்க முடியும் என்ற தேர்தல் ஆணையத்தின் பரிந்துரை இருந்தும் பாரதிய ஜனதா பெற்ற பெற்றுள்ள பணம் எத்தனை மடங்கு அதிகமானது என்பதையும் சீர்தூக்கி பார்த்தால், இது முழுக்க முழுக்க தேர்தல் முறையில் சம வாய்ப்பை அரிக்கும் செயல் என்பதோடு கருப்பு பணத்தை முதலீடு செய்யும் மிக மோசமான முறை என்பதும் விளங்கும். எனவே மக்களாட்சி மாண்புற தேர்தல் பத்திரங்கள் தடை செய்யப்பட வேண்டும். உச்ச நீதிமன்றத்தில் விடை கிடைக்குமா என்ற எதிர்பார்ப்பில் சாமானிய இந்தியர்கள்!

**தொடர்புக்கு 9444481703**

ரயில் பெட்டிகளை உற்பத்தி செய்ய தனியார் நிறுவனமா?

## ஐசிஎப் ரயில் பெட்டி தொழிற்சாலையை கொடுக்காதே!

**மத்திய தொழிற்சங்கங்கள் கண்டனம்**



மத்திய தொழிற்சங்கங்களின் தலைவர்களான, சஞ்சீவ ரெட்டி (ஐஎன்டியுசி), அமர்ஜித் கவுர் (ஏஐடியுசி), ஹர்பஜன் சிங் (எச்எம்எஸ்), தபன்சென் (சிஐடியு), சங்கர் தாஸ்குப்தா (ஏஐயுடியுசி), சிவசங்கர் (டியுசிசி), மனாலி ஷா (சேவா), ராஜீவ் தீம்ரி (ஏஐசிசிடியு), மு.சண்முகம் (எல்பிஎப்) அசோக் கோஷ் (யுடியுசி) ஆகியோர் விடுத்துள்ள கூட்டறிக்கை வருமாறு:

இந்திய அரசுக்கு சொந்தமான சென்னை பெரம்பூரில் உள்ள ஐசிஎஃப் தொழிற்சாலையிலேயே, தனியார் நிறுவனம் ஒன்று வந்தேபாரத் ரயில் பெட்டிகளை உற்பத்தி செய்யவும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும் அனுமதித்து அரசு செய்துள்ள ஒப்பந்தத்தை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்று மத்திய தொழிற்சங்கங்கள் வலியுறுத்துகின்றன.

இதனை எதிர்த்து போராடும் மிசிதி தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழுவிற்கு முழு ஆதரவை தெரிவித்துள்ளன.

நமது நாட்டில் ரயில் பெட்டிகளை உற்பத்தி செய்யும் மிக முக்கியமான தொழிற்சாலைகளில் ஒன்று சென்னை பெரம்பூரில் உள்ள ஐசிஎஃப் ஆகும். இந்த நிறுவனம் தயாரித்த, வந்தே பாரத் ரயிலை இப்போது தனியார் நிறுவனம் உற்பத்தி செய்யவும், பராமரிக்கவும் இந்திய அரசு ஒப்பந்தம் செய்துள்ளது. இந்த வேலைகளை ஐசிஎஃப் தொழிற்சாலையிலேயே தனியார் நிறுவனம் செய்து கொள்ளலாம் என ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது.

நாடு விடுதலை அடைந்த பிறகு 1955ம் ஆண்டு இந்த ஐசிஎஃப் தொழிற்சாலை நிறுவப்பட்டது. இந்திய ரயில்வேயில் உள்ள மிகப்பெரிய ரயில் பற்றி உற்பத்தி தொழிற்சாலை இதுவாகும். இதன் தகுதி, திறன், தரம் ஆகியவை இந்திய அரசில் அனைவராலும் போற்றி புகழப்பட்டதாகும்.

அதிகரித்து வரும் ரயில் பெட்டி தேவைகளை நிறைவு செய்ய, இந்த தொழிற்சாலையை இன்னும் விரிவாக்கி நவீனப்படுத்தி, அதில் பணி புரிய தகுதி வாய்ந்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும். தொழிற்சாலையில் ஏற்கனவே பயிற்சியாளர்களாக பயிற்சி பெற்றவர்கள், சமூக, பொருளாதார ரீதியில் பின்தங்கிய பட்டியல் இனத்தவர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்தவர்களுக்கு வேலை தர வேண்டும்.

அதை விடுத்து இந்த நாட்டின் சொத்தான ஐசிஎப் தொழிற்சாலையை பயன்படுத்தி, அதில் தனியார் நிறுவனம் ரயில் பெட்டிகளை உற்பத்தி செய்யவும், பராமரிக்கவும் அனுமதிக்க ரயில்வே அமைச்சகம் முடிவு செய்து இருப்பது துரதிர்ஷ்டவசமானதாகும்.

ஐசிஎப் நிறுவனம்தான் வந்தே பாரத் ரயில்களை வடிவமைத்து, இதுவரை 40 ரயில்களைத் தயாரித்திருக்கிறது. அவை இந்தியா முழுவதும் பல்வேறு வழித்தடங்களில் வெற்றிகரமாக ஓடி மக்களுக்கு சேவை செய்து கொண்டு இருக்கின்றன. அரசின் இந்த தீய முடிவை எதிர்த்து ஐசிஎஃப் தொழிலாளர்கள் போராட்ட களத்தில் இறங்கி உள்ளனர்.

அரசுக்கு சொந்தமான, திறன் பெற்ற தொழிற்சாலையிலேயே தனியாரை கொண்டு ரயில் பெட்டி தயாரிக்க அனுமதிப்பது தேசிய நலன்களுக்கு எதிரானதாகும் என்று நாங்கள் உறுதியாக கருதுகிறோம்.

தற்போதுள்ள மனித ஆற்றலைக் கொண்டு உற்பத்தி இலக்கை எட்ட முடியவில்லை என்று ஐசிஎப் நிர்வாகம் கூறுகிறது. இந்த தொழிற்சாலையில் பல்வேறு கேட்டகிரிகளில் 1400 மேற்பட்ட பணியிடங்களில், இளமையான திறமை மிக்க தொழிலாளர்களை நியமிப்பதை, ரயில்வே போர்டுதான் அனுமதி அளிக்காமல் தடுத்து வருகிறது.

ஒப்பந்தத்தைப் படித்து பார்த்தால், ரயில் பெட்டியை தயாரிக்கும் அந்த தனியார் நிறுவனத்திற்கு, இலவச மின்சாரம், இலவசமாக அழுத்தப்பட்ட காற்று, குடிநீர், ஓய்வு அறைகள், கேண்டீன் வசதி ஆகியவற்றை ஐசிஎப் நிறுவனமே வழங்குவதோடு, ஐசிஎப் ஏற்கனவே தயாரித்த ரயில் பெட்டிகளின் வரைபடங்களையும் டிசைன்களையும் தாராளமாக பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் அனுமதி தரப்பட்டுள்ளது.

ஐசிஎப் நிறுவனத்தின் செலவில், அந்த தனியார் நிறுவனத்துக்கு இவ்வளவு சலுகைகள் அளித்து ரயில்வே போர்டு ஏன் பாதுகாக்கிறது என்பதை எம்மால் புரிந்து கொள்ள இயலவில்லை. தொழிற் சங்கங்களோடு எவ்வித கலந்துரையாடலும் இல்லாமல் தன்னிச்சையாக நிர்வாகம் இந்த முடிவை எடுத்திருக்கிறது.

இந்த ஒப்பந்தத்தின் காரணமாக ஐசிஎப் தொழிற்சாலை மீது ஏற்படுத்தப்படும் தாக்குதல் குறித்தும், இந்த ரயில் பெட்டிகளை நம்பி இரவும் பகலும் பயணிக்கும் பல்லாயிரக்கணக்கான பயணிகளின் பாதுகாப்பு குறித்தும் அக்கறை கொண்டு, மேற்சொன்ன முடிவை திரும்ப பெற வேண்டும் என்று ரயில்வே அமைச்சகத்தையும் ரயில்வே போர்டையும் மத்திய தொழிற்சங்கங்கள் கேட்டுக் கொள்கின்றன.

இந்த முடிவை எதிர்த்து ஐசிஎப் தொழிற்சங்க கூட்டுக்குழு வாயில் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் போன்ற கண்டன நடவடிக்கைகளைத் துவக்கி உள்ளது. இதில் தலையிடாமல் பிரச்சனை தொடர அனுமதித்தால், தொழிலாளர்கள் கடும் அதிருப்திக்கு உள்ளாவார்கள். அது எதிர்காலத்தில் உற்பத்தி திறனையும், தொழில் உறவையும் சீர்குலைத்து விடும்.

எனவே இந்த முடிவை திரும்ப பெறுமாறு மத்திய தொழிற்சங்கங்கள் ஒன்றிய அரசை வலியுறுத்துகின்றன. இதனை எதிர்த்து போராடிவரும் ஐசிஎப் தொழிற்சங்கங்களின் கூட்டுக் குழுவுக்கு முழு ஆதரவு தெரிவிக்கின்றன.

மதுரை, மேலூர் பகுதியில்

# கிரானைட் குவாரி ஏலத்தை கைவிடுக

## இரா.முத்தரசன் வலியுறுத்தல்

மதுரை, மேலூர் பகுதியில் கிரானைட் குவாரி ஏலத்தை கைவிடுக என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் வலியுறுத்தி உள்ளார்.

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம் உள்ளிட்ட பல பகுதிகளில் உரிமம் பெறாத, சட்ட விரோத கிரானைட் தொழிலில் பெரும் ஊழல் நடத்ததை நாடறியும். இது தொடர்பாக உயர்நீதிமன்ற உத்தரவின்படி இந்திய ஆட்சிப் பணி அதிகாரி உ.சகாயம் விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டது. இந்த ஆணைய விசாரணை பல அதிர்ச்சியான தகவல்களை கண்டறிந்தது. இதில் 1.10 லட்சம் ரூபாய் மதிப்பிலான இயற்கை வளம் கொள்ளை போயிருப்பதை ஆதாரப்பூர்வமாக உறுதி செய்து தெரிவித்தது.

இதன் தொடர்ச்சியாக கிரானைட் குவாரிக்கு உரிமம் வழங்குவதற்கு தடை விதித்து 2012 ஆம் அரசாணை வெளியிடப்பட்டது. கிரானைட் முறைகேடு தொடர்பாக மேலூர் பகுதியில் மட்டும் 200க்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, அவைகள் நீதிமன்ற விசாரணையில் இருந்து வருகின்றன.

இந்த நிலையில் அண்மையில் மேலூர் வட்டம் சேக்கிப்பட்டி, அய்யாப்பட்டி, திருச்சுனை உள்ளிட்ட கிராமங்களில் பல வண்ண குவாரிகள் அமைக்க தமிழ்நாடு அரசின் கனிம வளத்துறை அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இந்த குவாரிகள் உரிமம் தொடர்பாக 31.10.2023 ஆம் தேதி ஏல அறிவிப்பும் செய்யப்பட்டுள்ளது.

மேலூர் சுற்று வட்டாரப் பகுதிகளில் கிரானைட் குவாரிகள் அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து வந்த பொதுமக்கள், 26.10.2023 ஆம் தேதி முதல் காத்திருப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்தப் பகுதியில் குவாரிகள் அமைப்பதற்கான தேவை குறித்து அரசு தரப்புப் பிரதிநிதிகள் பேச்சு வார்த்தை, போராட்டக்காரர்களை அமைதிப்படுத்த இயலவில்லை. இந்தப் போராட்டத்தில் நேரடியாக தலையிட்டு, கிரானைட் குவாரி ஏலத்தை நிறுத்தி வைக்க வேண்டும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது. தனது அறிக்கையில் இரா.முத்தரசன் கூறியுள்ளார்.

# ஒன்றிய அரசின் ஜனநாயக விரோத செயல்கள்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

ஒன்றிய அரசின் ஜனநாயக விரோத செயல்கள் கண்டனத்துக்குரியது என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளதாவது

இந்திய ஒன்றியத்தில் பாரதிய ஜனதா கட்சி ஆட்சி பொறுப்பு ஏற்ற திலிருந்து, எதிர்கட்சிகளையும், எதிர் கருத்துக்களையும் ஒடுக்கும் முயற்சியில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகிறது.

இதற்கு, சட்டப்பூர்வ நிறுவனங்களான அமுலாக்கத்துறை, வருமானவரி துறையை பயன்படுத்துகிறது. மேலும் துணை ராணுவ படைகளையும் பயன்படுத்துகிறது. இவையாவும் மாநிலங்களின் இறையாண்மை மீதான தாக்குதலாகும்.

சமீபத்தில் கூட டெல்லி துணை முதல்வர் மணிஷ் சிசோடியா, நாடாளுமன்ற உறுப்பினர் சஞ்சய் சிங், டெல்லி தொழிலாளர்கள் துறை அமைச்சர் ராம்குமார், முதலமைச்சர் கெஜ்ரிவால் என பலர் மீதும் அமுலாக்கத்துறையின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

ராஜஸ்தான் மாநிலத்தில் மட்டும் 25 இடங்களுக்கு மேல் சோதனைகள் நடத்தப்படுகிறது. இவையாவும் எதிர் கட்சிகள், ஒன்றிய அரசுக்கு எதிராக மிக உறுதியாக மாற்றுக் கருத்துக்கள் கூறியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டில் திமுகவின் ஆட்சி, அதன் மக்கள் நல்வாழ்வு திட்டங்களை பொறுத்துக் கொள்ள முடியாமல், 'இந்தியா' கூட்டணிக்கு வலு சேர்க்கும் திமுகவின் உறுதியான கொள்கை நிலைபாடுகளை சகித்துக் கொள்ள முடியாமல் திமுகவின் அமைச்சர்கள், அதன் ஆதரவாளர்களின் இல்லங்களில் வருமானவரி துறை, அமுலாக்கத்துறை சோதனைகளில் ஈடுபடுகிறது.

தற்போதும் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு இல்லத்திலும், அலுவலகத்திலும் அத்துமீறி சோதனைகள் நடைபெறுகிறது.

எதிர்கட்சிகளை குறிவைக்கிற ஒன்றிய அரசின் இத்தகைய நடவடிக்கைகள் யாவும் சட்டத்திற்கும், நாடாளுமன்ற ஜனநாயக மரபுகளுக்கும் எதிரானது, வன்மையான கண்டனத்திற்குரியது.

இந்தியாவில், வரி ஏய்ப்பு செய்து, சட்டத்திற்கு புறம்பாக குறுகிய காலத்திலேயே வருமானங்களை பல மடங்கு அதிகரித்துக் கொண்ட பாஜக ஆட்சியாளர்கள், அதன் தலைவர்களின் இல்லங்களில், அலுவலகங்களில் இதுபோல் சோதனைகள் நடத்தப்படுவதில்லை.

ஒவ்வொரு நாளும் 'இந்தியா' கூட்டணி வெற்றி உறுதியாகி வரும் அரசியல் சூழலில் எப்படியாவது எதிர்கட்சிகளை அச்சுறுத்தி ஒற்றுமையை சிதைக்கும் முயற்சியில் ஒன்றிய அரசு ஈடுபடுவது, இந்திய ஜனநாயக விழுமியங்களுக்கு எதிரானது என்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு சுட்டிக்காட்டி எச்சரிக்க விரும்புகிறது.

எத்தகைய ஜனநாயக விரோத செயல்களிலும் ஒன்றிய பாஜக அரசு ஈடுபட்டாலும், எந்தச் சூழலிலும் வரும் நாடாளுமன்ற தேர்தலில் பாஜக வெற்றி பெற இயலாது என்பதனை தேர்தல் காலம் பாடமாக உணர்த்தும் என்று தனது அறிக்கையில் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# திண்டுக்கல்லில் ஊரக வளர்ச்சி துறை தொழிலாளர் மாநாடு!



தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறையில் மதிப்பூதியம், தொகுப்பூதியம், சிறப்பு காலமுறை ஊதியம், தின ஊதியம் பெற்று பணிபுரியும் மேல்நிலைத் தொட்டி இயக்குபவர்கள், தூய்மை பணியாளர்கள், தூய்மை காவலர்கள், பள்ளி சுகாதாரப் பணியாளர்கள், தூய்மை பாரத இயக்க மாவட்ட வட்டார ஒருங்கிணைப்பாளர்கள், சுகாதார ஊக்குநர்கள், அனைத்து திட்ட கணினி இயக்குபவர்கள், மகளிர் திட்ட ஊழியர்கள், சமூகத் தணிக்கையாளர்கள் உள்ளிட்ட ஊழியர்களுக்கான மாநாடு திண்டுக்கல்லில் 2024 ஜனவரி 7ஆம் தேதி அன்று நடைபெறுகிறது.

இதில் அமைச்சர்கள் ஐ பெரியசாமி, ஆர் சக்கரபாணி, ஏஐடியுசி தலைவர்கள் கே.சுப்பராயன், கே.சந்தானம், எம்.ராதாகிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்கின்றனர். இதற்கான வரவேற்பு குழுக் கூட்டம் நவம்பர் 5ஆம் தேதி, திண்டுக்கல்லில் நடைபெற்றது. தமிழ்நாடு முழுவதும் இருந்து 200க்கும் மேற்பட்ட மண்டல, கிளை நிர்வாகிகள் பங்கேற்றனர்.

தமிழ்நாடு ஊரக வளர்ச்சி துறை தொழிலாளர் சங்கம் தலைவர் மு.ராமாநிதி தலைமை தாங்கினார். பொதுச்செயலாளர் கிருஷ்ணசாமி மாநாட்டுத் திட்டப் பணிகளை விவரித்தார். ஏஐடியுசி தேசிய செயலாளர் டி எம் மூர்த்தி நிறைவுரையாற்றினார்.

ஒரு லட்சம் பேருக்கும் அதிகமான ஊழியர்களைத் திரட்டுவது என முடிவு செய்யப்பட்டது.

# தமிழகத்தில் கலகத்தை உருவாக்க பாஜக முயற்சி

## சிபிஐ கண்டனம்

தமிழகத்தில் கலகத்தை உருவாக்க பாஜக முயற்சி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கண்டனம்

தமிழ்நாட்டில் தாங்கள் கால் ஊன்ற முடியாத நிலையில், கலவரங்களை உருவாக்கி அதன் மூலம் அரசியல் ஆதாயம் தேடும் மிக மலிவான முயற்சியில் ஈடுபட்டுள்ள பாஜகவின் வன்முறை அரசியலை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாக கண்டிக்கின்றது.

தங்களின் கொள்கை பலத்தால் அல்லது தங்களது ஒன்றிய ஆட்சியின் மூலம் கடந்த 10 ஆண்டுகளில் செய்திட்ட சாதனைகள், தேர்தலில் கொடுத்திட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றியது என எதனையும் வெளிப்படுத்திட இயலாத நிலையில், கலகம் செய்து அதன் மூலம் அரசியல் ஆதாயம் தேடும் அற்பத்தனமான செயலில் பாஜக ஈடுபட்டு வருவது கடும் கண்டனத்திற்குரியது.

பொது இடங்களில் கொடி ஏற்றுவது குறித்து உரிய அனுமதியை உரியவர்களிடத்தில் பெறாமல், வேண்டுமென்றே கொடி நடுவது, அதனை தடுக்க முயற்சிக்கும் காவல் துறையினரை தாக்குவது, தரம் தாழ்ந்த முறையில் நடந்து கொள்வது, இதன் மூலம் கலவரத்தை உருவாக்கி சட்டம், ஒழுங்கு பிரச்சனையை உருவாக்கி, தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது என்று கூக்குரல் எழுப்புவது போன்ற கீழ்த்தரமான நடவடிக்கையில் பாஜகவினர் ஈடுபட்டு வருகின்றனர்.

பாஜகவின் வன்முறை செயல்பாடுகளை கண்டிக்க வேண்டிய அக் கட்சியின், அகில இந்திய தலைமை நால்வர் கொண்ட விசாரணைக் குழு அமைத்து, விசாரணைக்கு அனுப்புகின்றது.

அக்குழு ஒரே நாளில் விசாரணை முடித்து தமிழ்நாடு அரசின் மீது பழி சுமத்தி பேட்டி கொடுத்ததுடன், அரசின் மீது புகார் தெரிவித்து ஆளுநரிடம் புகார் மனு கொடுத்து சென்றுள்ளனர். மேலும் இப்புகார் குறித்து ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா நடவடிக்கை எடுப்பார் என்று மிரட்டும் தொனியில் கூறுகின்றார். இவை யாவும் நாடாளுமன்ற ஜனநாயக மரபுகளை சிதைப்பதாகும்.

மொத்தத்தில் தமிழ்நாட்டில் திட்டமிட்டே சட்டம், ஒழுங்கு பிரச்சனைகளை உருவாக்கிட பாஜக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மிக வன்மையாக கண்டிக்கத்தக்கது என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

வியாசர்பாடியில்

# தலித் மக்களின் உரிமைகளுக்காக கையெழுத்து இயக்கம்

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு முதல் கையெழுத்து



தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம், தமிழ் மாநில விவசாய தொழிலாளர்கள் சங்கம், தீண்டாமை ஒழிப்பு முன்னணி, அகில இந்திய விவசாயிகள் சங்கம் சார்பில் வடசென்னை மாவட்டம் வியாசர்பாடி மகசின்புரம் பகுதி டாக்டர் அம்பேத்கர் சிலை அருகில், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாவட்ட தலைவர் இரா.மோ.சந்தோஷ்குமார், செயலாளர் க.சுப்பிரமணி, பொருளாளர் சு.பாஸ்கர் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநில பொதுச் செயலாளர் மு.வீரபாண்டியன் ஆகியோர் முதல் கையெழுத்திட்டு துவக்கி வைத்தார்கள். திமுக மாவட்ட செயலாளர் தா.இளைய அருணா, தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.கருணாநிதி, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் மாவட்ட தலைவர் டில்லிபாபு எம்.சி. தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநில செயலாளர் எஸ்.கே. சிவா, தீண்டாமை ஒழிப்பு முன்னணி தலைவர் ராஜ்குமார், சிபிஐ மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் ஆ.சுப்பிரமணி ஆகியோர் வாழ்த்தி பேசினார்கள்.

தஒவாஇ தேசியக்குழு உறுப்பினர் லி.உதயகுமார், டி.சண்பகம். வரவேற்று பேசினார். பெரம்பூர் பகுதி செயலாளர் எம்.சி.தில்குமார், தலைவர் தளபதி, சிபிஐ கிளை செயலாளர் இலா.பார்த்திபன், எம்.அய்யனார், ஆர்.சிகாமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் ஏஐடியுசி மாவட்ட செயலாளர் அருள், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாதாவரம் பகுதி செயலாளர் அஜய் கோஷ், வட்ட செயலாளர்கள் காத்தவராயன் உட்பட முன்னணி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# கொள்கைக்காக வாழ்ந்து மறைந்தார் டபிள்யு.ஏ.தயரத்னா


■ டபிள்யு.ஏ.தயரத்னா

நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன் இந்தியாவும் இலங்கையும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் காலனி நாடுகளாக இருந்தன. இலங்கையில் பெரும் தோட்ட அதிபரின் குடும்பத்தில் பிறந்தவர் டபிள்யு.ஏ.தயரத்னா. அவருடைய தாத்தா சிங்கம்பட்டியில் இருந்ததாலும், அவருடைய மாமா வால்பாறையில் காங்கிரஸ் தலைவராக இருந்ததாலும் தமிழ்நாட்டிற்கு வந்து விட்டார். வந்தவர் தேயிலை எஸ்டேட்டில் உதவி அதிகாரி பொறுப்பில் அமர்த்தப்பட்டார். தோட்ட தொழிலாளியின் மகளை காதல் மணம் செய்து கொண்டார்.

தோட்ட அதிகாரிகளின் உரிமைகளுக்காக பிரச்சனைகளுக்காக தோட்ட முதலாளிகளுடன் நேரடியாக வாதிட வேண்டிய நிலையில், எஸ்டேட் ஸ்டாப் யூனியன் ஆப் சவுத் இந்தியா (ESUSI) வால்பாறை பகுதி செயலாளராக இருந்து செயல்பட்டார். நிர்வாகம் பல வழிகளில் ஆசைவார்த்தைகள் கூறி தங்கள் பக்கம் இழுக்க முயற்சித்தது. ஆனால் என் தந்தை எதற்கும் ஆசைப்படவில்லை. பொய்யான குற்றச்சாட்டை உருவாக்கி பணியிலிருந்து டிஸ்மிஸ் செய்தது. வேலை நீக்கம் செய்யப்பட்ட பிறகு தோட்ட அதிகாரிகள் சங்கத்தில் முழுநேர பணி செய்யும்படியும் அவர் பெற்று வந்த சம்பளத்தை முழுமையாக அதிகாரிகள் சங்கத்திலிருந்து தந்து விடுவதாகவும் கூறினார். அதையும் என் தந்தை ஏற்றுக் கொள்ளவில்லை.

தமிழ்நாடு தோட்ட தொழிலாளர் சங்கத்தின் நிர்வாகிகள் கூடி என் தந்தையை சங்கத்தின் பொதுச் செயலாளர் பொறுப்பை ஏற்றுக் கொள்ள கோரினர். அப்போது என் தந்தை கட்சி மாவட்ட குழுவிலும் உறுப்பினராக இருந்தார்.

தோட்ட முதலாளிகள் சங்கம் தென் இந்திய அளவில் செயல்பட்டது. அதைப் போலவே தோட்ட தொழிலாளர்களின் அமைப்பையும் உருவாக்க முடிவு எடுக்கப்பட்டு தென் இந்திய தோட்ட தொழிலாளர் அமைப்பு உருவாக்கப்பட்டது. இதன் தலைவராக கேரள மாநில சட்டமன்ற உறுப்பினர் சி.கி.குரியன் செயல்பட்டார். செயலாளராக என் தந்தை பணியாற்றினார். ஏஐடியுசியில் மாநில நிர்வாகக்குழு உறுப்பினராக, கோவை மாவட்ட துணைத்தலைவராக பணியாற்றியுள்ளார்.

எங்களுடைய அம்மா புற்று நோயால் 9.5.1988ல் காலமானார். அவருடைய மறைவு என் தந்தையை வெகுவாக பாதித்தது. சேலத்திலிருந்த நான் அவருடன் சென்று இருக்க முடியவில்லை. அவர் வீட்டில் இருந்த நாட்களை விட தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்காக வாதாட போராட செலவழித்த நாட்கள் தான் அதிகம்.

சம்பள உயர்வுக்காக நடந்த போராட்டத்தில் கைது செய்யப்பட்டு கோவை சிறையில் இருந்துள்ளார். கால்பந்து விளையாட்டிலும், கிரிக்கெட் விளையாட்டிலும் ஆர்வமுடையவராக இருந்தார். அதிகாரியாக இருந்த பொழுது நாடகத்தில் நடித்துள்ளார். வீரபாண்டிய கட்டபொம்மன் நாடகத்தில் ஆங்கிலேய அதிகாரியாக நடித்தார்.

தன் இறுதி நாள் வரை தான் ஏற்றுக் கொண்ட உறுதிமொழிப்படி வாழ்ந்து மறைந்தார்.

-டி.வி.கருணைதாஸ்
தொடர்புக்கு: 9994823206

# கள்ளக்குறிச்சியில் அரிசி ஆலை கழிவுகளால் பொதுமக்கள் அவதி



கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலத்தில் இருந்து கூகையூர் செல்லும் சாலையில் ரெயில்வே கேட்டின் அருகே பெரிய அளவில் அரிசி ஆலைகள் அமைந்துள்ளது. இந்த ஆலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் சாலையோரத்தில் மிகுந்த துர்நாற்றத்துடன் தேங்கி நிற்கிறது. சாலையில் செல்வோர் வாகன ஓட்டிகள் முகம் சுழித்துக் கொண்டு செல்கின்றனர். இந்த அரிசி ஆலையின் அருகில் உள்ள அரசு மருத்துவமனைக்கு கர்ப்பிணிகள், குழந்தைகள் மற்றும் உடல்நலம் பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சைக்காக வந்து செல்கின்றனர். இது மட்டுமின்றி இதன் அருகே அரசு மாணவர் விடுதியும் உள்ளது. ஆலை கழிவுகளால் இருமல், கண் எரிச்சல், சுவாசக் கோளாறு, மூச்சுத் திணறல், ஆஸ்துமா உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்படுவதாக தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அலுவலர்கள், மாவட்ட நிர்வாகம் உரிய ஆய்வு செய்து ஆலையிலிருந்து வெளியேறும் கழிவுகளை தொழில்நுட்ப ரீதியாக கட்டுப்படுத்தவும், ஆலை விதிமுறைகளை பின்பற்றவும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட

# குறுவைப் பயிர்களுக்கு நிவாரணம் ரூ.35,000 வழங்க கோரி ஆர்ப்பாட்டம்



டெல்டா மாவட்டங்களில் நடப்பு பருவத்தில் பயிரிடப்பட்ட குருவை சாகுபடிகள் தண்ணீர் இன்றி ஏறத்தாழ மூன்று இலட்சம் ஏக்கர் வறட்சியால் பாதிக்கப்பட்டு முற்றிலும் பாழானது. பாதிக்கப்பட்ட குறுவைப் பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.35 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும் என்று கோரிக்கையை முன்வைத்து தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு விவசாய சங்க மாவட்ட தலைவர் ஆர்.இராமச்சந்திரன் தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் சோ. பாஸ்கர் முன்னிலை வகித்தார். கட்சி மாவட்ட செயலாளர் முத்து உத்திராபதி ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்த உரையாற்றினார். விவசாய சங்கத்தின் தேசிய குழு உறுப்பினர் அ.பன்னீர்செல்வம் முடித்து வைத்து பேசினார்.

ஆர்ப்பாட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட துணைச் செயலாளர் கோ.சக்திவேல், மாவட்ட பொருளாளர் ந.பாலசுப்பிரமணியன், ஏஐடியூசி மாவட்ட செயலாளர்கள் துரை.மதிவாணன், ஆர். பி.முத்துக்குமரன், அரசு பணியாளர் சங்க மாநில துணை தலைவர் தி.திருநாவுக்கரசு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

மயிலாடுதுறை மாவட்டத்தில்

# ஆண் வாக்காளர்களை விட பெண் வாக்காளர்களே அதிகம்

**மாவட்டா ஆட்சியர் தகவல்**

மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் கூட்டரங்கில் வரைவு வாக்காளர் பட்டியலை மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி இ.ஆ.ப., வெளியிட்டார். அப்போது அவர் கூறியதாவது.

மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள், திருத்தம் மற்றும் நீக்கல் ஆகியவை கள ஆய்வு செய்யப்பட்டு ஏற்கப்பட்டுள்ளது. மயிலாடுதுறை மாவட்டத்திற்கு உட்பட்ட 160.சீர்காழி (தனி) சட்டமன்ற தொகுதி, 161. மயிலாடுதுறை சட்டமன்ற தொகுதி மற்றும் 162. பூம்புகார் சட்டமன்ற தொகுதி ஆகியவற்றிற்கான வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது.

சீர்காழி சட்டமன்ற தொகுதியில் மொத்தம் 2,42,991 வாக்காளர்கள் எண்ணிக்கையும், மயிலாடுதுறை சட்டமன்ற தொகுதியில் மொத்தம் 2,30,483 வாக்காளர்கள் எண்ணிக்கையும், பூம்புகார் சட்டமன்ற தொகுதியில் மொத்தம் 2,64,409 வாக்காளர்கள் எண்ணிக்கையும், மொத்தம் 7,37,883 வாக்காளர்கள் உள்ளனர். தற்போதும் அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் ஆண் வாக்காளர்களைவிட பெண் வாக்காளர்கள் அதிகம் உள்ளனர். இருப்பினும் மாவட்ட அளவில் ஆண், பெண் பாலின சதவிகிதம் 1028 லிருந்து தற்சமயம் 1017 ஆக குறைந்துள்ளது.

மாவட்டத்தில் 18 முதல் 19 வயதுடைய இளம் வாக்காளர் 4,671 நபர்கள், மூத்த குடிமக்கள் 14,755 நபர்கள், மாற்றுத்திறனாளிகள் 5,821 நபர்கள் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர். மக்களாட்சியை வலுப்படுத்துவதில் தகுதியுள்ள அனைவரும் 100 சதவிகிதம் வாக்காளர் பட்டியலில் இடம்பெறுவதோடு மட்டுமல்லாமல், 100 சதவிகிதம் வாக்களிக்க வேண்டும் எனவும், இதற்கான நடவடிக்கைகளில் பொதுமக்கள், தன்னார்வ அமைப்புகள், அரசியல் கட்சியினர் முனைப்புடன் ஈடுபட வேண்டும் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.

# புதிய டாஸ்மாக் மதுபான கடையை மூட வேண்டும்

**மாமன்ற உறுப்பினர் சாந்தி சந்திரன் கோரிக்கை**




கோவை மாநகரம் வார்டு எண் 41, 74, 75 சங்கமிக்கும் பகுதியான மருதமலை ரோட்டில் உள்ள மயானத்திற்கு பின்புறத்தில், புதிதாக டாஸ்மாக் மதுபானக் கடை ஒன்று திறக்கப்பட்டுள்ளது. இதற்கு மாமன்ற உறுப்பினர் சாந்தி சந்திரன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மேற்கு மண்டல செயலாளர் என்.சந்திரன் உட்பட பொதுமக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் மாவட்ட ஆட்சியரிடம் புதிதாக திறக்கப்பட்ட இந்த மதுபான கடையை மூட வேண்டும். பஸ் நிறுத்தம் அருகில் இருப்பதால் பள்ளி குழந்தைகள் மற்றும் கல்லூரி மாணவர்களுக்கும் இடையூறு ஏற்படும். எனவே, இதை உடனடியாக மூட வேண்டும் என்றும் வலியுறுத்தி மனு கொடுத்துள்ளனர்.

# ஊரக வளர்ச்சிதுறை தொழிலாளர்கள் சங்க மாநில மாநாடு வரவேற்புக் குழு கூட்டம்

தமிழ்நாடு ஊரக வளர்ச்சி துறை தொழிலாளர்கள் சங்க மாநில மாநாடு வரவேற்பு குழு கூட்டம், திண்டுக்கல்லில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாநிலத் தலைவர் மு. இராமாநிதி தலைமையேற்றார். ஏஐடியுசி மாவட்ட தலைவர் பாலன், மாவட்ட செயலாளர் ராஜாங்கம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் மணிகண்டன் உள்ளிட்டோர் பங்கேற்றுப் பேசினார்கள்.

தமிழ்நாடு ஊரக வளர்ச்சிதுறை தொழிலாளர்கள் சங்க மாநில மாநாடு 7.1.2024 அன்று திண்டுக்கல்லில் நடத்துவது என அறிவிக்கப்பட்டது. மாநில மாநாடு வரவேற்பு குழு தலைவராக ஏஐடியுசி மாவட்ட துணைத்தலைவர் ஏ.பி. மணிகண்டன் தேர்வு செய்யப்பட்டார். ஏஐடியுசி தேசிய செயலாளர் டி. எம். மூர்த்தி சிறப்புரையாற்றினார். மாநில பொருளாளர் ராஜேந்திரன் நன்றி கூறினார்.

# பழங்குடியினர் போராட்டம்!

தாளவாடி ஒன்றியம். தலமலை ஊராட்சிக்குட்பட்ட இட்டரை, தடசலட்டி கிராமங்களுக்கு செல்லும் வனச் சாலையை சீரமைக்க வேண்டும், மாவநத்தம், பெஜலட்டி, தடசலட்டி, இட்டரை, ராமரணை கிராமங்களுக்கு மும்முனை மின்சார வசதிவேண்டும், பெஜலட்டி பழங்குடியினர் உண்டி, உறைவிடப் பள்ளியில் படிக்கும் மாவநத்தம் செட்டில்மென்ட் பள்ளி குழந்தைகள், போக்குவரத்து வசதி இல்லாததால், மதியமே வீடு திரும்பி விடுகின்றனர்.

அவர்களுக்கு வனத்துறையின் மூலம் வாகன வசதி செய்து தர வேண்டும் என்கிற கோரிக்கைகளை முன்வைத்து தலமலை வனச்சரக அலுவலகம் முன்பு தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# திருச்சியில் ப.மாணிக்கம் பிறந்தநாள் விழா

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளர் சுதந்திரப் போராட்ட தியாகி ப.மாணிக்கம் அவர்களின் 102 வது பிறந்த தினத்தை முன்னிட்டு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திருச்சி மாவட்ட அலுவலகத்தில் அவரது படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் கட்சியின் மத்திய கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் ம. செல்வராஜ், ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் க.சுரேஷ், சிபிஐ மாவட்ட செயலாளர் எஸ்.சிவா ,துணைச் செயலாளர் சி. செல்வகுமார், பகுதிக் குழு செயலாளர்கள் இரா. சுரேஷ் முத்துச்சாமி, எஸ்.பார்வதி, மாணவர் பெருமன்றம் மாநிலப் பொருளாளர் க.இப்ராகிம், இளைஞர் பெருமன்ற எஸ். முருகேசன், வங்கி ஊழியர் சங்க ஜி. ராமராஜ், ஜனசக்தி உசேன், ஏஐடியுசி மாவட்ட தலைவர் வே. நடராஜா, மாதர் சங்க க. ஆயிஷா உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டார்கள்.

அரசு மருத்துவமனை நிர்வாக சீர்கேட்டை கண்டித்து

# பாடைகட்டி போராட்டம்



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே வைத்தீஸ்வரன்கோயில் அரசு மருத்துவமனையில் போதுமான மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களை நியமிக்க வேண்டும், மருத்துவமனைக்கு தேவையான அளவிற்கு உயிர் காக்கும் மருந்துகள் வழங்கிட வேண்டும் போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பாடை கட்டி ஆர்ப்பாட்டம் பேரூராட்சி உறுப்பினர் வித்யா தேவி சுரேஷ், விதொச ஒன்றிய செயலாளர் எஸ். ராமச்சந்திரன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் சீனிவாசன் தலைமையில் மாவட்ட செயலாளர் பெ. வீரராஜ் தொழிற்சங்கத்தின் மாவட்ட செயலாளர் கே. ராமன், விச ஒன்றிய செயலாளர் கி. வரதராஜன் உள்ளிட்ட தோழர்கள் மற்றும் கட்சி உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட கம்யூனிஸ்ட் கட்சி யினர்களை சீர்காழி போலீசார் வழிமறித்து பாடையை பிடுங்கி எரிந்து தடுத்து நிறுத்தினார்கள். இதனால் காவல்துறை யினருக்கும் போராட்டக்காரர்களுக்கும் லேசான தள்ளுமுள்ளு ஏற்பட்டது. பிறகு போராட்டக்காரர்களை கைது செய்தனர்.

## தமிழகத்துடன் குமரி மாவட்டம் இணைக்கப் போராடிய தலைவர்களுக்கு மரியாதை

குமரி மாவட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில், குமரிமாவட்டம் தாய் தமிழகத்துடன் இணைய போராடிய போராளிகளுக்கு வீரவணக்கம் செலுத்தும் நிகழ்வு கட்சியின் மாவட்ட செயலாளர் தா.சுபாஷ் சந்திர போஸ் தலைமையில் நடைபெற்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட பொருளாளர் பி.தாமரைசிங், மாவட்டத் துணைச்செயலாளர்கள் எஸ்.அனில்குமார், ஜி.சுரேஷ்மேசியதாஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஜீவா சிலைக்கு மூத்த தோழர் ஆரல் குருசாமி, மார்ஷல் நேசமணி சிலைக்கு தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற மாநிலத்தலைவர் எஸ்.கே.கங்கா, களபோராளி குஞ்சன் நாடார் சிலைகளுக்கு பூதலிங்கம் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். நிகழ்வில் மாநகரச் செயலாளர் ஆர்.இசக்கிமுத்து, பொருளாளர் கே.நாகராஜன், ஆரல் சுப்பிரமணியம், புஷ்பராஜ், ஆர்.செல்வராணி, பூதைக்கிளைச்செயலாளர் தா.மகேஷ், சுகதேவ், பேராசிரியர் சுந்தரம், சுரேஷ்சிங், செல்வசுப்பிரமணியம் ஆகியோர் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

## வினாடி - வினா விடைகள்

1. ரொட்டிகளும் ரோஜாக்களும் (அமைதி)
2. பெட்ரோகிராட் நகரில் நடந்த சர்வதேச மகளிர் தின ஆர்ப்பாட்டம்
3. “அனைத்து அதிகாரமும் சோவியத்துகளுக்கே!”
4. இரு தரப்பினரும் துப்பாக்கிச்சூடு நடத்த ஆர்வம் காட்டாமல், மணிக்கணக்கில் பேச்சுவார்த்தை நடத்தினர்.
5. சொந்த நாட்டு மக்கள் (ரஷ்யர்கள்) மீது துப்பாக்கிச் சூடு நடத்த ஆணையிட்டதால், வீரர்கள் கிளர்ச்சியில் இறங்கினர்.
6. அமைதிக்கான ஆணை

# நெல்லையில் பட்டியலின இளைஞர்கள் மீது சாதிய ஆணவத் தாக்குதல்

## சிபிஐ கண்டன ஆர்ப்பாட்டம்




நெல்லையில் பட்டியலின இளைஞர்கள் மீது நடத்தப்பட்ட ஜாதிய ஆணவத் தாக்குதலைக் கண்டித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியது.

**நெல்லை:** நெல்லை மாநகரம், மணிமூர்த்தீஸ்வரம் பகுதியில் பட்டியல் இன இளைஞர்கள் மீது நடைபெற்ற சாதி ஆணவ தாக்குதலை கண்டித்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நெல்லை மாவட்ட குழு சார்பாக வள்ளியூர் மாநகரில் மாநகரச் செயலாளர் கலைமுருகன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஏஐடியுசி மாநில தலைவர் எஸ். காசி விஸ்வநாதன் கண்டன உரையாற்றினார்.

சிபிஐ நெல்லை மாவட்ட செயலாளர் (பொறுப்பு) ஆர்.சடையப்பன், மாவட்ட துணைச் செயலாளர்கள் ஏ.சேதுராமலிங்கம், நண்பா கே.முத்துகிருஷ்ணன், சிபிஐ களக்காடு ஒன்றிய செயலாளர் கே.முருகன், வி.தொ.ச மாவட்ட செயலாளர் எஸ்.ஏ.பி.பாலன், த.ஒ.வா.இ மாவட்ட செயலாளர் பி.சுகுமாரன், சிபிஐ மாவட்ட குழு உறுப்பினர் எம்.லெனின் முருகானந்தம், களக்காடு ஒன்றிய பொருளாளர் ஆயூப்கான், பணகுடி செயலாளர் பன்னீர்செல்வம், ஏர்வாடி நகர செயலாளர் பாண்டி, மற்றும் ராதாபுரம் தாலுகா தோழர்கள் வேம்பு சுப்பையா, என்.எஸ். மணியன் ஆகியோர் கலந்து கொண்டனர். ஆறுமுகம் அவர்கள் நன்றி கூறினார்.

**வடசென்னை:** தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் வடசென்னை மாவட்ட குழு சார்பில் மாவட்ட தலைவர் இரா.மோ.சந்தோஷ்குமார் தலைமையில் வியாசர்பாடியில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாநில பொதுச் செயலாளர் மு.வீரபாண்டியன், மாநில செயலாளர் கீ.சு.குமார், தேசியக்குழு உறுப்பினர் லி.உதயகுமார், வடசென்னை மாவட. செயலாளர் க.சுப்பிரமணி, மாநில குழு உறுப்பினர் டி.செண்பகம், பெரம்பூர் பகுதி செயலாளர் எம்.சி.தில்குமார் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினார்கள்.

கட்சியின் வடசென்னை மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் ஆ.சுப்பிரமணி, வட்ட கிளை செயலாளர்கள் இரா.பார்த்திபன், நாகராஜ் ஏ.ஐ.டி.யு.சி. மாவட்ட செயலாளர் அருள், பெரம்பூர் தொகுதி குழு உறுப்பினர்கள் க.ராஜாராம், ஜெகதீஸ் லட்சுமி, ஜெகநாதன், சரவணகுமாரி, எஸ்.ராஜாராம் உட்பட ஏராளமான முன்னணி தோழர்கள் கலந்து கொண்டனர்.

பத்திரிகையாளரை மதரீதியாக இழிவுபடுத்திய

# ஓய்வுபெற்ற காவல்துறை அதிகாரி பொன்.மாணிக்கவேலுக்கு வலுக்கும் எதிர்ப்பு

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழியில் உள்ள சட்டநாதர் கோவிலுக்கு சிலை கடத்தல் தடுப்பு பிரிவின் முன்னாள் ஐ.ஜி பொன்.மாணிக்கவேல் 29.10.2023 அன்று வந்திருந்தார். அங்கு சாமி கும்பிட்ட அவர், சிலைகள் மற்றும் செப்பேடுகள் வைக்கப்பட்டிருந்த அறைகளையும் பார்வையிட்ட பிறகு கோவில் வளாகத்திலேயே பத்திரிகையாளர்களிடம் பேசினார்.

அப்போது, அறநிலையத்துறை மற்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மீது பல்வேறு புகார்களைக் கூறினார். பின்னர் அவரிடம் கேள்வி எழுப்பிய பத்திரிகையாளர் ஒருவரின் பெயரைக் கேட்ட பொன்.மாணிக்கவேல், அவர் இஸ்லாமிய சமூகத்தை சேர்ந்தவர் என்பதை தெரிந்துகொண்டார். உடனே அந்தப் பத்திரிகையாளரிடம் “கோவிலைப் பற்றி விசாரிப்பதற்கு உங்களுக்கு யோக்கியதை இல்லை” என்று மத ரீதியாக இழிவுபடுத்தும் வகையில் பேசினார். அந்தப் பத்திரிகையாளர் கோவிலுக்குள் வந்ததே குற்றம் என்பது போன்றும் பொன்.மாணிக்கவேல் கூறினார். இதனால் அதிருப்தியடைந்த பத்திரிகையாளர்கள் அவரிடம் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

சாதி, மத பாகுபாடுகள் இன்றி பத்திரிகையாளர்கள் பணியாற்றி வரும் நிலையில், மதரீதியாக இழிவுபடுத்தியும், பிரிவினையைத் தூண்டும் வகையிலும் ஓய்வுபெற்ற காவல்துறை அதிகாரி பொன். மாணிக்கவேல் பேசியதற்கு பத்திரிகையாளர்களும் பல்வேறு அமைப்புகளும் கண்டனங்களைத் தெரிவித்துள்ளன.

# இராஜபாளையத்தில் உள்ளாட்சி பணியாளர்கள் ஆர்ப்பாட்டம்

அரசு அறிவித்தபடி கொரோனா கால ஊக்கத் தொகை ரூபாய் 15 ஆயிரம் வழங்க வேண்டும், தூய்மை காவலர்களை நிரந்தரம் செய்ய வேண்டும், குறைந்தபட்ச சம்பளமாக மாதம் ரூபாய் 21ஆயிரம் வழங்க வேண்டும், ஓய்வூதியம் மாதம் 9 ஆயிரம் வழங்க வேண்டும், தீபாவளி போனஸாக ரூபாய் 5 ஆயிரம் வழங்க வேண்டும், மாதச்சம்பளத்தை உள்ளாட்சி நிர்வாகமே நேரடியாக பணியாளர்களுக்கு வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி விருதுநகர் மாவட்ட தூய்மை காவலர் மற்றும் உள்ளாட்சி பணியாளர்கள் சங்கம் ஏஐடியுசி தொழிற்சங்கத்தின் சார்பில், ராஜபாளையம் வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பு சங்க மாவட்ட செயலாளர் கே.மாரியப்பன், சங்க ஒன்றிய செயலாளர் எம்.லட்சுமி ஆகியோர் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஏஐடியுசி மாவட்ட அமைப்பு செயலாளர் வி.ரவி, சிபிஐ மேற்கு ஒன்றிய செயலாளர் எஸ்.கணேசமூர்த்தி, கிழக்கு ஒன்றிய



செயலாளர் அ.ராமசந்திரன் பேசினார்கள். ஏராளமான தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

இராஜபாளையம் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் சிங்கராஜ் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் கோரிக்கை மனுவை பெற்றுக் கொண்டனர். மேலும் மாதச்சம்பளத்தை எவ்வித தாமதமின்றி வழங்குவதற்கும் சீருடை மற்றும் பாதுகாப்பு சாதனங்கள் உடனே வழங்க ஏற்பாடு செய்வதாகவும் மற்ற கோரிக்கைகளை அரசிற்கு பரிந்துரை செய்வதாக தெரிவித்தனர்.

# கிருஷ்ணன்கோவிலில் தொடர் திருட்டு: நடவடிக்கை கோரி சிபிஐ ஆர்ப்பாட்டம்

விருதுநகர் மாவட்டம் திருவில்லிபுத்தூர் கிருஷ்ணன் கோவில் பகுதியில் தொடர் திருட்டு நடைபெற்று வருகிறது. காவல்துறையில் பலமுறை புகார் கூறியும் திருட்டு தொடர்கிறது.

திருட்டை தடுக்க இரவு ரோந்தை காவல்துறை அதிகரிக்கவும், திருட்டு போன பொருட்களை மீட்டுத்தர கோரி கிருஷ்ணன்கோவில் பிரதான சாலையில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பொன்னுபாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ தலைமை வகித்தார். தேசியக்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, ஒன்றிய செயலாளர் பலவேசம் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

# மூன்று மாத கூலி பாக்கி கேட்டு விவசாய தொழிலாளர் சங்கம் ஆர்ப்பாட்டம்!

## ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு




கிராமப்புறத்தில் உள்ள விவசாய தொழிலாளர்களுக்கு வேலை வழங்கும் பொருட்டு, மத்திய அரசின் வேலை உறுதியளிப்பு சட்டத்தின் கீழ் மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதியளிப்புத் திட்டம் நாடு முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது மூன்று மாத காலமாக கூலி வழங்கப்படவில்லை. தீபாவளி பண்டிகை நெருங்கி வரும் நேரத்தில் கூலி வழங்கப்படாததால் இந்த வேலையை மட்டுமே நம்பி வாழும் மக்கள் பெரும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். இது தொடர்பான ஆர்ப்பாட்டம் தமிழ்நாடு முழுவதும் நடைபெற்றது.

**ஈரோடு:** எனவே கூலியை உடனடியாக வழங்ககோரி ஈரோடு வடக்கு மாவட்டம் சத்தியமங்கலம், தாளவாடி, பவானிசாகர் மற்றும் டி. என். பாளையம் ஆகிய நான்கு வட்டாரங்களில் வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பாக திரண்டு "மோடியே கூலி கொடு" எனும் முழக்கத்தோடு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சத்தியமங்கலம் வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு சங்கத்தின் சத்தியமங்கலம் வடக்கு ஒன்றிய செயலாளர் லட்சுமி தலைமை வகித்தார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சத்தியமங்கலம் வடக்கு ஒன்றிய செயலாளர் எம்.சுரேந்தர், தெற்கு ஒன்றிய செயலாளர் எஸ்.சி.நடராஜ், தொழிற்சங்க தலைவர் ஸ்டாலின் சிவகுமார் உள்ளிட்டோர் ஆர்ப்பாட்டத்தை விளக்கி பேசினர். சங்கத்தின் தெற்கு ஒன்றிய செயலாளர் சி.ரவிச்சந்திரன் நன்றி கூறினார்.

பவானிசாகர் வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு, கட்சியின் பவானிசாகர் வடக்கு ஒன்றிய செயலாளர் பி.எல். வேலுமணி தலைமை வகித்தார். கட்சி வடக்கு மாவட்ட துணை செயலாளர் கே.சக்திவேல் ஆர்ப்பாட்டத்தை விளக்கி பேசினார்.

தாளவாடி வட்டாரத்தில் சங்கத்தின் தாளவாடி வட்டார செயலாளர் காளசாமி தலைமையிலும், ஆசனூரில் கட்சி கிழக்கு ஒன்றிய செயலாளர் அருள்சாமி தலைமையிலும், கடம்பூரில் கட்சியின் மாவட்ட குழு உறுப்பினர் கடம்பூர் ராமசாமி தலைமையிலும், டி. என். பாளையம் வட்டாரத்தில் கட்சியின் மாவட்ட செயலாளர் எஸ். மோகன்குமார் தலைமையிலும் என ஆறு மையங்களில் ஐந்தாயிரம் பேர் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

**திருத்துறைப்பூண்டி:** தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கம் திருத்துறைப்பூண்டி ஒன்றிய, நகர குழுக்களின் சார்பில் நாகை சாலையில் உள்ள தலைமை தபால் அலுவலகம் முன்பு எம். மகாலிங்கம் மற்றும் ஆர். வாசுதேவன் ஆகியோர் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

100 நாள் வேலை தொழிலாளர்களுக்கு மூன்று மாத காலமாக ஊதியம் வழங்கப்படவில்லை. நிலுவையில் உள்ள ஊதிய தொகையினை தொழிலாளர்களுக்கு வழங்கிடவும், தீபாவளியை முன்னிட்டு விவசாய தொழிலாளர்களுக்கு ரூபாய் ஐந்தாயிரம் வழங்கிட வேண்டும் என்கின்ற கோரிக்கை முழக்கத்தோடு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கட்சியின் முன்னணி தலைவர்களில் ஒருவருமான கோ.பழனிச்சாமி எக்ஸ்.எம்.எல்.ஏ., கட்சியின் மாநில குழு உறுப்பினர் கே. உலகநாதன் எக்ஸ்.எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்துகொண்டு கண்டன உரை நிகழ்த்தினார்கள். வழக்கறிஞர் எம்.வையாபுரி, இரெ.ஞானமோகன், பி.வி. சந்திர ராமன், வி. ஜவகர், டி. பி சுந்தர், அ. குமரேசன், கே. ராஜேந்திரன் மற்றும் விவசாய தொழிலாளர்கள், சங்க பொறுப்பாளர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு ஒன்றிய மாநில அரசுக்கு எதிராகவும் கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

**திருப்பூர் புறநகர்:** திருப்பூர் புறநகர் மாவட்டம் உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் எரிசனம்பட்டி கிராமத்தில் தமிழ் மாநில விவசாய தொழிலாளர்கள் சங்கத்தின் சார்பில் ஏ.பழனிசாமி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் திருப்பூர் புறநகர் மாவட்ட செயலாளர் இசாக், வி.தொ.ச. மாவட்ட செயலாளர் வி.பி.பழனிசாமி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் சி.சுப்பிரமணியம், தாலுகா கமிட்டி செயலாளர் வி.சௌந்தரராஜன், துணை செயலாளர் என்.கிருஷ்ணசாமி, சங்க செயலாளர் ரமேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டனர்.

**கரூர்:** கரூர் மாவட்டம் தாந்தோனி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பாக விவசாய தொழிலாளர் சங்கத்தின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு சங்கத்தின் மாவட்ட செயலாளர் ஆர்.தங்கவேல் தலைமை தாங்கினார். கோரிக்கைகளை விளக்கி மாவட்டத் தலைவர் பி.பாலன் பேசினார். கட்சியின் மாவட்டச் செயலாளர் கே.என்.நாட்ராயன் சிறப்புரையாற்றினார்.

ஆர்ப்பாட்டத்தை வாழ்த்தி தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட பொறுப்பாளர் எம்.பி.செல்வம், கட்சியின் மாவட்டக் குழு உறுப்பினர் ஆர்.சிவசண்முகசுந்தரம் , தாந்தோனி ஒன்றியச் செயலாளர் ஆர்.நடராஜன் ஆகியோர் பேசினர். சங்கத்தின் மாவட்டத் துணைத் தலைவர் எஸ்.அஞ்சலிதேவி நன்றி தெரிவித்துப் பேசினார்.

**மயிலாடுதுறை:** மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி ஒன்றியம், கொள்ளிடம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் முற்றுகை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். முன்னதாக பழைய பேருந்து நிலையத்தில் இருந்து ஒன்றிய அரசை கண்டித்து கோஷங்களை எழுப்பி முக்கிய வீதி வழியாக பேரணியாக வந்தனர். இதில் ஒன்றிய செயலாளர் வே.நீதிசோழன் தலைமையில், மாவட்ட செயலாளர் அ.சீனிவாசன், வி.ச.மாவட்ட செயலாளர் பெ.வீரராஜ் மற்றும் கொள்ளிடம் ஒன்றியத்தில் ஜெயசக்திவேல் தலைமையில் கே.எஸ். சிவராமண் மற்றும் அரங்க பொறுப்பாளர்கள் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.


**நாகப்பட்டினம்** இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் சார்பாக வேதாரண்யம் ஒன்றியத்தில், 100 நாள் ஊதியத்தை வழங்காததை கண்டித்தும், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை தகுதியானவர்களுக்கு உடன் வழங்கிடவும், கடந்த ஒரு மாத காலமாக கூட்டுக் குடிநீர் வராத கண்டித்தும் மாறுகொண்டனாறு, முல்லியாற்றில் தேங்கியுள்ள வெங்காய தாமரை அகற்றிட கோரி சாலை மறியல் போராட்டம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றிய செயலாளர் ஆர். பாலகுரு, தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க ஒன்றிய செயலாளர் பா. முருகானந்தம் தலைமையில் நடைபெற்றது. கட்சியின் மாவட்ட செயலாளர் சிவகுரு பாண்டியன், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் டி. நாராயணன் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் எம். ஏ. செங்குட்டுவன், என். வீரப்பன், எஸ். இளவரசன், வி. ராஜதுரை, மாரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### விவசாயத் தொழிலாளர் சங்கத்தினர்

# பட்டா கேட்டு வட்டாட்சியர் அலுவலகம் முற்றுகை

தாளவாடி வட்டம்,தலமலை,நெய்தாளபுரம்,இக்கலூர்,தாளவாடி, மல்லன்குழி,பயனபுரம்,திகனாரை ஆகிய ஊராட்சிகளைச் சேர்ந்த சுமார் 400 க்கும் மேற்பட்ட ,வறுமைக் கோட்டிற்கும் கீழ் வாழும் விவசாயத்தொழிலாளர்கள் பட்டா கேட்டு மனுக்களை தளவாடி வட்டாட்சியர் அலுவலகத்தில் 8 மாதங்களுக்கு முன்பாக கொடுத்திருந்தனர் .

பல மாதங்களாகியும் இம்மனுக்கள் மீது எவ்வித நடவடிக்கையையும் வட்டாட்சியர் அலுவலகம் மேற்கொள்ளாததால், தாளவாடி வட்டாட்சியர் அலுவலகம் முன்பு நூற்றுக்கணக்கானோர் முற்றுகையில் ஈடுபட்டனர். இதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட துனைச் செயலாளர் கே.சக்திவேல்,விவசாயத் தொழிலாளர் சங்க தாளவாடி



வட்டாரச் செயலாளர் ஜே.காளசாமி,ஏஐடியூசி தலைவர் எம்.மோகன் ஆகியோர் வட்டாட்சியருடன் பேச்சுவார்த்தை நடத்தியதின் அடிப்படையில் போராட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டது.

# பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மயமாக்காதீர்!

## ஏஐடியுசி மாவட்ட மாநாடு தீர்மானம்



ஏஐடியுசி நாகை மயிலாடுதுறை மாவட்ட மாநாடு நாகையில் நடைபெற்றது. மாநாட்டுக்கு மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் எம்.செல்வராஜ் எம்.பி. தலைமை தாங்கினார். ஏ.ஐ.டி.யூ.சி. மாவட்ட பொருளாளர் மகேந்திரன் முன்னிலை வகித்தார்.

கட்சியின் மாநில துணை செயலாளர் மு.வீரபாண்டியன் சிறப்புரையாற்றினார். நாகை, மயிலாடுதுறை மாவட்ட செயலாளர்கள் சிவகுரு பாண்டியன், சீனிவாசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நாகை, மயிலாடுதுறை என இரு மாவட்டமாக பிரிக்கப்பட்டுள்ளது. இதில் நாகை மாவட்டத்தில் மாவட்ட தலைவர் எம்.செல்வராஜ் எம்.பி., மாவட்ட செயலாளர் மகேந்திரன், மாவட்ட பொருளாளர் கே.சுரேஷ், மயிலாடுதுறை மாவட்ட தலைவர் ராஜ்மோகன், மாவட்ட செயலாளர் கே.ராமன், மாவட்ட பொருளாளர் ஜெகதீஸ்வரன் ஆகியோர் ஒரு மனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

பெட்ரோல் டீசல் உள்ளிட்ட விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த வேண்டும். உணவு மற்றும் மருந்து பொருட்கள் மீதான ஜிஎஸ்டி வரியை ரத்து செய்து, அதன் விலை உயர்வை கட்டுப்படுத்த வேண்டும். பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மயமாக்க கூடாது. 100 நாள் வேலை திட்டத்திற்கான மத்திய அரசின் நிதியை குறைக்க கூடாது. 100 நாள் வேலையை 200 நாட்களாக உயர்த்தி நாள் ஒன்றுக்கு 600 ஊதியம் வழங்க வேண்டும் என்று மாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# வடசென்னை வி.லட்சுமய்யா மறைவு



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 47வது வட்ட கிளை தோழர் வி.லட்சுமய்யா (வயது 42) உடல்நலக்குறைவால் மரணமடைந்தார். அவருடைய உடலுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வடசென்னை மாவட்ட செயலாளர் வெங்கடேஷ் வேம்புலி மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.

கட்சியின் ஆர். கே. நகர் பகுதி செயலாளர் ஜெய்சங்கர், பெரம்பூர் பகுதி செயலாளர் கோட்டி சுரேஷ், மாவட்ட குழு உறுப்பினர்கள் ரவி, நாகராஜ் நத்தானியல், சீனிவாசலு கிளை செயலாளர் மா. மாணிக்கராஜ் உள்ளிட்டோல் கலந்து கொண்டனர்.

### தேனியில் வன்முறையில்

# சுட்டுக்கொல்லப்பட்டவரின் குடும்பத்திற்கு தேனி மாவட்ட தோழர்கள் ஆறுதல்

தேனி மாவட்டம் கம்பம் கூடலூர் சுருளியார் அருகில் வனத்துறையால் சுட்டுக் கொல்லப்பட்ட ஈஸ்வரன் குடும்பத்தினரை, அவரது சொந்த ஊரான,குள்ளப்ப கவுண்டன் பட்டியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின்,மாவட்ட துணை செயலாளர் வே.பரமேஸ்வரன், மாவட்ட செயற்குழு உறுப்பினர் பெ.தங்கம், எம்.வி.கே. கல்யாணசுந்தரம் மற்றும் மதனகோபால் ஆகிய தோழர்கள் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்கள்.

## இந்த வார தம்பிக்குறள்

### 138. பஞ்சமா பாதகம்

**பஞ்சமா பாதகம் பட்டழிந்து போகயாதும்**
**மிஞ்சா திருக்க மிதம்.**

பஞ்சமா பாதகம் (கொலை, களவு, பொய், கள்ளுண்ணல், குருவைப்பழித்தல் ) ஐந்தும் சிறிதளவும் மிஞ்சாமல், அழிந்து போக வேண்டும்.

**நெட்டு நிதானம் இலார்க்கு நீணிலத்து**
**மட்டு மரியாதை இல்.**

பிறரிடம் அளவறிந்து நடக்காமல், மனம் போனபடி நடப்பவர்களுக்கு, உலகில் சிறிதும் மரியாதை கிடைக்காது.

# நூல் நயம்

## தியாக யாத்திரை



இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து மக்களுக்கு தொண்டு செய்து, ஆவடி அம்பத்தூர் பகுதியில் இன்றளவும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற தலைவர்கள், அவர்களது வாரிசுகளை நேர்கண்டு அது குறித்த குறிப்புகளை தொடர்ச்சியாக எழுதி, இப்பொழுது அதை தியாக யாத்திரை என்கிற நூலாகவும் கொண்டு வந்திருக்கிறார் எழுத்தாளர் கவிஞர்கே. ஜீவபாரதி அவர்கள்.

நம்மோடு ரத்தமும் சதையுமாக வாழ்ந்து மறைந்த பல தலைவர்கள், இன்றும் நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கிற தலைவர்கள். இவர்களின் தியாகம், சமுதாயத்திற்கான போராட்டங்கள், அர்ப்பணிப்புமிக்க வாழ்க்கை, தொண்டு இதுகுறித்துநாம் அறியாமலே அவர்களுடன் வாழ்ந்து கொண்டிருந்தோம். இப்பொழுதும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஏனென்றால் நமது தோழர்கள் தாங்கள் செய்த தியாகங்களை யாருக்கும் சொல்வதில்லை. அது தற்பெருமையாகிவிடும் என்ற கூச்சத்தால் அமைதியாகி விடுகின்றனர். அதை அறிந்தவர்களும் வெளிப்படுத்துவதில்லை, இதனால் தான் பல வரலாறுகள் யாரும் அறியாமலே மௌனித்து விடுகின்றன. எனவே தான் காலத்தின் தேவையறிந்து, சிறு சிறு வரலாற்று குறிப்புகளோடு இந்நூலை தொகுத்திருக்கிறார். இதை பெரும் நூலாக மேலும் விரித்து எழுத தோழர்கள் முன்வர வேண்டும் என்கிற வேண்டுகோளையும் வைத்துள்ளார்.

நூற்றாண்டுகளை கடந்து நம்மோடு வாழ்ந்து சமீபத்தில் மறைந்த வி. ராதாகிருஷ்ணன சந்தித்து தொடங்கிய இந்த யாத்திரை. வி. ராதாகிருஷ்ணன் இல்லத்தில் காந்தி பிறந்தநாள் கொண்டாட்டத்தோடு நிறைவு பெற்றிருக்கிறது. எப்பொழுதோ வெளிவந்திருக்க வேண்டிய இந்த நூல். வி. ராதாகிருஷ்ணன் மறைவுக்கு பின்னால் அவரது நினைவஞ்சலி நிகழ்விலே வெளியிடப்பட்டிருக்கிறது. இது ஒரு சிறிய நூல் என்றாலும் சிறப்பான நூல். நம்மோடு வாழ்ந்த, வாழ்கின்ற பல தோழர்களைப் பற்றிய நாம் அறியாத பல விவரங்களை உள்ளடக்கிய நூல். அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டுகிறோம்.

– இன்சுவை பாரதி

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : கே. ஜீவபாரதி | |
| பக்கம் | : 86 | விலை: 100 |
| வெளியீடு | : பாவை பப்ளிகேஷன், 16 ஜானி ஜானி ஜான் சாலை, ராயப்பேட்டை , சென்னை – 14 | |

## காக்கையின் குரல்? குறல்? சிறுகதைச் சரம்



சின்ன சின்ன சம்பவங்களை அழகான சிறுகதைகளாக தொகுத்து, காக்கையின் குரல்? குறல்? என்கிற சிறுகதை சரத்தை நூலாசிரியர் ஞா. சிவகாமி நமக்கு அளித்திருக்கிறார். முதல் சிறுகதையே நீரின் அவசியத்தை நமக்கு வலியுறுத்தி உள்ளது. தண்ணீர் மனிதருக்கு மட்டும் அவசியமான பொருள் அல்ல. மாறாக, நம்மை அண்டி வாழும் மரம், செடி,, கொடிகள், பறவைகள், விலங்குகள் உள்ளிட்ட நம்மை அன்டியும், நம்பியும் வாழும் உயிர்கள் அனைத்திற்கும் தண்ணீர் அவசியம். கோடை நமக்கு மட்டும் வருவதில்லை, அனைத்து உயிர்களுக்கும் வரும். எனவே அனைத்து உயிர்களுக்கும் நாம் தண்ணீர் அளிக்க வேண்டியதன் அவசியத்தை முதல் சிறுகதை வலியுறுத்துகிறது.

ஏழைகளின் வாழ்க்கையை வறுமை என்ன பாடு படுத்தும் என்பது அம்மா சிறுகதை உணர்த்துகிறது. தங்கள் வீட்டில் நடைபெறும் விசேஷ காலங்களில் கூட ஏழைகளுக்கு சரியான, முறையான உணவுகள் கிடைக்காது என்பதை இந்த சிறுகதை அழகாக எடுத்துரைக்கிறது. அது அதேசமயம் வறுமை நிலையானது அல்ல, நாம் படித்து வாழ்க்கையில் முன்னேறி வறுமையை வெற்றிகொள்ள முடியும் என்பதையும் இந்த சிறுகதை படிப்போருக்கு நம்பிக்கை ஊட்டுகிறது. இருசக்கர வாகனத்தில் செல்வோருக்கு தலைக்கவசம் எவ்வளவு அவசியம் என்பதையும் நூலாசிரியர் வலியுறுத்துகிறார். பல நல்ல கருத்துக்கள் அடங்கிய பல கதைகள் இதில் உள்ளன.

நாம் வாழ்க்கையில் அன்றாடம் சந்திக்கும் நபர்கள், சந்திக்கும் சம்பவங்கள் இந்த சிறுகதை சரம் முழுதும் நிரம்பி கிடக்கிறது. நாம் அறிந்து கொள்ள வேண்டிய செய்திகளும், மனம் தெளிவு பெற வேண்டிய செய்திகளும் நிரம்பிக் கிடக்கின்றன. எளிய நடையில் எழுதப்பட்டுள்ள இந்த சிறுகதை தொகுப்பை அனைவரும் வாங்கி படிக்க வேண்டுகிறோம்.

–சமரன்

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : ஞா. சிவகாமி | |
| பக்கம் | : 104 | விலை : 100 |
| வெளியீடு | : முல்லை பதிப்பகம், 323/10, கதிரவன் காலனி, அண்ணா நகர் மேற்கு, சென்னை – 40 | |

# மாணவர்களை தாக்கிய நடிகை



என்.எஸ்.பிரதாப் சந்திரன்

சென்னை மற்றும் புறநகர் மாவட்டங்களைச் சேர்ந்த இலட்சக்கணக்கான பள்ளி, கல்லூரி மாணவர்கள் மாநகர பேருந்தில் பயணம் செய்ய வேண்டியிருக்கிறது. அவ்வாறு பயணம் செய்கிறபோது சில நேரங்களில் மாணவர்கள் பேருந்துகளில் அட்டகாசம் செய்வதை நம்மால் பார்க்க முடிகிறது. இதனால் சில சமயங்களில் பேருந்து பயணம் சில நிமிடங்கள் தடைபடவும் நேரிடுகிறது.

மாணவர்கள் பேருந்து படிக்கட்டில் நின்று பயணிப்பது, படிக்கட்டில் தொங்கியபடி பயணிப்பது, காலை சாலையை நோக்கி அகல விரித்தவாறு பயணம் செய்வது . ஜன்னல் கம்பிகளை பிடித்து தொங்குவது, மேற்கூரைகளில் மீது ஏறுவது என சில சமயங்களில் அத்துமீறி சென்று விடுகின்றனர். இப்படி அவர்கள் பயணம் செய்கிறபோது ஏதேனும் விபத்து ஏற்பட்டு அவர்கள் பாதிக்கப்பட்டு விடுவார்களோ என்ற அச்சமும் பதற்றமும் பயணம் செய்கிறவர்களுக்கு ஏற்படுவது இயல்புதான்.

இதனால் அந்த மாணவர்களை பயணிகள் எச்சரிப்பார்கள். சில சமயங்களில் கண்டிக்கவும் செய்வார்கள். ஓட்டுனரும், நடத்துனரும் அவ்வப்போது தலையிட்டு பேருந்துகளை நிறுத்தி மாணவர்களை எச்சரிப்பார்கள். இப்படிப்பட்ட சமயங்களில் மாணவர்கள் பேருந்தின் உள்ளே ஏறி விடுவார்கள். அவ்வாறு ஏறாத மாணவர்கள் இறக்கி விடப்படுவார்கள். சில நேரங்களில் காவல்துறையினர் தலையிட்டு எச்சரிக்கை செய்து பிரச்சனையை முடித்து வைப்பார்கள்.

ஆயிரக்கணக்கான மாணவ, மாணவிகள் பேருந்தில் பயணம் செய்கிற போது, ஏதோ ஒரு சில மாணவர்கள்தான் இது போன்ற அத்துமீறல்களில் ஈடுபடுவார்கள். இவர்களும் சமூகத்தின் கண்டிப்புகளுக்கு பின்னர், அந்த போக்குகளை மாற்றிக் கொள்வார்கள்.

அரசு பேருந்துகளில் பயணம் செய்கிற மாணவர்களின் சமூக, பொருளாதார காரணிகளையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது. அரசு பேருந்துகளில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் பயணம் செய்கிற அவல நிலைமைதான் நமது சென்னை போன்ற பெரு நகரங்களில் உள்ளது. பெண்கள் முதியோர்களுக்கு பேருந்தினுள் இடம் கொடுத்துவிட்டு இயல்பாகவே மாணவர்கள் படிக்கட்டுக்கு வந்து விடுகிறார்கள். சிலர் சினிமா ஹீரோ இசத்தால் கவரப்பட்டு இது போன்ற விரும்பத்தகாத செயல்களில் ஈடுபட்டு விடுகிறார்கள்.

இவர்கள் கண்டிப்புக்குரியவர்கள்தானே தவிர, தண்டிப்புக்கு உரியவர்கள் அல்ல. இந்த மாணவர்கள் ஏதோ வானத்திலிருந்து குதித்து வந்தவர்கள் அல்ல. இவர்கள் நமது வீட்டில் பிறந்து நம்மோடு வாழ்ந்து கொண்டிருப்பவர்கள்தான். இவர்களை நெறிப்படுத்த வேண்டிய பொறுப்பு சமூகத்தில் உள்ள அனைவருக்கும் உள்ளது. அது ஒரு வரம்புக்கு உட்பட்டதாகும்.

ஆனால், ராமநாதபுரம் சமஸ்தான ராஜா பாஸ்கர சேதுபதி பேத்தியும், நடிகையுமான ரஞ்சனா நாச்சியார் என்பவர், தன்னை இந்த காலத்திலும் இளவரசி என நினைத்துக் கொண்டா போலும் . ஏனென்றால் அவர் நாட்டை ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் மாநில பொறுப்பில் உள்ளவர் அல்லவா? அவருக்கு இந்த எண்ணம் ஏற்பட்டதில் நமக்கு வியப்பு ஏதுமில்லை. பேருந்தில் தொங்கிக்கொண்டு சென்ற மாணவர்களை எச்சரித்து பேருந்தின் உள்ளே அனுப்பி இருக்கலாம் அல்லது நெரிசலாக இருந்தால் இறங்கி வேறு பேருந்தில் செல்லுங்கள் என்று சொல்லி இருக்கலாம். அதை விட்டுவிட்டு மாணவர்களை கீழே இழுத்து அடித்து துவம்சம் செய்ய தேவையில்லை .

ஆனால் அவர் மாணவர்களை அடிக்கிறார். மாணவர்களோடு இவர் அதிகாரம் நின்றுவிடவில்லை. அடுத்ததாக பேருந்து ஓட்டுநர், நடத்துனரிடம் சென்று உங்களுக்கெல்லாம் அறிவில்லையா? மாணவர்கள் தொங்கிக் கொண்டே செல்கிறார்கள் உங்களுக்கு புத்தி இல்லையா? உங்களுக்கு குழந்தைகள் இல்லையா? என்று சகட்டுமேனிக்கு திட்டுகிறார். இதன் உச்சகட்டமாக நடத்துநரை பார்த்து ஏண்டா நாயே உனக்கு அறிவில்லையா? என்று வசை மாறிப் பொழிகிறார்.

எவ்வளவு ஆணவம், திமிர் இருந்தால் ஒரு தொழிலாளியை பார்த்து இவர் இவ்வாறு வசைபாட துணிவார். நீங்கள் யார் என்று பொதுமக்கள் கேட்ட போது தான் ஒரு போலீஸ் என்று பொய் சொல்கிறார். இப்படி போலீஸ் என்னும் போர்வைக்குள் ஒளிந்து கொள்ளும் இவர் தான் வீரமங்கையாம் (?). இவர் இந்த சம்பவத்தை ஆள் வைத்து வீடியோ எடுத்து சமூக வலைதளங்களில் பரப்புகிறார். இதன் மூலம் தான் ஒரு சமூக போராளி , அநீதிகளை தட்டி கேட்பவர் என்கிற மாய பிம்பத்தை ஏற்படுத்த முயற்சிக்கிறார். இவரைப் போன்று தனியாக காரில் செல்லும் வாய்ப்பு இருந்தால் அந்த மாணவர்கள் ஏன் பேருந்தில் தொங்கிக் கொண்டு பள்ளிக்கோ, கல்லூரிக்கோ செல்ல போகிறார்கள்? என்கிற குறைந்தபட்ச பொது அறிவு கூட அவருக்கு இல்லை.

இவரது நோக்கம் மாணவர்களை நெறிப்படுத்துவது அல்ல. மாறாக, மாணவர்களின் இது போன்ற செயல்களால் மனம் வெதும்பி இருக்கும் பொதுமக்களிடத்தில் தன்னை வீர மங்கையாக விளம்பரப் படுத்திக் கொள்வது. சமூகத்தின் பொது புத்தியில் உள்ள எண்ணத்தை தனக்கு சாதகமாக மாற்றிக் கொள்வது . அதனால்தான் படம் பிடிப்பவரை கையோடு கூட்டி வந்து படம் பிடித்து சமூக வலைதளங்களில் பரப்பி இருக்கிறார்.

தமிழக சங்கீகள் புதுவிதமாக டிசைன் செய்யப்பட்டுள்ளனர். சொந்தக் கட்சியினர் படுக்கை அறையிலும் படம் பிடிக்கிறார்கள், பஸ்ஸிலும் படம் பிடிக்கிறார்கள்.

இவரின் இந்த செயலை அறிந்து இவர் மீது ஐந்து பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து. இவரை கைது செய்வதற்காக காவல்துறையினர் இவர் வீட்டிற்கு சென்றபோது, கைது செய்ய வாரன்ட் உள்ளதா? என்னை கைது செய்வதற்கு ஆதாரம் உள்ளதா? அத்துமீறி என் வீட்டுக்குள் எப்படி வரலாம் என்று எகிறி குதிக்கும் இவர்.



மாணவர்களை அடிப்பதற்கும். பேருந்தை விட்டு இழுத்து வெளியே தள்ளுவதற்கும் இவருக்கு யார் அதிகாரம் கொடுத்தது?

மாணவர்களை, ஓட்டுநரை , நடத்துனரை, காவல்துறையினரை எல்லாம் கேள்வி கேட்கும் இவர் . கேள்விகளுக்கெல்லாம் அப்பாற்பட்டவரா?. இவருக்கு இந்த அதிகாரத்தை கொடுத்தது அரசியலா? ஒன்றிய ஆளும் கட்சியா? ஜாதியா? பணமா? சினிமா நடிகை என்ற திமிரா?

வட இந்தியாவில் ரயில்களில் தொங்கிச் செல்லும் பயணிகளை என்ன செய்யப் போகிறார் ? பயணிகளுக்கு தேவையான ரயில விடாத சொந்தக் கட்சியினரை இவர் என்ன செய்யப் போகிறார்? இழுத்து அறைவாரா? நாக்கை பிடுங்கும் நாலு வார்த்தை கேட்பாரா?

சட்டத்தை தன் கையில் எடுத்துக்கொள்ளும் கலாச்சார காவலர்கள், நாட்டில் நடக்கிற எல்லா அத்துமீறல்களையும் தட்டிக் கேட்க தயாரா? விவசாயிகளுக்கான கட்டுப்படியான விலை இல்லையே ஏன் தரவில்லை என்று ஒன்றிய அரசின் சட்டையை பிடித்துக் கேட்க தயாரா? இந்திய பொதுத்துறை நிறுவனங்களை எல்லாம் பெரு முதலாளிகளுக்கு தாரைவாக்கப்படுகிறதே அதை தட்டி கேட்க தயாரா? மாணவர்கள் பெற்ற கல்விக்கடனை தள்ளுபடி செய்ய வக்கில்லாத ஒன்றிய அரசு பெரு முதலாளிகள் பெற்ற கடனை தள்ளுபடி செய்கிறார்களே அதை கேட்க தயாரா? சங்கிகளின் நீளும் கரங்கள் எல்லாம் எளிய மக்கள் மீது தானா? அதிகாரத்தில் உள்ளோர் மீதும் நீளாதா?

நடிகை என்பதால் ரஞ்சனா நன்றாக நடிக்கலாம், ஆள் வைத்து படமும் பிடிக்கலாம். ஆனால், உங்கள் படம் தமிழகத்தில் ஒருபோதும் ஓடாது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

தொடர்புக்கு: 9382679798

# ஏஐடியுசி 104 வது அமைப்பு தினம் பாலஸ்தீனம் ஒருமைப்பாட்டு நாள்






**ஏஐடியுசி தொழிற்சங்கத்தின் 104வது அமைப்பு தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு முழுவதும் கொடியேற்றப்பட்டது.**

### நாமக்கல்

ஏஐடியுசி தொழிற்சங்கத்தின் 104ஆம் ஆண்டு துவக்க விழா மற்றும் கருத்தரங்கம் நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வட்டம் சூரியம்பாளையத்தில் ஏஐடியுசி மாவட்ட தலைவர் எஸ்.ஜெயராமன் தலைமையில் நடைபெற்றது.

அரசு போக்குவரத்து சம்மேளனம் துணைப் பொதுச்செயலாளர் என்.முருகராஜ், ஏஐடியுசி மாவட்ட செயலாளர் எஸ்.ராமகிருஷ்ணன், வி.தொ.ச மாவட்ட செயலாளர் சி.ஜெயராமன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் பி.தனசேகரன் வரவேற்புரையாற்றினார்.

ஏஐடியுசி மாநில தலைவர் எஸ்.காசிவிஸ்வநாதன் ஏஐடியுசி வரலாறு குறித்தும் தொழிலாளர் வர்க்கத்திற்காக செய்த தியாகங்கள் குறித்தும் விளக்கி பேசினார்.

ஏஐடியுசி மாநிலச் செயலாளர் எஸ்.சின்னச்சாமி நாமக்கல் மாவட்ட ஏஐடியுசி தொழிற்சங்க வளர்ச்சிக்கு பாடுபட்ட தோழர்களை நினைவு கூர்ந்து பேசினார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் கே.அன்புமணி சிறப்புரை ஆற்றினார். கருத்தரங்க கூட்டத்தில் ஆண்கள் பெண்கள் உட்பட 85 பேர் கலந்து கொண்டனர்.

### தஞ்சை

ஏஐடியூசி 104வது அமைப்பு நாள் நிகழ்ச்சி தஞ்சை மாவட்டத்தில் தஞ்சாவூர், பாபநாசம், கும்பகோணம், பட்டுக்கோட்டை ஆகிய மையங்களில் நடைபெற்றது. தஞ்சாவூரில் மாவட்ட தலைவர் வெ. சேவையா தலைமையில் ஏ.ஐ.டி.யு.சி. தேசிய நிர்வாக குழு உறுப்பினர் சி.சந்திரகுமார் கொடியினை ஏற்றி வைத்து உரையாற்றினார். இந்நிகழ்வில் மாவட்ட பொருளாளர் தி.கோவிந்தராஜன், தெரு வியாபார சங்க மாவட்ட செயலாளர் ஆர்.பி.முத்துகுமரன், ஓய்வு பெற்றோர் சங்க பொதுச் செயலாளர் பி.அப்பாத்துரை, அரசு போக்குவரத்து சங்க கௌரவ தலைவர் கே.சுந்தரபாண்டியன், டாஸ்மாக் சங்க மாவட்ட செயலாளர் எஸ்.கோடீஸ்வரன், தலைவர் எம்.பாலவடிவேலன் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### கோவை

கோவை காட்டூரில் உள்ள மாவட்ட ஏ ஐ டி யூ சி சங்க அலுவலகத்தில், கொடியேற்று விழா நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சிக்கு கோவை மாவட்ட பொறியியல் பொதுத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் கே.எம். செல்வராஜ் தலைமை தாங்கினார். ஏ ஐ டி யூ சி மாநிலத் துணைத் தலைவர் எம்.ஆறுமுகம் எக்ஸ். எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். மாவட்ட கவுன்சில் பொதுச் செயலாளர் சி.தங்கவேல், கோவை ஜில்லா மில் தொழிலாளர் சங்க செயலாளர் சி.சிவசாமி, மாமன்ற உறுப்பினர் சாந்தி சந்திரன், டெம்போ டாக்சி வேன் தொழிலாளர் சங்க மாவட்ட பொதுச் செயலாளர் கே.வெங்கடாசலம், டிரான்ஸ்போர்ட் யூனியன் செயலாளர் சண்முகம், வங்கி ஊழியர் சங்க செயலாளர் எஸ்.மீனாட்சி சுந்தரம், இன்சூரன்ஸ் தொழிலாளர் சங்க செயலாளர் கோபாலகிருஷ்ணன், மதுக்கரை ஒன்றிய செயலாளர் கே.ஆர். தங்கராஜ், மேற்கு மண்டல செயலாளர் என்.சந்திரன், மத்திய மண்டல துணைச் செயலாளர் ஏ.பி.மணிபாரதி, இ.ஏ.பூபதி உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

### தருமபுரி

தமிழ்நாடு ஏஐடியூசி தருமபுரி மாவட்ட. க்குழு சார்பில், ஏஐடியூசி அமைப்பு தின கொடியேற்றும் விழா மற்றும் கருத்தரங்கம் தருமபுரி தொலைபேசி நிலையம் முன்பு மாவட்டத் தலைவர் முருகன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட துணை செயலாளர் என்.மனோகரன் வரவேற்றார். மாநில தலைவர் காசி. விஸ்வநாதன் சங்க கொடி ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் எஸ்.தேவராசன், மாவட்ட துணைச் செயலாளர்கள் கா.சி.தமிழ்க்குமரன், எம்.மாதேஸ்வரன், ஏஐடியூசி மாவட்ட பொது செயலாளர் கே.மணி வாழ்த்தி பேசினார்கள். நிகழ்ச்சியில் விதொச மாநிலக்குழு உறுப்பினர்கள்சிவன், மாதையன், அல்லிமுத்து, கலை இலக்கிய பெருமன்ற மாவட்ட செயலாளர் சின்னக்கண்ணன், நிர்வாகிகள் சுதர்சனன், நடராஜன், முருகன், ஏ.சி.மணி, நாகராசன், செல்வி, பார்த்தீபன், கந்தசாமி, தீபா உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### செங்கல்பட்டு

ஊரப்பாக்கத்தில் ஊரக உள்ளாட்சி சங்கம் மாவட்டச் செயலாளர் ஏ. வரதன் கொடியேற்றினார். மறைமலை நகர் விர்கோ பாலிமர் ஆலை வாயிலில் சங்கச் செயலாளர் வி.குமரவேல் கொடியேற்றி வைத்தார்.

### மதுரை

ஏஐடியுசியின் 104வது அமைப்பு தினம் கருத்தரங்கமாக மதுரை மாவட்ட ஐக்கிய பஞ்சாலை தொழிற்சங்கம் சார்பில் கொண்டாடப்பட்டது.

பஞ்சாலை சங்கத்தின் செயலாளர் இரா.முருகன் தலைமை வகிக்க, ஏஐடியூசி மதுரை மாவட்ட தலைவர் எம்.நந்தாசிங், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் எம்.எஸ். முருகன், பஞ்சாலை சங்க நிர்வாகி எஸ்.செல்வமுத்துகுமரன் கருத்தரங்கில் பேசினர்.

இந்தியக் கம்யூ.,கட்சியின் மதுரை மாநகர் மாவட்ட துணை செயலாளர் சி.தாமஸ் ,இஸ்கப் மாவட்ட செயலாளர் இரா.ஜெயராமன், மாதர் சங்க மாவட்ட செயலாளர் பா.ராஜலெட்சுமி, மதுரை மாவட்ட அப்பள தொழிலாளர்கள் சங்கத்தின் பாலமுருகன், ஜனசக்தி என்.ஜீவா உட்பட தோழர்கள் பலர் பங்கேற்றனர்.

திருப்பரங்குன்றம் அலுவலகம் அருகில் குருதாஸ் தாஸ் குப்தா படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டது. ஏஐயுடிசி மாவட்ட பொதுச் செயலாளர் கே. சேது சங்கக் கொடியேற்றினார். சிபிஐ மாவட்ட செயலாளர் பி. முத்துவேல், ஏஐயுடிசி கௌரவத் தலைவர் எஸ். தினகரமோகன், திருப்பரங்குன்றம் ஏஐயுடிசி செயலாளர் டி. பாலகிருஷ்ணன் இந்திய மாதர் தேசிய சம்மேளன மாவட்ட செயலாளர் கே.நாகஜோதி திருப்பரங்குன்றம் ஒன்றிய விவசாய சங்க செயலாளர் பி. மகாமுனி ஆகியோர் பங்கேற்றனர். பாலஸ்தீன ஒருமைப்பாடு உறுதிமொழி எடுக்கப்பட்டது


இதுபோல் திருமங்கலம் சந்தைப்பேட்டையில், கடை வியாபாரிகள் சங்க கொடி ஏற்றப்பட்டது.கீழக்கோட்டையில், குராயூரில் கொடியேற்றப்பட்டது.

ஹார்விபட்டி, திருப்பரங்குன்றம், திருநகர் பேருந்து நிறுத்தம் 1, பேருந்து நிறுத்தம் 2, பேருந்து நிறுத்தம் 3 ஆகிய இடங்களில் ஆட்டோ சங்க மாவட்ட பொதுச் செயலாளர் ஷி. சித்திக் கொடி ஏற்றி வைத்தார்.

அலங்காநல்லூர் ஆட்டோ நிறுத்தம், பாலமேடு ஆட்டோ நிறுத்தம் ஆகிய இடங்களில் சங்கக்கொடியை கட்சியின் மாநில கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினருமான காளிதாஸ் ஏற்றி வைத்தார்.

அலங்காநல்லூர், கோடாங்கிபட்டி, வெள்ளயம்பட்டி, முடுவார்பட்டி, அ.புதுப்பட்டி, கொண்டையம்பட்டி ஆகிய இடங்களில் கட்டுமானச் சங்க இருளாண்டி ஏஐடியுசி மாவட்ட அமைப்புச் செயலாளர் சி.தாமஸ் சங்கக் கொடியை ஏற்றி வைத்தனர்.

கோவிலூரில், பெரிய ஊர் சேரி, சோழவந்தான், மேலூர், மதுரை ஜீவா நகர், மதுரை பஞ்சாலை சங்கம், பொன்னகரம் இரண்டாவது தெரு, மதுரை பஞ்சாலை சங்கத்தில் பஞ்சாலை சங்க மாவட்ட பொதுச் செயலாளர் இரா. முருகன் தலைமையில் கருத்தரங்கம் நடைபெற்றது. மாவட்ட சங்க நிர்வாகிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர். போக்குவரத்துக் கழக ஏஐயுடிசி அலுவலகத்தை சங்க செயலாளர் நந்தா சிங் தலைமையில், வழக்கறிஞர் கு.சாமிதுரை திறந்து வைத்தார். சங்க நிர்வாகிகள் மற்றும் சங்கத் தோழர்கள் பங்கேற்றனர்.



JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 11.11.2023 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

# பாட்னாவில் பிரம்மாண்ட பேரணி

# ஒரு தொகுதியில் கூட பாஜக வெல்லக் கூடாது!

## டி.ராஜா முழக்கம்

“பிஜேபியை வெளியேற்றுவோம்! நாட்டை தேசத்தை காப்பாற்றுவோம்“ என்ற முழக்கத்தை முன்வைத்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நவம்பர் 3ம் தேதி, பல லட்சக்கணக்கான பங்கேற்ற பிரம்மாண்டமான பேரணியை நடத்தியது.

இதில் ஐக்கிய ஜனதா தளம், ராஷ்ட்ரிய ஜனதா தளம், காங்கிரஸ், சிபிஎம், சிபிஎம்எல் ஆகிய கட்சிகளின் தலைவர்களும் கூட்டத்தில் பேசினார்கள். அவர்களது உரையின் சுருக்கம் வருமாறு:

**டி.ராஜா, பொதுச் செயலாளர்**

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பாஜகவை ஆட்சியில் இருந்து அகற்ற வேண்டும். மக்களைப் பற்றி சிந்திக்கிற அரசு 2024ல் நிறுவப்பட வேண்டும். ஏழைகளின் நலன்களைப் பற்றி மோடி அரசு கவலையே படவில்லை. ஒடுக்கப்பட்ட மக்கள், பழங்குடியினர், பிற்பட்ட சமூகங்களை இந்த அரசு அலட்சியப்படுத்துகிறது. ஏழைகளின் வாழ்வாதாரம், வேலைவாய்ப்பு, உணவு, உடைகளை வழங்குவது என்பது மோடி அரசின் கவனத்திலேயே இல்லை. விலைவாசி ஏறிக்கொண்டே செல்கிறது.

ஆர்எஸ்எஸ் தான் நரேந்திர மோடி அரசாங்கத்தின் முதலாளி ஆகும். அதன் சித்தாந்தத்தில் தான் அந்த அரசு இயங்குகிறது. அரசியல் சாசனத்தையும் ஜனநாயகத்தையும் காப்பாற்ற வேண்டும் என்றால், மோடி அரசை அகற்றுவதைத் தவிர வேறு வழி இல்லை. அதற்குரிய வழியில் எதிர்க்கட்சிகள் ஒன்று பட வேண்டும். சாதிவாரி கணக்கெடுப்பை செய்ததன் மூலம் பீகார் அரசு ஒரு நல்ல பணி ஆற்றியிருக்கிறது. அது நாடு முழுமையும் நடத்தப்பட வேண்டும்.

ஆர்எஸ்எஸ் பிஜேபி நாட்டை அழித்துக் கொண்டு இருக்கிறது. பொதுத்துறை நிறுவனங்கள் தனியார் பெரும் முதலாளிகளுக்கு விற்கப்படுகின்றன. ரூபாயின் மதிப்பு வீழ்ந்து கொண்டே இருக்கிறது. “இரட்டை எஞ்சின்” அரசு இருந்தும் கூட மணிப்பூர் பற்றி எரிந்து கொண்டே இருக்கிறது. ஐந்து மாநிலங்களிலும் பிஜேபியை தோற்கடிக்குமாறு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அறைகூவல் விடுக்கிறது.

பீகாரில் மகா கூட்டணி உருவாக்கப்பட்ட பிறகு பிஜேபி அஞ்சத் தொடங்கியுள்ளது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒவ்வொரு உறுப்பினரையும் அவர்தம் குடும்பத்தினரையும் நான் கேட்டுக்கொள்கிறேன். நாடாளுமன்றத் தேர்தலில் ஒரு தொகுதியில் கூட பிஜேபி வெற்றி பெறாமல் முறியடிக்க வேண்டும்.

**அமர்ஜித் கவுர், தேசிய செயலாளர்**

ஆர்எஸ்எஸ் பிஜேபி எப்போதுமே அரசியல் சாசனத்தையும் மூவண்ணக் கொடியையும் அவமதித்தே வந்துள்ளனர். மோடியின் அரசு ஏழை மக்களுக்கானது அல்ல. அது கார்ப்பரேட்டுகளின் முகவராக உள்ளது. பட்டினியை இந்த அரசு அதிகரித்துள்ளது. புதிய வேலைவாய்ப்புகள் உருவாகாதது மட்டுமல்ல, ஏற்கனவே இருந்த வேலைகளும் பறிக்கப்பட்டுள்ளன.

ஆர்எஸ்எஸ் பிஜேபிக்கு இந்திய விடுதலைப் போராட்டத்தில் எந்த பங்களிப்பும் இல்லை. ஏழைகளுக்கு மட்டுமல்ல இந்த நாட்டுக்கே மோடி அரசு எதிரியாகும்.

**ராமகிருஷ்ணா பண்டா, தேசிய செயலாளர்**

மோடி அரசு கல்வியையும்




மருத்துவத்தையும் வணிகப் பொருள்களாக மாற்றிவிட்டது. விவசாயிகளின் நிலம் பறிக்கப்பட்டு கார்ப்பரேட்டுகளின் கையில் கொடுக்கப்படுகிறது. இது அதானி அம்பானி அரசு ஆகும்.

**ராம் நரேஷ் யாதவ், மாநிலச் செயலாளர்**

“பிஜேபியை வெளியேற்றுவோம் நாட்டை பாதுகாப்போம்“ என்ற இயக்கம், கடந்த ஆறு மாதங்களாக பீகாரில் நடந்து வருகிறது. மார்ச், ஏப்ரல் மாதங்களில் கிராமம் கிராமமாக நமது தோழர்கள் பரப்புரை செய்தார்கள். ஜூன் மாதத்தில் மறியல் போராட்டம் நடைபெற்றது. மாவட்ட தலைநகரங்களில் மறியல் செய்து ஒன்றரை லட்சம் தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்தப் பேரணி மூன்றாவது கட்டமாகும். இந்தக் கடும் வெயிலிலும் லட்சத்துக்கு மேற்பட்ட தோழர்கள் குடும்பம் குடும்பமாக இங்கு கூடியிருக்கிறீர்கள். பீகார் கட்சி செயலற்று நிற்காது. வரும் நாட்களில் போராட்ட வடிவங்கள் இன்னும் ஆழம் பெறும்.

**லாலன் குமார் சவுத்ரி, CPI(M) மாநிலச் செயலாளர்**

முதலில் பீகார் தனது பாதையை திருத்தி அமைத்தது. இப்போது நாட்டிலும் திருப்பத்தை ஏற்படுத்த வேண்டும். பிஜேபி அரசு, அரசியல் சாசனத்தையும் நீதிமன்றங்களையும் அழிக்கிறது. வங்கிகளும், காப்பீடு நிறுவனங்களும் தனியாரிடம் தரப்படுகின்றன. விவசாய தொழிலாளர்களின் நிலை அவலமாக உள்ளது. மோடி அரசின் எல்லா முடிவுகளும் முதலாளிகளுக்கு மட்டுமே சாதகமானதாக உள்ளன. இனியும் இதை ஆட்சியில் தொடர அனுமதிக்கக் கூடாது.

**தொகுப்பு: டி.எம்.மூர்த்தி**

## நாங்கள் சோஷலிஸ்ட்டுகள் நீங்கள் கம்யூனிஸ்டுகள் ஒன்றுபட்டு முன்னேறுவோம்: பீகார் முதலமைச்சர் நித்தீஷ் குமார்

பேரணியில் பீகார் முதலமைச்சரும் ஐக்கிய ஜனதா தளத்தின் தலைவருமான நிதிஷ்குமார் பேசினார்.

தற்போது ஐந்து மாநில தேர்தலில் காங்கிரஸ் கட்சி சுறுசுறுப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தியா கூட்டணி பற்றி காங்கிரஸ் கட்சி குறைந்த கவனம் செலுத்துகிறது. இந்தியாவின் வரலாற்றையே அழிக்க நினைப்போரிடமிருந்து நாட்டைப் பாதுகாக்க அனைவரும் ஒன்றுபட்டுத் தீர வேண்டும். இந்த நாட்டின் விடுதலையோடு எந்த தொடர்பும் இல்லாத பிஜேபி, காந்தியடிகளை மக்களின் நினைவுகளிலிருந்து அகற்ற முயற்சிக்கிறது. நாம் அனைத்து எதிர்கட்சிகளிடம் பேசி ஐக்கியப்பட வேண்டும் என வலியுறுத்தி இருக்கிறோம். எதிர்க்கட்சிகளின் கூட்டம் பல்வேறு இடங்களில் நடைபெற்று, இப்போது இந்தியா கூட்டணி உருவாகி இருக்கிறது.

சிலர் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே பிளவை ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள். இந்துவுக்கும் முஸ்லிமுக்கும் இடையில் என்ன பிரச்சனை? எதுவும் இல்லை. பீகாரில் அத்தகைய முயற்சிகளை அனுமதிக்க மாட்டோம்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியோடு எங்களுக்கு நீண்ட கால உறவு இருக்கிறது. 1987ல் சட்டப்பேரவைக்கு போட்டியிட்டபோது சிபிஐ, சிபிஎம் இரண்டும் எங்களை ஆதரித்தன. நாங்கள் சோஷலிஸ்ட்டுகள்; நீங்கள் கம்யூனிஸ்டுகள் இருவரும் ஒருவரை ஒருவர் மதிக்கிறோம். நாம் ஒன்றுபட்டு முன்னேற வேண்டும்.

ஆண்கள் மட்டும் இல்லாமல் ஏராளமான பெண்கள் உங்கள் கட்சியில் இருக்கிறார்கள். இந்த பேரணியில் இவ்வளவு பெரும் எண்ணிக்கையில் பெண்கள் பங்கேற்று இருப்பது குறித்து நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இதற்கு என்னை அழைத்தமைக்காக நன்றி தெரிவிக்கிறேன். இந்த நாட்டின் நலனுக்காக நாம் ஒன்று சேர்ந்து பணிபுரிவோம்.

**தேஜஸ்வி பிரசாத் யாதவ்,**
**பீகார் துணை முதலமைச்சர், ராஷ்ட்ரிய ஜனதா தளத் தலைவர்**

பணவீக்கம் ஒரு பிரச்சினையாகவே மோடிக்கு தெரியவில்லை. அதை அவர் நேசிக்கிறார் போலும். பீகாரில் இந்த அரசு உருவானதிலிருந்து அரசுப் பணிகளில் காலியான இடங்களுக்கெல்லாம் பணியாளர்களை நியமித்துக் கொண்டே இருக்கிறோம். இந்து முஸ்லிம் என்று சண்டையிட்டுக் கொண்டிருந்தவர்கள், ஒன்று சேர்ந்து இப்போது வேலை வாய்ப்புக்காக போராடுகிறார்கள். இப்போதுதான் மக்களின் உண்மையான பிரச்சனைகள் விவாதத்திற்கு வந்துள்ளன. ஐந்து மாநில தேர்தல்கள் முடிந்ததற்கு பின்பு, மீண்டும் அனைவரும் அமர்ந்து வலுமிக்க கூட்டணியை உறுதிப்படுத்துவோம்; உரிய உத்திகளை வகுப்போம்.

வெகு சீக்கிரத்தில் பீகாரின் அரசியல் தலைவர்கள் வீட்டுக்கு மத்திய புலனாய்வுத்துறை, அமலாக்கத்துறை, வருமான வரித்துறை எல்லாம் படையெடுக்கும்.

எந்த மாநிலங்களில் எல்லாம் பிஜேபியால் வெற்றி பெற முடியவில்லையோ, அங்கெல்லாம் இந்த துறைகள் வேட்டைக்கு அனுப்பப்படும். மத்திய பிரதேசத்தில் இதுதான் நடந்தது. ஆனால் அந்த மக்கள் பிஜேபி யின் முகத்தில் அறைந்து மகா கூட்டணியை வெற்றி பெற வைத்தனர். இந்த அரசு இரண்டு நபர்களுக்காக மட்டுமே வேலை பார்க்கிறது.

**மீனா திவாரி, CPI(ML) அரசியல் தலைமை குழு உறுப்பினர்**

வறுமையும் பட்டினியும் நாட்டில் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன.. 60 சதவீதத்துக்கு மேற்பட்ட பெண்கள் ஊட்டச்சத்து இல்லாமல் ரத்த சோகைக்கு ஆட்பட்டு உள்ளனர். ஜனநாயகத்தையும் அரசியல் சாசனத்தையும் காப்பாற்றுவதற்கு மக்கள் பெரும் போரில் இறங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.



Janasakthi Tamil Weekly Published by R. Mutharasan and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: K.Subbarayan ., Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by A.Sivakumar at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.